சிவமயம்.

# திருநாவுக்கரசுநாயனார்

## சரித்திரம்.

இஃது

கோயமுத்தூர்

வி. கனகசபாபதிமுதலியாரால்

இயற்றப்பட்டு,

சென்னை:

வே. நா. ஜூபிலி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1899.

(All rights reserved.)

# முகவுரை

சைவசமயாசாரியர்களாகிய நால்வருள் ஒருவர் திருநாவுக்கரசர் என்பவர். அவர் சிறந்தையும் செயல்களையும்பற்றி யறிதல் சைவர்களான நம்மவர்கட்கெல்லாம் இன்றியமையாததென்பது யாவர்க்குந்தெரிந்ததே. அவர் சரித்திரமானது ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகளால் பெரியபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் அது தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியுள்ள பெரியோர்க்கும் அரிதிற் புலப்படக்கூடிய செய்யுணடையிலிருத்தலாற் சாமானியர்கட்கு எளிதில் விளங்காமையின் அப்படி விளக்கும் ஒருநூல் இருத்தலவசியம். தமிழுலகத்திற்குப் பேருபகாரம் புரிந்த ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் இக்குறைவை நிவர்த்தித்ததும் யாவரும் அறிந்ததே. அவர் செய்த பெரியபுராணவசனத்தில் பெரியபுராணத்தில் சொல்லிய அடியார்கள் சரித்திரத்தையெல்லாம் கூறவேண்டுதலின் அவர் அப்புராணத்தைவிடச் சுருக்கி யியற்றினர். நான் இப்போது நமது திருநாவுக்கரசின் சரித்திரத்தை யப்பெரியபுராணத்திலுள்ளபடி ஒவ்வொரு செய்யுட்களின் பொருளையுமமைத்து ஒருநூல் செய்

யின் அது அச்சேக்கிழார் பெருமானுடைய பெருமை யையும் அவராற் சொல்லப்பட்ட அவ்வடியார் பெருமையையும் நன்குவிளக்குமென்று நினைத்து இச்சரித்திரத்தை அவ்வாறே எனக்குத் தெரிந்தவளவில் எழுதலானேன். ஆனால் இதில் அச்சேக்கிழார்பிரான் 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்பாடிய' அருமைகளெல்லாம், வசனநடையில் எழுதும்போது சிதைந்து விடுமென்றாலும், அதன் பொருளமைதியேனும் சிதையாமல் வெளிப்படும் என்று நினைக்கிறேன். இது என் முதன்முயற்சியானதுபற்றிக் குற்றம் குறைகள் இருக்கினும் பெரியோர் அதுபற்றி யிகழாது அவற்றை யெனக்குக் காண்பித்து என்னைத் திருத்தி யுபகரிப்பார்களாக.

☞ வீ. கனகசபாபதி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசுநாயனார் சரித்திரம்.

"திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணாமை யுணராதேன்."

ஸ்ரீசேக்கிழார் பெரியபுராணம்.

பழமையாகிய சன்மார்க்க வொழுக்கத்தின் நன்மைசிறக்கப்பெற்ற குடிகள் நிறைந்து, மேலே சந்திரனைத் தாங்கும்படி உயர்கின்ற அழகிய மாடங்களையுடையனவும், மண்ணின்றுகளேயன்றி வேறு துகளில்லாதனவுமாகிய செழும்பதிகள் நிலைபெற்று நிறைந்து வளம் பொருந்தியது திருமுனைப்பாடிநாடு என்பது. அழகிய மணிகளையும் வாசனையுள்ள புதுமலர்களையும் அடித்துக்கொண்டுவரும் அளவில்லாத அலைகளோடுகூடிக் கரையிலுள்ள வயல்களில் நீண்டஏர்பூட்டி உழும் பள்ளர்சப்தத்தையும் அடங்கச்செய்துலவுகின்றதும், எல்லாவுலகங்களும் தன் அழகை நினைந்து துதிக்குந் தன்மையையுடையதும் ஆகிய காவிரியாறு

பாயப்பெற்று அந்நாடானது வளப்பம் மிகுந்துள்ளது. அந்நாட்டிலுள்ள வாய்க்கால்களிலெல்லாம் வரால்மீன்கள் நிறைந்துள்ளன. அவ்விடத்தில் பயிரிட்டிருக்கும் கரும்புகள் தேனைப்பொழிந்து நிற்கின்றன. பக்கத்தேயுள்ள வயல்களிலெல்லாம் உயர்ந்த நெற்பயிர் நிறைந்துள்ளது. அதன்புடையில் குலைகள்மலிந்த கமுகுகள் நிரம்பியுள்ளன. தடாகங்களில் செங்கழுநீர்ப் பூக்கள் மலிந்துள்ளன. மேலிடமெங்கும் அகிற்புகை கவிந்துள்ளது. திருந்திய வீடுகள்தோறும் விருந்தினர் நிறைந்துள்ளார்கள்.

அந்நாட்டின் ஊர்களில் வயல்களிலுள்ள கரும்பை வெட்டியதால் அவைபொழியும் கருப்பஞ்சாறுனது, அக்கரும்புகளினிடையிலே கட்டியிருந்த தேன்கூடுகள் கிழிதலாற் சிந்தி ஒழுகும் தேன்பெருக்கத்தோடு சேர்ந்து, புதுநீர்வெள்ளம் வந்ததுபோன்று மடைகளையுடைக்க அவ்வுடைப்பைக் கருப்பங்கட்டியினாலடைக்கின்றார்களென்று சொல்லத்தக்கதாய்கரும்புசெழித்து வளர்ந்து மலிந்துள்ளது. மேலும் அந்நாட்டில் வாழையின் கரிய பெரிய நீண்டகுலைகள் யானைமுகத்தைப் போன்றும், அவற்றின் பக்கத்தே விளைந்த நெற்கதிர்களானவை வெற்றியுடைய குதிரைமுகத்தைப்போன்றும்,பெரியவண்டிகள் தேரைப்போன்றும், வேலையாட்களின் ஓசை போர்வீரரின் ஓசையைப் போன்றும் இருத்தலால் இவற்றிற்கிடமாகிய மருதநிலமானது சதுரங்கங்களோடுகூடிய சேனை பலவற்றை யொத்திருந்தது. நவமணிகளழுத்திய ஆபரணங்களையுடைய

கழுத்தின் பாரத்தோடு கூந்தற் பாரத்தையுந் தாங்காது வருந்தும் பெண்களைப்போலத் தேன்பொருந்திய கமுகுகள் அலையும் சோலைகளின் வெலிப்பக்கங்களி லெல்லாம் வண்டுகள் சப்திக்கும் பெரிய வயல்களிற் பாயும் நீரானது ஏறிச்சென்று மணிகளைச் சொரிந்து நிறைக்கும்.

அலைகளையுடைய பெரியதடாகங்கள், பெரியகடலின் நீர்கொள்ளப்படியும் கரிய மேகங்களைப்போல தம்மிலுள்ள பூக்களை மேயும்பொருட்டுவந்த எருமைக் கூட்டங்களின் மடியை, அவற்றின் கன்றுகள்போலப், பருத்துச் செவ்விய கண்களையுடைய பெரியவரால்மீன்கள் முட்டுவதால் அவை பால்சொரிவதற்கிடமாயிருக்கும் கரையையுடையனவாம். வண்டுகள் மொய்க்கப் பெற்ற நீலோற்பலங்கள் கண்களைப்போலவும், செழும்பூக்களின் அகவிதழ்கள் சிவந்த கைவிரல்கள்போலவும் இருக்கப்பெற்ற பூமியென்னும் பெண்ணானவள், தன்மேனியழகைக்காணவேண்டிச் சந்திரனைக்கண்ணாடியென்றுநினைத்துக் கையிலேபற்றுகின்றாளோ என்று சொல்லும்படியாக அங்கேயுள்ள சோலைகள் உயர வளர்ந்திருக்கின்றன. மதில் சூழ்ந்து வளமிருந்த ஊர்களிலெவ்விடங்களிலும் வாசனைவீசும் வயல்கள் பரந்துநிறைந்துள்ளன. அவ்விடங்களில் உயர்ந்த நெற்போர்களும், ஒளிவீசும் ஆபரணமணிந்த பெண்கள் உலாவப்பெற்ற மாடங்களும் மிருந்து, அப்பெண்கள் சாயலையும், கூந்தலையும் நேரும்படியாக மயிற்கூட்டங்களும் முகிற்கூட்டங்களும் ஆடியசைந்துசஞ்சரிக்கின்

றன. பாவத்திற்கேதுவாகிய புறச்சமயங்கள் எல்லாம் பாழ்பட்டு நீலகண்டேசராகிய சிவபெருமானை வழி படும் உண்மைமார்க்கமாகிய சைவசமயம் விருத்தி யாகும்படி உலகுக்குபகரித்த சைவசமயாசாரியர்களா கிய திருநாவுக்கரசுநாயனூர் சுந்திரமூர்த்திநாயனூர் என்ற இருவரும் பிறத்தற்கிடமா யிருந்தது இந்தத் திரு முனைப்பாடிநாடு என்றுசொன்னூல் அந்நாட்டின் சிறப் பைப் பேசுந்திறம் நம்மளவினதோ? அன்று. இத்தன் மையதான திருநாட்டிலே உள்ள எல்லா நகரங்களும் எக்காலத்தும் நிரந்தரமான வளப்பங்களோங்கிய மே ன்மையை யுடையன. அந்நகரங்களிலொன்று சைவத் தை ஏழுலகங்களிலும் நிலைநாட்டுந் தன்மையினுலே தெய்வமார்க்கமாகிய சிவத்துவம்பெருகும் திருவாமூர் என்பது. இக்காரணத்தால் இது அவற்றுளெல்லாம் உண்மையிலேயே திரு ஆகின்ற, அதாவது இலட்சுமி அல்லது செல்வமிருந்த ஊராயிருந்தது.

அவ்வூரில் பெண்களின் இடையானது அவர்க ளுடைய அழகுவாய்ந்த முலைகளைச் சுமந்து வருந்து வன; நூபுரமுதலிய ஆபரணங்கள் சப்தித்துக் கொண் டுள்ளன; மாடங்கள் வரிசைவரிசையாய் ஓங்கி யுயர்ந் திருந்தன; குற்றமற்ற தர்மங்கள்யாவும் நிலைபெற்று வந்தன; துன்மார்க்கங்கள் யாவும் அங்கிருந்து நீங்கி யிருந்தன; மேலும் அவ்வூரில் பெரியகுடிகள் நெருங்கி வசிப்பார்கள். நீலோற்பலங்கள் வயல்களிலே மலர்ந் திருக்கின்றன. மலர்களாலலங்கரித்த மறுகுகளில் மணியிழைத்த ஊஞ்சல் பலவுள்ளன; விடியற்காலத்

திலே உழுவருடைய சப்தமானதுகேட்கும். ஆபரணங்கள் மிகுந்துள்ள வீடுகளிலே எல்லையில்லாத பெரிய வளங்களெல்லாம் நிறைந்துள்ளன. பூமியிலே சிறந்து விளங்கியதாகிய அந்தத் திருப்பதியிலே எல்லாவித நன்மைகளும் நிறைந்து நன்னெறிவழுவாத மரபிலே விதிப்படி இல்வாழ்க்கையை மேற்கொண்டு, குலமேம்பாடு பொருந்திப் பெருமை வாய்ந்ததாகிய குறுக்கையர்குடி விளங்கியது.

அந்தக்குடியிலே மிகமேன்மைபெற்றவரும் இல்லறத்திலே வழுவாது நடந்து விருந்தினரை எப்போதும் உபசரித்துதவும் மேன்மையையுடையவரும் மேன்மேல்வளருஞ் சுற்றத்தாராலேசூழப்பட்ட சிறப்புடையவரும் எல்லாத் திசைகளிலும்பரந்த பெருமையையுடையவருமாகிய புகழனார் என்பவர் ஒருவரிருந்தார். அந்தப் புகழனார் தமக்கு உரிமையாய்க் குற்றமற்ற நற்குடியிலேபிறந்த மாதினியார் என்னும் அம்மையாரை மிகமகிழ்ச்சிக்குக் காரணமாக மணம்புணர்ந்தனர். அந்த மாதினியார் வயிற்றினிடமாகச், செந்தாமரைமலரின் இதழ்களின் நடுவில் பொகுட்டின்மேல் அழகுபெற வீற்றிருக்கும் இலக்குமியைப் போலத் திலகவதியார் என்னும் பெண்கள்நாயகமொன்று பிறந்தது. இத்திலகவதியார் பிறந்து சிலவருஷங்கள் கழிந்த பிறகு அளவில்லாத கல்வித்துறைகளெல்லாந் தழைக்கும்படியாகவும் அரிய தவமார்க்கங்களெல்லாம் வாழும்படியாகவும் உலகிற் பரந்தவிருளை நீக்கும் சூரியன் போல அஞ்ஞானவிருளைப்போக்குந் தன்மையராகிய

மருணீக்கியார் திருவவதாரஞ் செய்தருளினார். புகழனுருக்குப் புத்திரராய், மாதினியாரின் திருவயிற்றினிடமாய் இம்மருணீக்கியார் திருவவதாரஞ் செய்தபிறகு செய்யவேண்டிய மங்கலச் சடங்குகளையெல்லாம் முறையாகச் செய்துமுடித்தார்கள். குற்றமற்ற பலசுற்றத்தார்களெல்லாம் மிகப்பாராட்டிப் புகழும்படி மருணீக்கியார் இளங்குழந்தைப் பருவங்கடந்து மேற்பருவத்தைச் சேர்ந்தார். இவ்வுலகத்திற் பலரும் மகிழும்படியாக அம்மருணீக்கியாருக்கு சௌளமாகிய சுபசடங்கைச்செய்து அதன்பின், மலராத பூவைப்போல கட்டுண்டு சுருண்டு ஒன்றும் அறியாமலிருக்கும் மனதைப் பூமலர்வதைப்போல விரியச்செய்து அறிவைக்கொடுக்கவல்லதாகிய வித்தியாரம்பஞ் செய்வித்தார்கள். தந்தையாருக்கு மிக மகிழ்ச்சியுண்டாகும்படியாக, மனத்தை மலர்வித்து அறிவைப்புகட்டும் செழுமைவாய்ந்த சாஸ்திரங்களையெல்லாம் முன்சென்மத்திலேயே கற்று வந்தவராதலாலே அதை நிறைவிக்கும்படி மிகவிரைவிலே அறிவு வளரும் வகை அம்மைந்தராகிய மருணீக்கியாரும் பெருமானுடைய வருளினாலே, (தனக்கேற்பட்ட சாபத்தை யொழித்து மீளவும் வளரும் தன்மைபெற்று மேன்மேல் வளர்ந்துவந்த) பிறைபோல வளருவாராயினார். அப்படி வளருநாளிலே திலகவதியாருக்குப் பனிரண்டு வயதாக, அவர்கள் குடிக்கொத்த குலத்தினரும், வேளாளர்களுக்கே தலைவர்போன்றவரும், பிரகாசம்பொருந்திய சிவந்த சடாபாரத்தையுடைய சிவபெருமானிடத்தே மெய்யன்புடைய அடிமைத்திறத்தி லாசைகொண்டவரும் பொற்

கிரீடந்தரித்த அரசனிடத்தே அருள்கொண்டு அவன் வினையிலமர்ந்து போர்த்தொழிலில் வலிமைவாய்ந்த ஆண் சிங்கத்தைப்போல வீரமுள்ளவரும் யாவரும் விரும்பிக் காணத்தகுந்த அழகுடையவருமாகிய கலிப்பகையாரென்பவர் இல்லார்க்களிக்கு மீகையையுடையாராகிய புகழனாருடைய ஒப்புயர்வில்லாத மகளைமணம்புரிய வேண்டுமென்னும் ஆசையினால் பெண்கேட்டு நிச்சயிக்கும்படி யவரிடத்தில் சில பெரியோரைப் பெண்பேசவிடுத்தார். இலட்சுமியைப்போன்ற திலகவதியம்மையை பெண்கேட்கவந்த பெரியோர்களும் தாம்வந்த விஷயத்தை புகழனாரிடந்துச்சொல்ல, அவர் தாம் விசாரித்தறிய வேண்டுவனவாகிய, அக்கலிப்பகையாருடைய குணம் குலமுதலியவற்றையும் பேசியறிந்துகொண்டபிறகு பசியதொடியணிந்து விளங்கிய தமது பெண்ணைக் கொடுப்பதற்கு இசைந்தார்.

இவ்வாறு கன்னியின் தந்தையாராகிய புகழனார் உடன்பட்ட சந்தோஷ சமாசாரத்தை கலிப்பகையாருக்கு அம்முதியோர்கள் போய் அறிவித்தார்கள். நிச்சயம் பெற்றதாகிய இக்கலியாணத்தை முடிப்பதற்கு முன்னமே, அவ்வரசனுக்கு விரோதமாக வடதேசத்தார் சண்டைக்குவர கலிப்பகையார் இந்த அரசன் கீழ் உத்தியோகஞ் செய்து வந்தாராகையினால், அவர்களைச் சண்டையிட்டுச் சயிக்கும்படி அரசன் இவருக்கு விடைகொடுத்தனுப்பினான். அரசன் காரியமாகிய இந்தப் போரை முடிக்கும் பொருட்டு அவனிடத்தில் விடைகொண்டு சென்றவராகிய கலிப்பகையார் வேண்

டிய சேனைகளையு முடன் கூட்டிக்கொண்டு போய்ச், சில நாள்களிற் ஜெயித்து வருபவர், இம்முறையில் மிகச் சினக்கொண்ட அப்பகைவரோடு கைகலந்து, அவர்களை வென்று போரை முடிப்பதற்காக பல நாளாகப் போர்செய்வாராயினர்.

அவரப்படி யிருக்கு நாள்களிலே இங்குத் திருவாமூரில், திலகவதியாரைப் பெற்ற குற்றமற்ற குலத்தில் விளங்கிய புகழனாரானவர் பழமையாக இவ்வுலக வின்பும் உடம்பும் நீர்மேற் குமிழிபோல் நிலையற்றன வென்னும் வழக்குண்மையாலும் தாம் இவ்வுலகத்திற்கு வந்த காரியமாகிய வினைக்கழிவு முற்றிவிட இவ்வுலகை விட்டுநீங்கும் காலமும் சமீபித்து விட்டதாலும், தீயவரும் பிணியினாலே வருத்தப்பட்டு அது காரணமாக மேலுலகத்தை யடைந்தார். இவர் உயிர்நீத்தபிறகு இவரது மனைவியாராகிய மாதினியார், கணவன் பிரிந்த பின்னர், தன்சுற்றத்தையும் பிள்ளைகளையும் தூசுபோலவெண்ணி நீக்கிவிட்டு இவ்வுலகத்திலே என்றும் கணவனைப்பிரியாதிருந்த அச்சிறந்த தன்மையினால், என்றென்றும் பிரியாது அம்மையுலகத்திலேயும் கற்பு மார்க்கம் தவறாமலிருக்கும்படி கணவனுடன் கூடுவதற்குத் தாமுமிவ்வுடலை நீத்துவிட்டார். தம்மைப்பெற்ற தந்தையாரும் தாயாரும் இறந்த பிறகு திலகவதியாராகிய பெண்ணும் மருணீக்கியாரென்ற புத்திரரும் மனக்கவலையினாலே தம் சுற்றத்தவர்களோடும் பெருந்துன்பத்திலாழ்ந்து பின் அச்சுற்றத்தவர் தேற்ற ஒருவாறு மனந்தேறி, விண்ணுலகடைந்தவர்க்குச் செய்யவேண்

டிய அந்திக்கடன்களெல்லாம் அமைவுறச் செய்து முடித்தார்கள்.

இப்படி யிங்கிருக்க அரசனுக்காகப் பகைவர்களை வெல்லும் பொருட்டுப் போர்செய்யப் போயின கலிப்பகையாரானவர் சண்டை மும்மரமாக நடக்கும் யுத்தகளத்திலே பகைவரால் கொல்லப்பட்டு புலையுடம்பொழித்துப் புகழுடம் பெய்தினர். வேந்தனிடத்தே பலநாட் சேவகத்திலிருந்த கலிப்பகையார் அவனேவலாலே போர்க்குச் சென்று அங்குப் பகைவரை வென்று வீர சுவர்க்கமாள்வதற்குச் சென்று தாம் அரசற்குச் செய்யவேண்டிய கடமையைக் கழித்து விட்டார் என்ற இந்தச் செய்தியை ஊரார் சொல்லச், செந்தாமரை மலரில் வாசஞ் செய்யும் இலக்குமி போன்ற திலகவதியார் கேட்டார். கேட்டவுடனே, "என் தந்தையுந் தாயு மவருக்கே என்னை மணஞ் செய்து கொடுக்க இசைந்திருந்தார்கள். அந்த முறைமையினாலே நான் அவருக்கே உரியவள். ஆதலால் யானும் இறந்து என்னுயிரை அவருயிரோடு சேர்த்துவேன்" என்று அம்மையார் துணிந்து விட உடனே அவருடைய பாதங்களில் மருணீக்கியார் வந்து விழுந்தார். அந்த நிலையிலே யவர் மிகவும் புலம்பித் " தாயையுந் தந்தையையும் இழந்த பின்னும் நான் உம்மை வணங்கியிருக்கப் பெற்ற தன்மையினாலே யுயிர் தரித்திருந்தேன்; இனி என்னைத், தனிமையாக விட்டு விட்டு நீரிரும் போகத் துணிவீர்களானால் நான் உமக்கு முன்னமே யே உயிர் நீத்துவிடுவேன்" என்று சொல்லி மிகுந்த

துன்பத்தழுந்தினார். திலகவதியார், தம்பியார் உயிர் தரித்திருக்க வேண்டுமென்று அவர் மீது வைத்த தயாவானது, தாம் உயிர் நீத்து உம்பருலகடைவதினின்றும் தம்மை விலக்கிவிட தாமும் உயிர் தரித்திருக்க உடன்பட்டார். ஆனால் விவாகஞ் செய்துகொள்வதற்கு மட்டும் இசையாமல், எல்லாவுயிர்களிடத்தும் கருணை பூண்டு இவ்வுலகத்தில், வீட்டிலிருந்தே தவஞ்செய்து கொண்டு திலகவதியார் காலங்கழித்து வந்தார்.

குற்றமற்ற தமதுமனத்துன்பம் ஒருவாறுநீங்கிய பின் மருணீக்கியாரானவர் இவ்வுலகவாழ்க்கைக்குரிய உடல், மனை, பொருள் முதலிய யாவும் நிலையற்றனவென்பதைக்கண்டு நிலைபெற்றனவாகிய தர்மங்களைச் செய்தல்வேண்டுமென்றுதுணிந்து, பூமியில் தம்புகழ் நிலைபெற்று விலங்கும்படியாக, உயிர்கள் மேலும் வைத்த கருணையினால் தமது பொருளைக் கணக்கில்லாமற் கொடுத்துக் குற்றமற்ற தர்ம சத்திரங்களும், தண்ணீர்ப் பந்தர்களும் வைப்பார் ஆயினார். பூஞ்சோலை, நந்தனவனம் இவற்றை வைத்து விருத்தி செய்தும், குளங்கள் வெட்டியும், தம்பால் குறையிரந்து வந்தவர்களுக்கெல்லாம் தமது முறை தப்பாமல் வேண்டுவனவற்றை விருப்பத்துடனே கொடுத்தும், விருந்தாளிகளை ஓம்பியும், கல்வி வல்ல புலவர்களுக்கு நிதி நிரம்ப வளித்தும், இவ்வாறு இப்பூமியிலுள்ள எல்லாவகையாரும் பயன்பெறும்படியாக ஈகையினாலே மருணீக்கியார் சிறந்து விளங்கினார். அவர் நிலையற்ற இவ்வுலக வியல்பை யுணர்ந்து, அழியக்கூடிய

இவ்வுடம்பின் வாழ்க்கை மெய்யென்று நினைத்து அதி லே யலைய மாட்டேனென்று அதனை முற்றவும் துறந் தொழித்து விட்டு, சமய விசாரணை செய்து அவ்வவற் றின் மார்க்கங்களையும் உண்மையையும் நன்கறிந்திருந் தாராயினும் எம்பெருமானுடைய திருவருள் இல்லை யாதலால் 'கொல்லாமை மறைந்துறையுஞ்' சமண சம யப் பிரவேசஞ் செய்வாராய்ப் பாடலிபுத்திரம் என்று சொல்லப்படுகிற ஊரையடைந்து அங்குள்ள சமண் பள்ளி யருகே சென்றடைந்தார். வலிய சமணர்கள் இவரிடம் வந்து 'மோக்ஷத்தை யறியும் வழி யிதுவே யாகும்' என்று உண்மைபோலத் தங்களுறுதியை யுரைத்து தங்களுடன் இவரும் வந்து சேர்வதற்கு உணர்வுண்டாகும்படி பல போதனைகளைச் செய்தார் கள். சமண்சமயம் புகுந்த இம் மருணீக்கியார் அச்ச மய சாத்திரங்களை யெல்லாம் கைவரும்படியாக முற் றும் பயின்று அவற்றின் அறிவிலே சிறந்து விளங்கி னார். சமணர்கள் யாவரும் அவரைச் சூழ்ந்து மிக மகிழ்ந்து அவர்க்குத் தங்களெல்லாரினும் மேலான தரு மசேனர் என்னும் பட்டம் கொடுத்தார்கள். அம்மார்க் கத்தில் சிறந்திருந்த தன்மையினால், இவ்வுலகத்தில் ஞானமார்க்க மறியாத புறச்சமயிகளையும் வாதில் மிகச் சாமர்த்தியமாய் வெற்றிகொண்டு, இந்த வுலகத்திலே மிகப் புகழ்பெற்ற புலவராய் சமண்சமயத் தலைமை பூண்டு மேன்மையோடு விளங்கினார். இவ்விதமாகச் சமண்சமயத்தைத் தழுவி யவரிருந்துவிட்டார்.

இங்கே மேன்மையான தவமார்க்கங்கைக்கொண் டொழுகிய திலகவதியார் தொன்றுதொட்டுப் பழமை

யாகவரும் சுற்றத் தொடர்பு முற்றும் ஒழித்துவிடும் படியாக சைவசன்மார்க்கஞ் சேரப் பெருமானது திருவடிகளை யடைவாராகி, அநாதியே பந்தித்து நீங்காத வலிய • பாசக்கட்டினின்றும் விடுபட எம்பெருமானிடத்துக் குறையாத அன்பு பூண்டு, எப்போதும் நீர் நிரம்பப்பெற்ற கெடில நதியின் வடகரையிலே, எல்லா வளங்களும் நீடும் பெரிய சிறப்பு வாய்ந்த திருவதிகை வீரட்டானம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தை யடைந்தார். அடைந்து திருவீரட்டானத்திலே எழுந்தருளிய செம்பவளமலை போன்ற மேனியை யுடைய எ பெருமானுடைய பாதங்களில் நமஸ்கரித்துக் குற்றமற்ற சிவசின்னங்களாகிய விபூதிருத்திராக்கங்களையே யாபரணங்களாகப் பூண்டு மிக விருப்பத்துடன், தம்முடைய கையாலேயே திருப்பணிகள் பலவற்றையும் செய்வாராயினார். பொழுது விடிவதற்கு முன்பாகவே கோவிலுக்குத் திருவலகிட்டுப் புனிறகன்றதாகிய பசுச் சாணத்தால் திருமெழுக்குமிட்டுப் பின் நந்தனவனத்தினின்றும் பூக்களைப் பறித்துக்கொண்டு வந்து மாலைகளாகவுந் தொடுத்துக் கொடுத்து இவ்விதமாய்ப் பலரும் புகழ்ந்து கொண்டாடத் தக்கதாகத் திருப்பணிகள் பலவற்றைச் செய்து வந்தார். தினமும் பணிகளைச் செய்து தம் வினைகள் குறையப்பெற்று வருகின்ற நாளிலே தம்பியார் மீது வைத்த அன்பினாலே, அவர் பூர்வ சென்மத்திற் புரிந்த தீவினைப் பயனாகப் பரசமயஞ் சேர்ந்ததன் பொருட்டினாலாகிய கவலை மனதிலே மிக மூளப் பெருந்துன்பத்திலே யாழ்ந்தார். தூண்

பெற்ற தவவிளக்கைப் போன்றவராகிய அ

திலகவதியார் எம்பெருமானை வந்தித்தபின் 'தேவரீர் என்னை யாண்டடிமை கொண்டவரே யாமாகில் என் தம்பியைத் தீவினை நிரம்பிய பரசமயக் குழியினின் றும் கரையேற்றி யாண்டருளவேண்டும்' என்று பல முறையும் விண்ணப்பஞ் செய்து வருவார். தவம் என்று பேரிட்டுப் பாயை யிடுக்கியும், தலைமயிரைப் பறித்தும், நின்றே யுண்டும் வரும் செய்கையுடைய துன்மார்க்கமாகிய சமணில் வீழ்ந்தவனாகிய தம்பியை அங்ஙனம் வீழாம லருளவேண்டு மென்று சைவமார்க் கத்தின் வழிநின்ற திலகவதியார் எம்பெருமானை வேண் டிவர, அடியவர்களின் பவவினைகளை நீக்கும் அண்ண லானவர் திருவுள்ளம் பற்றினார். நிலைபெற்ற தபோ தனியாராம் திலகவதியார்க்கு, இடபாரூடராகிய சிவ பிரான் கனவிலே தோன்றி நீ உன்னுடைய மனக்கவ லையை ஒழிப்பாயாக! உன் தம்பி முன் சென்மத்திலே முனியாகி எம்மைநோக்கித் தவம்புரிந்துள்ளான்; அத்தவத்திற் சிறிது தவறுண்டானமையின், அவ னுக்கு இப்பிறப்பு நேர்ந்து அதன்வழித்தாய்ப் பரச மயப் பிரவேசமும் நேர்ந்தது. இனி அவனைச் சூலை நோய் தந்தாட்கொள்வோம்' என்றருளிச் செய்து மறைந்தருளினார். முன் சென்மத்திற் செய்த நல்ல தவத்திலே சிறிது தவறின தொண்டராகிய மருணீக்கி யாரை ஆள்வதற்காக நெற்றிக்கண்ணையுடைய பெரு மான் சூலைநோயைக் கொடுத்தருளக், கடுமையாகிய அக்கினிபோல வருத்தும் கொடுமையாகிய அச்சூலை நோயானது அவருடைய வயிற்றினைப் புகுந்தது. உய்வகையில்லாத சமண்சமயஞ் சார்ந்த தருமசேனர்

வயிற்றிலே புகுந்த அச்சூலைநோயானது வடவாமு காக்கினியும், கொடிய விஷமும், வயிரமும் முதலிய கொடிய வஸ்துக்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து வந் தாற்போலக் குடரினுள்ளே குடைந்ததால் அவர் மிகத் துன்பந் தாழ்ந்து நடுநடுங்கி அமண்பள்ளியறை யிலே விழுந்தார். அந்த சமயத்திலே தாம் முன்னே கையாண்டு பழகித் தமக்கு மிகப் பயன்பட்டுவரும் மணி மந்திர ஔஷதாதிகளால் அதைத் தடுக்கவும் அது தடைபடாது மேன்மேலும் வளர்ந்து அதிகமாக வேதனைசெய்து ஓங்கி யெழுந்தது. அதனால் அவர் பாம்பின்விஷந் தலைக்கொண்டாற்போல மயங்கித் துன் பப்பட்டார். தவமென்று சொல்லித் தீவினையே பெருக் கித், தீநெறிசாரும் சமணர்கள் பலரும் அவர்நிலைமை யையறிந்து நெருங்கி வந்து, உயிரைக் கவர்கின்ற விஷத்தைப் போல, "நாம் முன்கண்டறியாத இக்கொ டுஞ் சூலை நோயானது இவருக்கு வந்து விட்டதே! இனி நாம் யாது செய்வோம்?" என்று மனநொந்தழிந் தார்கள்.

புண்ணோடு கூடிய தலையினையுடைய வலிய சம ணர்கள் மனம புலர்ந்து செய்வதறியாது, தமது கையி லுள்ள குண்டிகையின் நீரை அபிமந்திரித்து அவ ரைக் குடிக்கும்படி செய்தார்கள். அதனாலு மந்நோய் தணியாதது கண்டு, மேலும் தலையினின்று கால்வரை யும் அவரைத் தாம் கையிற்கொண்ட மயிற்பீலியினால் தடவினார்கள். ஆனால் முன்னைவிட அந்நோய் மிக அதிகரித்ததைக் கண்டு மனநொந்தார்கள். குறை

யாத புகழையுடைய தருமசேனர்க்கு வந்த நோயா னது தணியாது அவ்வண்ணமே நிற்கக் கண்டு, அது தீராது என்னுந் தன்மையை யுணர்ந்தவர்களாய், "ஐயோ! இதற்கு நாம் என்ன செய்வோம்?" என்று மனமழிந்து இது 'நம்மாற் போக்குதல் அரிது' என்று சொல்லிச் சமணர்கள் போய் விட்டார்கள். சமண குருக்கள்களு மிவ்வாறு கைவிட்டுவிட்டார்களாக கொடிய சூலை நோய் மேற்கிளம்பி மேலும் மேலும் அதிகரித்தலால் மருணீக்கியார் மிகவருந்தித் தம் பூர்வ நிலைமையை யோசித்தார். தமது தமக்கையாராகிய திலகவதியார் உள்ளார் என்பதறிந்து அவரிடத்துத் தமது நிலைமையின் குறிப்பை யுணர்த்தும்படித் தம் சமயற்காரனை விடுத்தார். அவன் சென்று திருவதிகை யடைந்து, அரிய தவத்தினையுடைய திலகவதியார் பூக்கள் வாசம் வீசுகின்ற நந்தனவனத்தின் புறத்தே யணையக் கண்டு அவரை நமஸ்கரித்து 'நான் இங்கே உம்முடைய தம்பியாருடைய ஏவலினாலே வந்தேன்' என்று சொன்னான். அதற்கு அவர் 'ஏதாவது தீங்குண்டோ' என்று கேட்க அவன் "சூலை நோயானது குடரை முடக்கி உமது தம்பியாரை மிகவருத்தியது. அவரைக் கொன்ற பாடுமில்லை. அந்நோய் நீங்குவ தரிதென்று எல்லாருங் கைவிட்டுவிட்டார்கள். 'இது செய்தியை என் தமக்கையா ரிடத்தே சென்றறிவித்து நான் பிழைக்கும் வழியைக் கேட்டுக் கொண்டிங்கே சாயங்காலத்திற்குள் வந்துசேர்' என்று சொல்லி என்னை இங்கே யனுப்பினார்" என்றான்.

இதைக்கேட்டுத் திலகவதியார் 'நான் உன்னுடன் வந்து, நன்னெறியறியாத சமணர் பள்ளியிடமாகிய அங்கே வரமாட்டேன் என்ற இச்செய்தியை நீபோய் அவனுக்குச் சொல்' என்று சொல்ல அவனும் திரும் பிச்சென்று நிகழ்ந்ததை அவ்வாறே அவருக்குச் சொன்னான். அந்த வார்த்தையைக் கேட்டதும் இதற் கினி என்னசெய்வேன் என்றயர்ந்தார். பெருமானு டைய அருள்கூடினதினால் 'பொருந்தாத இந்த இழிசம யத்திலே நீங்காத இத்துன்பம் நீங்கும்படி, நன்னெறி சார்ந்த திலகவதியார் பாதங்களைச் சென்றடைவேன்' என்று துணிந்தார். இவர் உய்யும்படியாக இம்மனத்து துணிவானது உண்டானதினாலே நோயாற்படுத்துக் கிடந்தவர்க்கு எழுந்துசெல்லும் முயற்சியுண்டாயிற்று. அம்முயற்சி யுண்டானவுடனே நோய்த்துன்பமும் மன த்தைவிட்டு ஒதுங்கிநின்றது. திருவதிகை சேர்வதனால் அங்கே சமண்பள்ளியில் தாம் உடுத்திருந்த பாயும் கையிற்கொண்ட குண்டிகையும், மயிற்பீலியும் ஆகிய இவற்றை ஒழித்துவிட்டு, போவதற்குத் துணிந்தெ ழுந்தார். பொய்யைக் கொடுக்கும் மயக்கநிறைந்த உள்ளத்தையுடைய இழிந்த சமணர்களிடத்தில் நீங்கி மெய்யாகிய பெரிய சைவசன்மார்க்கத்தை யடைவதற் கு வெள்ளைவஸ்திரத்தை உடுத்திக்கொண்டு கைதரும வர் உதவியினாலே சமணர்கள் அறியாதபடி இரவிலே, தவஞ்செய்யும் பெரியோர் வசிக்குந் திருவதிகையைப் போய்ச் சேர்ந்தார். வயிற்றிலேபுகுந்து மிகவும் வருத் துகின்ற சூலைநோயானது தம்மைத் தொடர்ந்து வர வும், உள்ளே எழுகின்ற ஆசையானது கைதந்து தம்

மைகொண்டுவந்து சேர்க்கவும், மலைபோல் விளங்கு கிற மதிலின் பிரகாசமானது எதிர்வீசப்பெற்ற திருவதி கையிலே திலகவதியாரிருந்த திருமாளிகையை வந்த டைந்தார். திலகவதியாருடைய பாதங்களில் நமஸ் கரித்து 'நமது குலஞ்செய்த நல்ல தவத்தின் பயன் போன்றவரே! இந்த உடலானது கொடுமையாகிய சூலைநோயால் மிகவும் வருத்தப்பட்டு அடைந்தேன். இனி நான் மயங்காதபடி உச்சீவிக்கு மார்க்கத்தை உரைத்தருள வேண்டுமென்று விழுந்தயர்ந்தார். அவ ரைநோக்கித் திலகவதியார் தம்மை யாட்கொண்ட பெ ருமானுடைய அருட்டிறத்தை நினைத்து வந்தித்து 'நற்கொள்ளையற்ற பரசமயக் குழியில் அறியாமல் விழுந்து, பொங்கிய துன்பத்திலழுந்தினவரே, எழுந் திரும், என்று சொன்னார். அந்த மொழியைக் கேட்ட தும் மருணீக்கியார் தமக்குற்ற நோயோடு நடுநடுங்கி யெழுந்து தமக்கையாரைத் தொழுது நிற்க, உயர்ந்த தவத்தையுடைய அவரும்“கற்றையாகக்கூடிய சடாபா ரத்தையுடைய சிவபெருமானுடைய அருளே உம்மை இவ்வளவிற்குக் கைதூக்கிவிட்டது பாரும்! தம்மைய டைந்த அன்பர்களது பாசத்தையறுக்கும் அவரைப் பணிந்து அவருடைய திருப்பணிகளைச் செய்வீராக!” என்று பணித்தருளினார், இவ்வாறு அவர் அருளியதை ஏற்றுக்கொண்டு அவரை வந்திக்க, அத்தபோதினி யாரும், தம்பியார் திருவீரட்டம் என்னும் கோயிலை யடைந்து உட்புகுவதற்கு அருகராம்படி, பெருமானு டைய விபூதியை அவர் அஞ்செழுத்தைச் சொல்லிக்

கொடுத்தார். பெருமானுடைய திருநீற்றைத் திலகவதியார் கொடுக்க, பெருந் தகைமையையுடைய மருணீக்கியார் அதனைப் பெருவாழ்வு வந்ததென்று, இறைஞ்சி ஏற்றுத் தந்தேகம் அழகுபொருந்த அணிந்துகொண்டு தமக்குத் தீவினையுற்றவிடத்து உய்யும் வகையைத் தந்தருளிய தமக்கையார் பின்பு தாமும் வந்தார். திருநீறணிந்த இவருடைய உள்ளவிருளும், நிறைந்த இரவின் உண்டாகிய புறவிருளும் மாறும்படியாகவரும் அன்று திருப்பள்ளியெழுச்சிக் காலத்திலே மா தவசியாகிய திலகவதியார் திருவலகும் சாணமும் தோண்டியு மெடுத்துக்கொண்டு கங்கையைச் சடையிற்றரித்த பெருமானுடைய கோயிலடைந்து தம்பியாரையும் உடன் கொண்டு உள்ளே புகுந்தார். அலைகள் வீசும் கெடில நதியின் கரையிலே வீரட்டானத்தில் வீற்றிருந்த, மாமேருவை வில்லாகவளைத்த பெருமானுடைய கோயிலைத் தொழுது வலம் வந்து நமஸ்கரித்துத் தம்பிரானுடைய திருவருளாலே தமிழ்ச்சொல்லாலாகிய செய்யுண்மாலைகள் சாத்தும் உணர்வுண்டாகத் துதிப்பாராயினார். திருநீறுபூசி நிறைந்து விளங்கிய திருமேனியோடு அன்பு நிறைந்த தமது உள்ளத்திலே உணர்வு மிகுதலும், மருணீக்கியார் தம்மை வருத்தும் பிணிமாயையைப்போக்கும் பொருட்டுத் திரிபுரதகனஞ்செய்த பெருமானைக் கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்றாரம்பிக்கும் குற்றமற்ற திருப்பதிகத்தாலே துதித்து, உலகேழில் வருந் துன்பமும் போம் வண்ணம் சன்னதியில் நின்று பாடினார்.

சிவமயம்.

# திருவதிகைவீரட்டானம.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபல
　　செய்தனநானறியேன்
ஏற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாது
　　வணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியே
　　குடரோடுதொடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடில
　　வீரட்டானத்துறையம்மானே.

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்
　　புறங்காடரங்காநடமாடவல்லா
யார்த்தானரக்கன்றனைமால்வரைக்கீ
　　ழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தா
　　லென்வேதனையானவிலக்கிவிடா
யார்த்தார்புனல்சூழ்திகைக்கெடில
　　வீரட்டானத்துறையம்மானே.

திருச்சிற்றம்பலம்.

நிலைபெற்ற அப்பதிகத்தைப் பாடிய பின்னர் அவரது வயிற்றிற்புகுந்து வருத்திய சூலையென்னுமக்கொடிய வியாதியானது அந்தநிலையிலேயே விட்டுநீங்கியது. அவர், 'பெருமானனவர் அடியேனுடைய உயிருடனே தன் அருளையும் அடியேனுக்குத் தந்தருளினர்' என்று பிரானுடைய திருவருள்பெற்ற சிறப்புடையோராகி, சன்னதியில்நின்று அறிவாலும் அனுபவத்தாலும் முதல்வருடைய அருளாகிய கடலில்மூழ்கிநின்றார். தமது தேகமுழுதும் மயிர்க்கூச்செறிக்க, கண்களிலிருந்து

நீர் தாரைதாரையாகவடியக் கீழேவிழுந்துபுரண்டு அயர்வாராய், 'என் பிழையினாலே நான்விழுந்து ஏறக்கூடாத பெரியதிட்டிலே நான்மிதந்தேறும்படி தேவரீர், கருணையாகிய பெருவெள்ளம் இடவும் அடியேன் அருகனோ' என்றிப்பேர்ப்பட்டவைகளைச் சொன்னார். பொய்யையே மேற்கொண்டு பெருக்கிய இழிசமயமாகிய அறிவற்ற சமணம் என்னும் ஆழ்ந்தகுழியிலே விழுந்து, எழுந்து கரையேறும் மார்க்கம் இன்னதென்றறியாது பாவத்திலுழன்ற நான், நறுமணமுள்ள கரிய கூந்தலையுடைய பார்வதிபாகரான பெருமான் பாதங்களையடையும் இப்பெருவாழ்வு பெற்றுய்யும்படிசெய்த இச்சூலைநோயிற்கு நான்செய்யும் கைமாறென்ன என்றுசொல்லித் தொழுவார். இந்தசமயத்தில், வீரட்டத்தெழுந்தருளிய பெருமானருளினாலே, "எங்கும்பரவி விரிந்த செந்தமிழின் இனிய சொல்வளம்பொருந்திய பதிகத்தொடைபாடிய தன்மையாய் 'திருநாவுக்கரசு' என்னும் உன் நாமமாவது ஏழுலகங்களிலும் நிலைபெறுக" என்று ஓர்வாக்கு, மேகத்தையுடைய ஆகாயத்திடத்தே எழுந்தது.

இவ்வாறு நிகழ்ந்தபோது திருநாவுக்கரசாகிய அன்பரும், 'இந்தப்பாக்கியமானது இந்நாள்வரை மனதில் தீவினைநிரம்பியிருந்த அடியேனடைதற்குரியதோ' என்றுசொல்லி மேல், அறியாத அவ்விராவணனுக்கு முன் பெருமான் அருள்செய்த திறத்தின் உண்மையறிந்து துதிப்பதே மேல்கொண்டு மீண்டும் வந்தித்து நமஸ்கரித்தார். யாவராலும் வந்திக்கப்பட்ட பெருமா

னருளினாலே, புன்றலைச்சமணர் சமயமானது பாழாகு ம்படி இத்திருநாவுக்கரசு இங்கே அருள்பெற்று உய்ந் தார் என்றுகேட்டு அடியர்சூழும் திருவதிகையானது அவர்கள் சந்தோஷத்தால் முழக்கிய மத்தளம், யாழ், சங்குமுதலிய வாத்தியசப்தம் நிறைந்திருந்ததால் கட ல்போலிருந்தது.

மயக்கந்தரும் சமணமார்க்கத்திலிருந்தும் ஈடேறி மகிழ்ந்த வாகீசரானவர், தமதுமனத்தாலும், உடம்பா லும் (வாக்காற்செய்வதோடு) பெருமானுடைய திருப் பணியே செய்பவராகிப் பொருந்திய சிவசின்னங்கள் தம்மேல் விளங்கும்படிதரித்து, பெருமானுடைய தியா னம்நீங்காத உணர்ச்சியும்அளவில்லாது வாக்கிலிருந்து எழுகின்ற திருப்பாசுரங்களும், கையிலேவிளங்கும் உ ழவாரமும், என்றிவற்றைக் கைக்கொண்டு மனங்கசிந் து பெருமானுடன் உணர்விற் கலந்திருந்தார்.

உண்மைத்திருப்பணி விருப்பத்துடனே செய்த லால் தேவர்பெருமானாகிய சிவபிரானுடைய பாதங்க ளில்வணங்கி, தம்இச்சைப்படி வரம்பெற்ற அவ்வூரி லுள்ள தபசிகள், பொய்ச்சமயமார்க்கமாகிய நோயை ஒழித்த திருநாவுக்கரசின் முன்னேவந்து எம்முடைய பிறவிநோயை ஒழித்து எம்மையாட்கொண்ட தேவரீ ருடைய கருணைத்திறத்தை எங்களைப்போல வேறுயா வர்பெற்றார்கள்? என்று புகழ்ந்து வணங்கினார்கள்.

இவ்விதமாக இவர் சைவமார்க்கத்தை யடைந்து நிலையான பேரருள்பெற்றுத் தம் துன்பங்களின் நீங்கி

யதன்மையைப் பாடலிபுத்திர நகரத்திலிருக்கும், இழி தொழிலேசெய்யும் சமணர்கள் கேட்டுப் பொறாதவ ராகி, 'தருமசேனர்க்கு வந்ததாகிய அந்தத் தீராச்சூலை நோயானது இங்கே நம்முள் ஒருவராலும் தீர்க்கமுடியாததினாலே அவர் தாம் உய்வதற்காகச் சைவசமயத் திற்புகுந்து தம் நோயைநீங்கிச் சுகமுற்றார். இதனால் நமது சமயத்திற்கு அழிவுவந்தது' என்று பயந்து, நம்மோடு மாறுபட்ட பிறசமயங்களையும் வென்று நமதுசமயம் அவராலேயே நிலைபெற்றிருந்தது.

இனி யழிந்துவிடும் என்று விசனித்து கொலையும் பொய்யும் எம்மிடத்தில்லை என்று சொல்லிக்கொண் டே கொடுந்தொழில்செய்யும் அச்சமணர் மயிர்பறித்த தலையும்மயிற்பீலியுந்தாழ ஒருஇடத்திற்சேர்ந்தார்கள்.

இவ்விதமாகப் பலசமணரும் துன்பத்துடன்வந்து ஒன்றுசேர்ந்து 'உண்மையை அரசன் அறிந்தால் அவ னும் தன்னை இத்தனைநாள்வரையும் பொய்மார்க்கம் உரைத்து வஞ்சித்திருந்தோமென்றுநம்மீதிற்கோபித் துவெறுத்துத்தானும்சைவனாகிநம்முடையபிழைப்பை யுங் கெடுத்துவிடுவான். இதற்கினி நாம்செய்யவேண்டு வதென்ன?' என்று யோசித்து வஞ்சனையாலே பொய்க் கட்டுக்கட்டுவோராகி 'தம்தமக்கை சைவத்திலே யிருந்த தாலே தருமசேனரும், பொய்யாகத் தமக்குச்சூலைநோ ய்வந்ததென்றுசொல்லி இங்கொருவராலுந் தீரவில்லை யென்று இதைவிட்டகன்று வஞ்சனையாக அங்கே செ ன்று, நமது மதத்தையுந்துறந்து நமது தெய்வத்தை

யும் நிந்தித்தார்' என்று சொல்வதாகத் தீர்மானித்தார்கள். அவ்விதமாகவே செய்யத்துணிந்து அத்துன்மார்க்கர்கள், இருட்கூட்டம்போவதுபோலப்போய் பல்லவ ராஜனுடைய நகரத்தில்வந்து சேர்ந்தார்கள். ஆடையையுடுப்பதொழித்து நின்றுண்ணும் வழக்கத்தையே கொண்ட அவ்வமணர்களெல்லாரும் அரண்மனைவாயிலடைந்து வாயில்காப்போரிடம், 'நாங்கள் எல்லாரும் ஒருசேரவந்த செய்தியை அரசனிடம் அறிவியுங்கள்' என்றுசொல்ல அவர்களும் சமயமறிந்துசென்று தப அரசனுக் கறிவிப்பாராய் 'வெற்றி வேந்தே! நமது சமய குருக்கள்களெல்லாம் துன்பப்பட்டு மிக மனம் நொந்து, கொடியசையும் அரமனைத் திருவாயிற்பக்கத் திலே வந்தடைந்தார்கள்' என்றார்கள். வடித்த நீண்ட வேலேந்திய மன்னவனும் அச்சமணர் சார்புடையோனாதலால் 'இவ்வளவு விரைவில் இங்கேவந்து முறையிடும்படியாக அவர்கட்கு நேரிட்டதென்ன?' என்று வியாகூலத்தோடு மொழிந்தான். பின் உடனே வாயில் காவலாளர் உள்ளே செல்லவிட அரசனிடஞ் சென்று அவர்கள் தாம் நினைத்தவாறே 'நமது சமயத் தலைவராகவிருந்த தருமசேனர் சூலைநோய் கொண்டவராகக் காட்டி, சிவனுக்கடிமைபூண்டு உன் சமண சமயத்தை யழித்துவிடத் தலைப்பட்டார்' என்றார்கள். மணம் பொருந்திய மாலையணிந்த பல்லவனும் அதுகேட்டு கோபித்து 'மனத்தில் அங்கே போதலாகிய கருத்தை வைத்து நோய்கொண்டதுபோலப் பொய்யாகநடித்து நம்முடைய சிறந்த சமயத்தை யழித்தவனும் பிழைக்கப்பெறுவதா? அளவற்ற தவத்தை யுடையவர்களே

இதற்கென்ன செய்வது?' என்று கேட்டான் கொல்லாமை மேற்கொண்டு பொய்யொழுக்கம்பூண்ட சமணர்கள் 'எல்லாவற்றிற்கும் தலைமையாகிய நம்சமயத்தை யழித்து உன் நிலைபெற்ற பழமையான் ராசநீதியை மீறின அறிவிலியாகிய அவனை நீ தண்டிக்கத்தகும்' என்று தமது வாயாலே, முன் தாம் மேலாகக் கொண்டாடின தருமசேனர்க்கும், உண்மைக்கும், தமது மனச்சாட்சிக்கும் சிறிதேனும் மனதில் அச்சங்கொள்ளாமல் சொன்னார்கள். கடவுளருளோடுகூடிய உணர்ச்சியில்லாமல் ஒழுக்கங்கெட்டு ஞானமல்லாததை ஞானமென்று மயங்கியிருந்த பல்லவனும் மந்திரிகளைப்பார்த்து, 'இவ்வறிவுடையோர் சொல்லுகின்ற தீயவனைத் தண்டிப்பதற்காக, பொருள்வாங்கிக்கொண்டு விட்டுவிடாதபடி என்னிடம் கொண்டுவாருங்கள் என்று ஏவினான். அவர்களும், அவ்வாறே அரசன் ஏவலின்படி, முரசு சப்திக்குஞ் சேனையோடு கூடிச்சென்று, மேகங்கள் நெருங்கி வாசங்கமழ்கின்ற சோலைகள்சூழ்ந்த திருவதிகையைச் சேர்ந்து, பரசமயப்பற்றை முற்றிலும் ஒழித்த நமது திருநாவுக்கரசினிடஞ் சென்றார்கள். அமைச்சர்களும் சேனைவீரர்களுஞ் சூழ்ந்து, பிரகாசிக்கும் சடையையுடைய எம்பெருமானடியவராகிய அவரை நோக்கி, 'இன்று, நும்மை அழைத்துவரும்படி வேந்தன் எங்களை விடுத்தனன். வரவேண்டும்' என்றுகூற, நிறைந்த தவத்தையுடைய அவர் இவர்களைப்பார்த்துச் சொல்வாராயினார்

'நாமார்க்குங் குடியல்லோம்' என்றுஆரம்பித்து, வேதநாயகரும், கங்கையையும் சந்திரனையும் வைத்த சடையையுடையவருமாகிய சிவபெருமானை இனிமை யாகிய செந்தமிழ் மாலையாக திருத்தாண்டகம்பாடி, 'நாம் நீங்கள் அழைப்பதற் குட்பட்டோ மல்லோம்' என்று உள்ளபடியே சொன்னார்.

## மறுமாற்றகத்திருத்தாண்டகத்தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோ
நரகத்திலிடர்ப்படோநடலையில்லோம்
ஏமாப்போம்பிணியறியோம்பணிவோமல்லோ
மின்பமேயெந்நாளுந்துன்பமில்லைத்
தாமார்க்குங்குடியல்லாத்தன்மையான
சங்கரனற்சங்கவெண்குழையோர்காதிற்
கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க்
கோய்ம்மலர்ச்சேவடியிணையேகுறுகினோமே.

நாவாரநம்பனையேபாடப்பெற்றோ
நாணற்றார்நள்ளாமேவிள்ளப்பெற்றோம்
ஆவாவென்றெமையாள்வானமரர்நாத
னயனொடுமாற்கறிவரியவனலாய்நீண்ட
தேவாதிதேவன்சிவனென்சிந்தை
சேர்ந்திருந்தானென்றிசைக்கோன்றானேவந்து
கோவாடிக்குற்றேவல்செய்கென்றாலுங்
குணமாகக்கொள்ளோமெண்குணத்துள்ளோமே.

திருச்சிற்றம்பலம்.

இப்படிச் சொல்லக்கேட்டு அவர்கள் வணங்கி மிகவும் வேண்டி இவரைக்கொண்டு போனார்களாக, இவரும்

இங்கேவரும் தீவினைகளுக்குக் காப்பாக எம்பெரு மான் துணையா யிருக்கின்றார் என்று துணிவுடன் போதற்கிசைந்திருந்தார். அவர்கள் அவரைக்கோபங் கொண்டிருந்த கொற்றவனிடங் கொண்டுசென்று அறி வித்தார்கள். பல்லவனு மதைக்கேட்டு, பக்கத்திருந்த சமணரை, 'அவனுக்கு இனிச்செய்யவேண்டிய தண்ட னையாது? சொல்லுங்கள், என்றுகேட்க, தர்மமார்க்கந் தப்பித் தமக்குய்வகை யறியாத அறிவீனர்களாகிய அவர்கள் சிறிதும் அச்சமின்றி, சுண்ணும்புக் கால்வா யில் வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். பரிசனங் களைப்பார்த்து 'அப்படியே செய்யுங்கள், என்று கோ பங்கொண்ட அந்நொடுங்கோன் மன்னன் கட்டளை யிட்டான். அவர்கள் பெருந்தகைமை வாய்ந்த திருநா வுக்கரசரை, உருக்கும் பெருந்தீயின் வெப்பம் நிறைந்த சுண்ணும்பறையினுள் இருக்கச்செய்து வெளியே தா ழிட்டுக்கொண்டு, மேலும் அவர் தப்பி வெளிவராத படி வேண்டும் பத்திரங்களும் செய்தார்கள். நமது ஆண்டவரசும் அந்நீற்றறையினுள்ளே புகுந்தபோது, திருவம்பலத்தருகே ஆனந்தத் தாண்டவம் புரியும்பெ ருமான் பாதங்களைச் சிரசின்மீது வைத்துக்கொண்டு, எம்பெருமானடியவர்களுக்கும் இங்கே துன்பம் வரு மோ என்ற மனத்துணிவுகொண்டு அப்பெருமானடி களையே 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்ற பதி கத்தால் துதித்து தியானித்துக்கொண்டு அங்கே யிருந்தார்கள்.

## தனிக்குறுந்தொகைத்தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனலு
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
யீசனெந்தையிணையடிநீழலே.
விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன்மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வுகயிற்றினான்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே.

திருச்சிற்றம்பலம்.

மிகவெப்பங்கொண்ட அந்நீற்றறையானது அப்போது, இன்பந்தரும் இளவேனிற்பருவமும் நமது உடம்பைத் தடவுவதுபோல மெல்ல வீசும் குளிர்ந்த தென்றற்காற்றும், குளிர்ந்த செங்கழுநீர்ப்பூ நிரம்பிய தடாகமும்போலவுமாகி, மிக்க பிரகாசமுடைய வெள்ளிய நிலாக்கிரணங்களை வீசி, யாழ்போலக் கானத்தையுடையதாகத் தன்தன்மைமாறிப், பெருமானுடைய திருவடிநிழலடைந்தோரடையும் கருணைபோலக்குளிர்ச்சியுடையதாயிற்று. தமது தலையிலே குற்றமற்ற சந்திரனையும் கங்கையையும் தரித்தவரும், துதித்தற்கினிமையாகியவரும் உலகத்தையாட்கொள்ளுபவரும், ஈசனும், எம்பெருமானும், எல்லாவுயிர்களையும் தந்தருள்பவரும் ஆசையற்ற ஆரா அமுதம்போன்றவரும் ஆகிய கடவுளை வணங்கித் துதித்துக்கொண்டு அவர் அங்கே யிருந்தார்.

ஏழுநாட் கழிந்தபின், பல்லவன் அறிவற்ற அந்தச்சமணரை அழைத்து, 'இனி நீற்றறையைத்திறந்து பாருங்கள்' என்று சொன்னான். மிக்க இருட்டுக் கூடியதுபோலுந் தோற்றத்தையுடைய அக்கொடிய சமணர்கள் அக்காளவாயைத் திறந்தார்கள். அங்கே ஆனந்தானுபவத்தோடு சிவபெருமானுடைய இனிய தாமரை மலர்போலுந் திருவடியாகிய அமுதருந்தித் தெளிவுடையவராய்ச் சிறிதும் கெடுதி வராதபடிச் சந்தோஷத்துடனிருந்த ஆண்டவரசைப் பார்த்து 'இவர்க்குச் சிறிதும் கேடுவரவில்லை. இது என்ன அதிசயம்!' என்றார்கள். ஆயினும் அரசனிடம் 'இது ஓர் அதிசயமல்ல. முன்னே நமது சமணசமயச்சார்பிலே அவர் பழகிய சாதனங்களாலே யிவ்வாறு தப்பினார். இனி வலிய விடபானம்செய்விப்பதே இதற்குமுடிவு' என்று முதிர்ந்த பாதகஞ் செய்வோராகிய சமணர் தமது முடைபோன்ற வாயினால் சொன்னார்கள். அதைக் கேட்டதும் சமணசமயச்சார்பால் கெட்ட அவ்வரசனும் உளத்தெளிவின்மையால் 'அவர்க்கு நஞ்சை ஊட்டுவியுங்கள்' என்று ஆக்ஞாபிக்க, அவர்களும் திருநாவுக்கரசரை விடங்கலந்த பாலைப் பானம் செய்வித்தார்கள். செவ்விய சடாபாரத்தையுடைய சிவபிரானது கருணைத்திறத்தை உலகுக்கு விளக்குந்தன்மையரான எமது திருநாவுக்கரசரும், வஞ்சநெஞ்சினராகிய சமணர்கள் செய்வது வஞ்சனை யென்றதை யறிந்தே, 'எம்பெருமானடியவர்கட்கு நஞ்சும் அமுதமாகும்' என்று துணிந்து அவர்கள் தந்த பாற்சோற்றை யருந்தி ஒரு ஊனமுமில்லாமல் இருந்தார்

விபூதி பூசிய திருமேனியையுடைய பரசிவனுக்கு, பூமியையெல்லாம் நாசம் செய்யும்படியாக முன்னே யெழுந்த ஆலகால விஷமும் அமுதமாயிற்றென்று சொன்னால் யாவராலும் நினைத்தற் கருமையாகிய அப் பசுபதிப் பெருமானுடைய உண்மையடியவர்க்கு விஷம் அமுதமாவதும் அற்புதமோ? அல்ல.

இவ்வாறு ஆண்டவரசு இருக்க அச்சமணர்கள் கொடியவிஷமும் அமுதமாயிற்று என்று பயமும்கோபமும் கொண்டு, இவ்விடத்திலே இவன் நாம் செய்யும் சூழ்ச்சிகளுக்கு தப்பிப் பிழைத்து விடுவானேயாகில் நமக்கெல்லாம் கேடு சம்பவித்தது என்றுட்கொண்டு பகைவரை வெல்லும் பல்லவனிடம் பார்வாராயினார்கள். நாம் விஷத்தைப் பானம் பண்ணச் செய்தும் நமது சமயத்திலுள்ள விஷவைரி மந்திரத்தினாலே அதன் வேகத்தைக் கெடுத்துவிட்டான். அவனைத் தீர்க்கும் மார்க்கமில்லாமற் போனால் எங்கள் உயிர்களுக்கும், உன் அரசாட்சிக்கும் கேடுவந்ததென்பது திண்ணம்' என்று 'கலங்காது கண்டவினைக்கட்டுளங்காது, தூக்கங்கடிந்து செயல்' என்பதை மேற்கொண்ட சூழ்ச்சியாராகிய அத்தீயோர் சொன்னார்கள். அவர்கள் சொல்லைக் கேட்டதும், மதிகெட்டவனாகிய அம்மன்னவனும் 'அவனை யினியொழிக்கும் வழி என்ன?' என்று கேட்க 'அவன் மந்திர சாதகங்கள் செய்யாதபடி நாங்கள் செய்கிறோம். நீ உன்னுடைய ஜயம்பொருந்திய பட்டத்து யானையை அவனெதிரே விட்டு அவனைக்கொல்லச் செய்தலே உபாயம், என்றார்

கள. மகா பாவிகளான கடைகெட்ட சமணர்கள் கபாலத்தைக் கையிலேந்திய சிவபெருமானடியராகிய நமது வாகீசத் திருவடிகளின் மேல் யானையை யேவும்படி சொல்லவே, அரசர் செயலை மேற்கொண்டொழுகி உண்மையில் புலைத்தொழிலே செய்யும் அப்பல்லவனும் அவர்மீது வெஞ்சின வேழத்தை விடும்படி ஏவினன். அந்தயானை யானது கூடம் மாடம் மண்டபம் இவைகளைத் தகர்த்தெறிந்து, தன்குத்துக் கோற்காரர்களையும் மீறி, யவர்களையும் நாசஞ்செய்து, யமன்தான் மதயானை யுருக்கொண்டு வந்தானோ என்னும்படி ஒரு பெரிய மலை போன்று வந்தது. மேலும் தன் கால் விலங்குச் சங்கிலிகளை யறுத்துக்கொண்டு, மேலே செல்லும் பறவைக்கூட்டங்களும் அஞ்சும்படியாகப், பக்கங்களிலே விலகிவிலகி யோசனை துதிக்கையினாலே எல்லாவற்றையும் வளைத்து, இவ்விதமாய்ப் பிரவாரம் செய்துகொண்டு தனக்குமுன் மழைபோற் பெய்யும் மதமானது முந்திச் செல்லும்படியாக மலைபோல எதிர்வந்தது. இதனுடைய இடிபோன்ற கர்ச்சனையினால் திக்கஜங்களும் நடுங்கும்படியாகவும், கால் மிதித்தலால் பூமியும் நெளிந்து நடுங்கும்படியாகவும், காற்றைப்போன்ற வேகத்தோடுவந்து, மற்றவற்றை நாசஞ்செய்தழிக்குந் தன்மையிலே, யுக முடிவிற் கடலிலிருந்துண்டாகும் வடவாமுகாக்கினியைப்போல முன்னே மிக்க சினத்தோடு விரைந்து வந்தது.

பாவம் பயக்கும் கொடிய வினைகளிலே கைதேர்ந்த அக்கைதவர் நமது நாவுக்கரசரின் எதிரில்

பகைவர்களை யழிக்கும் அந்தக்கரிய மலைபோலும் யானையை ஏவிச்செலுத்தவும் அவர் பயப்படாமல் இட பாரூடராய் விளங்காநின்ற பெருமானுடைய திவ்ய பாதாரவிந்தங்களையே தியானித்துத் தெளிந்திருந் தார். பெருமையுடைய தவசிரேஷ்டராகிய திருநாவுக் கரசு, யானையானது தம்மேல் வருதலைக்கண்டு, தேவர் களுக்குப் பதியாய் விளங்குபவரும இடபத்தின்மேல் வருபவரும் ஆகிய பெருமானைச் 'சுண்ணவெண் சந்த னச் சாந்தும்' என்ற தொடக்கத்தையுடைய திருப் பதிகத்தை யிம்மண்ணுலகி லுள்ளார் உச்சரிக்கும்படி மகிழ்ந்து பாடுவாராயினர்.

## திருக்கெடிலவீரட்டானத்தேவாரம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண் சந்தனச்சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ணவுரிவை யுடையும் வளரும் பவளநிறமு
மண்ணலரண் முரணேறு மகலம் வளாயவரவுந்
திண்ணென் கெடிலப்புனலு முடையா ரொருவர்தமர்நா
மஞ் சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவது மில்லை.

நரம்பெழு கைகள் பிடித்து நங்கைநடுங்கமலையை
யுரங்களெல்லாங் கொண்டெடுத்தா னொன்பது மொன்றுமலர
வரங்கள் கொடுத்தருள் செய்வான்வளர்பொழில் வீரட்டஞ்சூழ்
நிரம்பு கெடிலப்புனலு முடையா ரொருவர்தமர்நா
மஞ்சுவதி யாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை.

திருச்சிற்றம்பலம்.

வஞ்சகராகிய சமணர் தம்மேல்விட்ட மதம் பொ ருந்திய வெவ்விய யானையைப்பார்த்து 'நாம் செவ்விய

சடையோடு கூடிய நீண்ட முடியையுடைய கூத்தரும், தேவர்கட்கெல்லாம் மேலாகிய தேவரும், பெருமானும் வெவ்விய ஒளிபொருந்திய மூவிலை வடிவாகிய சூலத்தை யேந்தியவரும் ஆகிய வீரட்டானேசுவரருடைய அடியார்கள்; ஆகையினால் நாம் அஞ்சுவது யாதும் இல்லை.' என்றுகூறி யருமையாகிய தமிழ்மாலைகள் பாடினூர். இவ்விதமாகத் தமிழ்மாலைபாடிப் பெருமானுடைய கழல்களையே அடைக்கலமாகக் கொண்ட மனத்தோடு இருந்த அன்பு மிகுந்த தொண்டராகிய ஆண்டவரை அந்தயானை வலம் வந்து சுற்றி முன்னூல் கீழ்வீழ்ந்து வணங்கி யாவருங் காணும்படி எழுந்தது. இவ்விதமாகப் பயந்து ஆண்டவரை அந்த யானை வணங்கி யெழுந்து சென்றபோது, அதனைச் செலுத்தி மேலேறிநின்ற பாகர்கள், அதை யப்படி விடாது திருப்பி மறுபடியும் அவர்மேற் பாயும்படி யவரைச் சுட்டிக்காட்ட, அவ்யானை அவர்களையெல்லாம் கீழேவீசி அவர்களையே கொன்றுவிட்டு, சமணர்கள்மேலே எதிர்த்தோடியது. ஓடிச் சமணர்களைப் பிடித்து, மிதித்து இரண்டாய் பிளந்து இவ்விதமாய்ப் பலரையுங் கொன்று பெரிய சமுத்திரத்தைக் கலக்கும் நீண்ட மந்தரகிரிபோல நகரத்தைக் கலங்கச் செய்து அரசனுக்கு மனோவியாகுலத்தை யுண்டுபண்ணியது. அந்த யானையின் கையினின்று தப்பி யோடிப் பிழைத்த சமணர்களெல்லாம் மானங்கெட்டு மனம்வருந்தி மன்னவன் காலில் தனித்தனி வந்து விழுந்து புலம்ப, சன்மார்க்கஞ்செல்லாத அவனும் கோபித்தவனூய் இனிச் செய்வதென்ன வென்றான்

'நம்முடைய சமயத்திலிருந்து அவன் பழகிய முஷ்டி நிலையினாலே, எங்கள் மந்திரங்களை யெல்லாம் வீண் செய்து, யானையினால் உன் சிறப்புடைய நெறியையு மழித்த அவன் தொலைந்த பின்னரே, நெருப்பு நீங் கியவுடனே அதன் பின் புகையு மகன்று விடுவது போல, உன் துன்பங்களும் ஒழிந்துவிடும் என்றார். இரவின் அந்த காரத்தைப் போன்ற அவர்கள் சொல் வதைக்கேட்ட மிருபாதகனாகிய அரசன்] 'நம் பழை மையாகிய சமயத்தையு மழித்து நமக்குந்துன்பம் விளைவித்த அவனை இனிச்செய்ய வேண்டுவதென்ன? சொல்லுங்கள்' என்று கேட்க, வினை மேற்கொண்ட அவர்கள் 'அவனைக் கல்லிற்கட்டிக் கடலிலே போட்டு விடுவதே' என்றார்கள். அரசன் தன் பரிசனர்களைப் பார்த்து 'நமக்குத் தீங்கு செய்தவனாகிய அவனை, அவன் தப்பித்துப் போகாதபடி கொண்டுபோய்க் கல்லில் கயிற்றாற் கட்டி ஒரு படகிலேற்றிக் கொண்டு போய் அலை கடலிலே தள்ளிவிடுங்கள்' என்று கட்ட ளையிட்டனுப்பினான். அதை முடித்தற்குச் சென்ற வேலையாளரோடு மற்றச்சமணர்களும் போய் திருநா வுக்கரசிடம் சென்றடைய அவரும் தமது செவ்விய திருவுள்ளத்திலெழுந்த சிறப்பினாலே இவர்களுடனே கூட வந்தார். இந்தப்பாவிகள் காவலன் கழறியபடி கடலிற்சென்று காரியத்தை முடித்தார்கள். முடித்து விட்டு அவர்கள் திரும்பி விட்டபிறகு, ஒப்பரிய பெ ருங்கடலிற் புகுந்த மெய்த்தொண்டரும் 'எவ்வாறு யினுமாக, நான் எம்பெருமானை வந்திக்கக்கடவேன் என்று துணிந்து தமிழ்மாலை பாடித் பெருமானு

டைய திருப்பஞ்சாட்சரத்தைத் துதிப்பா ராயினர். துன்பம்வந்தகாலத்துக் கைகொடுத்துதவும் 'நமச்சிவாய' என்னும் ஐந்தெழுத்தையும் மிக அன்போடு பொருந்திய வுணர்விலே "சொற்றுணை வேதியன்" என்றாரம்பிக்கின்ற பரிசுத்தமாகிய மொழியாலாகிய நல்லதமிழ்ப் பதிகத்தைப் பாடினர்.

## நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே.

மாப்பிணைதழுவியமாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தகைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே.

திருச்சிற்றம்பலம்.

பெருத்த அன்பையுடைய அரசு தம்மனவுறுதியால், பிரமாமுதலியோரும் துதித்தற்கரிய திருவஞ்செழுத்தைப் பாடினவுடனே, கரிய நீண்ட கடலிலே அந்தக் கல்லானது தெப்பம்போல மிதந்தது. மேலும் அந்தப் பெருங்கல், அரசரானவர் அதன்மீது உட்காந்துகொண்டு செல்லும்வண்ணம் தெப்பமாக மிதந்ததும், கட்டியகயறும் அறுந்தது. அத்தெப்பத்தின்மேலாரோகணித்திருந்த குற்றமற்ற சிறப்பையுடைய மெய்ப்பெருந் தொண்டனாரும் விளக்கமுற்றுத் தோன்

றினர். இருவினையாகிய (நல்வினை தீவினை) கயிறுகளால் மும்மலம் என்று சொல்லும்படியான கல்லிலே பிணிப் புண்டு பாவமென்னும் பெருங்கடலில்விழுந்து தடுமா றும் பலஆன்மாக்களையும், கரையேறியுய்யும்வண்ணம் அருள்செய்கின்ற தன்மைவாய்ந்த திருவஞ்செழுத்து, இங்கே நமது அரசை யிந்தக்கடலிலே ஒருகல்லின்மீது ஏற்றியுய்விப்பதும் சொல்லவேண்டுமோ? பெருமானரு ளாலேவண்டி திருவஞ்செழுத்தைத் துதிக்கப்பெற்ற கருணையாளராகிய நமது திருநாவுக்கரசை, வருணன் முன்பு மகாதவத்தைச்செய்து தனது அலைகளாகிய கைகளால் சிறந்ததன்மையாகத் தன்தலையில் தாங்கும் பாக்கியத்தைப் பெற்றான். சமணர்கள் கட்டியிட்ட கல்லே சிவிகையாக நமது நாவுக்கரசை யாரோகணிப் பித்து, சிறப்புவாய்ந்த வருணனே, சிவிகையாளாகித் தாங்கிச்சென்று, அழகிய திருப்பாதிரிப்புலியூர் என்னும் க்ஷேத்திரத்தின் அருகாமையில் கொண்டுவந்துவிட்ட னன். அந்தத்திருப்பதியிலே வந்தடைந்த அன்பரை, அடியார்கூட்டங்கள் எல்லாம் எதிர்கொண்டு ஆரவாரி த்து 'அரஅர' என்னும் ஓசை எத்திசையினும் பரவும் படி முழக்கினார்கள். அதுபோலக் கடலும் சப்தித்த து. அதாவது அவர்களுடைய அரவென்னுமொலி கட லொலிபோலவிருந்தது. யாவரும் தொழுந்தன்மையா ளராகிய திருநாவுக்கரசும் அடியார்களுடன்சென்று திருப் பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கும், சந்திரசடாதர ராகிய சுவாமியைக்கும்பிட்டு, மிக அன்போடுவிழுந்து நமஸ்கரித்தெழுந்து பெருமானுடைய கருணைத்திறம் உலகில் விளங்கும்படி பாடத்தொடங்கினார்.

ஆகாயகங்கையைச் சடையிலே தரித்தவரும் எல்லாவுயிர்கட்குஞ் சாட்சியாய் நின்றருள்பவரும் ஆகிய பெருமானை 'ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாகி' என்றாரம்பித்து 'தன் அடியாராகிய எமக்கெல்லாம் தோன்றாத்துணையாகி யிருந்தார் பெருமான், என்னும் திருப்பதிகமாகிய தண்டமிழ்மாலை சாத்தித் துதித்தார்.

## திருப்பாதிரிப்புலியூர் -

திருச்சிற்றம்பலம்.

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
வேன்றாலிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே.

'நறுபபட

பொருர்தாவரக்கனுடல்நெரித்தாய்பாதிரிப்புலியூ
ரிருந்தாயடியேனினிப்பிறவாமைவந்தேன்றுகொளே.

திருச்சிற்றம்பலம்.

மேலும் இதுபோன்ற பதிகங்களைப்பாடி அங்கே தங்கியிருந்து பின், திருவீரட்டானேசுரர் பாதங்களை வந்திக்க வேண்டுமென்று மிக்க கருத்தினாலே அதிக ஆசை கொண்டு அவ்விடம் விட்டுத் திரிபுரதகன க்ஷேத்திரமாகிய திருவதிகையை யடைவதற்குப புறப்பட்டார். வழியில் பெருமானெழுந்தருளி யிருக்கும் திருமாணிகுழி, திருத்தினைநகர் என்ற இரண்டு க்ஷேத்திரங்களிலும் சென்று கடவுளைப் பதிகம்பாடி வந்தித்துப் பின், பூக்கள் மலர்ந்த சோலைகளின் நறுமணமானது தன் அடிகளில் வீசும்படியாக அவற்றைக்

கடந்து சென்று திருநாவுக்கரசர் வளம் பொருந்திய திருக்கெடில நதியைத் தாண்டி அக்கரையில் திருவதிகையை யடைந்தார். சமணக்கொடியோர்கள் செய்த வஞ்சனையாகிய கொடுமைகளையெல்லாந் தீர்த்து வெற்றிகொண்டு ஏறிய தமிழ்நாவலர் எழுந்தருளியதும், மேகத்தையளாவிய மாடங்களை யுடைய திருவதிகையிலேயுள்ள அன்பர்களெல்லாரும் குதூகலித்து மங்கல வாழ்த்துகள் கூறி யாரவாரித்தார்கள். அழகியதோரணங்களையும், குலைக்கமுகுகளையும் மடலோடு கூடிய வாழைகளையும் நாட்டி, எழுநிலைக் கோபுரங் களிலும் தெற்றிகளிலும் விளங்குகின்ற பூமாலைகள் தொங்கவிட்டு, எங்கும் செஞ்சாந்து பூசி இவ்விதமாக, முன்னே இயல்பிலேயே அழகாயிருந்த அந்த நகரத்தை மேலும் அலங்கரித்தார்கள். நிலை பெற்ற அன்பையுடைய அந்த வதிநகர் வாசிகளாகிய ஆண்பெண் இருவர்களின் வாழ்த்தொலியும், ஏழு இசையின் ஒலியும் எங்கும் சப்திக்கப் பொன்னிறமாகிய சுண்ணப்பொடியும், பூக்களும் பொரிகளும் எங்குந்தூவி அந்தப் பழமையான நகரின் புறத்தே வந்து திருத்தொண்டரை எதிர்கொண்டார்கள்.

பரிசுத்தமான சுத்ததாவள்யமான திருநீற்றினொளிமிக்க அழகிய மேனியும் உருத்திராக்கமாலைகளும், பெருமானுடைய சிவந்த திருவடிகளையே தியானிக்கும் மனமும், உள்ளே, அன்பானது நைந்து நைந்துருகி வெளிப்பாய்வதுபோல நீரையிடையறாது பொழியும் கண்களும், தமிழ்ப்பதிகங்களாம் செவ்விய சொற்

களைச் சொலலும் சிறந்தவாயும் ஆகிய இவற்றை யுடையாராகிய ஆண்டவரசு திருவீதியுட் பிரவேசித் தார். இவரைக் கண்டவர்கள் தங்கள் கைகளைச் சிர சின்மேற்கொண்டு அஞ்சலிசெய்து "இவரது" முன் பொழியுங் கருணைபுரிவடிவத்தைக் கண்டபின்னும் இவர்க்குத் தீங்குசெய்ய அக்கொடுஞ் செயலாளராகிய சமணர்களுக்கு, எப்படி கோபம்வந்தது என்பார்கள். மேலும் அக்கொடியோர் கோபத்தினின்றும் தமது தொண்டரை ஆண்டுகொண்ட பெருமானைத் தொழுது துதிப்பார்கள். இவ்விதமாகப் பலமனிதர்களும் தத்த மக்குத் தோன்றியவாறு சொல்லித்துதிக்கவும், உடம் பில் விபூதி பிரகாசிக்கப்பெற்ற அடியார் கூட்டங்கள் நெருங்கிச் செல்லவும் இவ்விதமாக வீதியில் மேவிய அன்பர் சென்று, சிவந்தபவளம்போன்ற மேனியையு டைய சிவபெருமானுடைய கோயிலாகிய திருவீரட் டானத்தைச் சேர்ந்தார். உள்ளேசென்று தேவர்தலை வராகிய தம்பெருமானை நமஸ்கரித்து அவரையே நம் பிய உறுதியுடைய மனத்தின் மிக்கஆசையினாலே 'எம் பெருமானை யேழையே னன் பண்டிகழ்ந்த வாறே'ன் னும் திருத்தாண்டகமாகிய செந்தமிழ்ப் பதிகத்தைத தம் அன்பு மிகுதியினால் பாடித்துதிசெய்து இருந்தார்.

## திருவீரட்டானம். ஏழைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வெறிவிரவுகூவிளநற்றொங்கலானை
வீரட்டத்தானைவெள்ளேற்றினானைப்
பொரியாவினானைப்புள்ளூர்தியானைப்
பொன்னிறத்தினானைப்புகழ்தக்கானை

யறிதற்கரியசிரம்மான்றன்னை
யதியரையமங்கையமர்ந்தான்றன்னை
எறிகெடிலத்தானையிறைவன்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே.

தொல்லைவான்சூழ்வினைகள்சூழப்போந்து
தூறறியேனறறியேன்சுடராய்நின்று
வல்லையேயிடர்தீர்த்திங்கடிமைக்கொண்ட
வானவர்க்குந்தானவர்க்கும்பெருமான்றன்னைக்
கொல்லைவாய்க்குருந்தொசித்துக்குழலூதுங்
கோவலனுநான்முகனுங்கூடியெங்கும்
எல்லைகாண்பரியானையெம்மான்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே.

திருச்சிற்றம்பலம்.

பிரம விஷ்ணுகளுக்கு மெட்டாது அடியவர்களு க்கு மிக எளிதில் விளங்குபவராய்க் கெடிலமென்னும் நீண்ட நதியால் சூழப்பெற்ற திருவதிகையிலே வீற்றி ருக்கும் அமுதம்போன்ற இனியபெருமானை, யாவரா லும் தெரிதற்கரிய பெருந்தன்மையையுடைய திருநா வுக்கரசர் மனத்திலே எழுந்த மிக்கஆசையினால் செந் தமிழ்ப் பதிகங்கள் பல பாடித்திருப்பணிசெய்துகொ ண்டு வருங்காலத்திலே, தன் இழிந்த புத்தியால் சம ணர்சார்பாய் அவர்கள்பொருட்டுத் தீங்குசெய்துவந்த பல்லவராசனும் தன் முன்வினையாகிய பாசம் நீங்கும் படியாக துன்பத்தைவிட்டு நீங்கி திருவதிகையையடை ந்து ஆண்டவரைப் பணிந்து, சமணத்தைப் பரித்தி யாகம் செய்துவிட்டு சிவபெருமானை வந்தித்துய்யும் பேற்றினையுடைய சைவனானன். மோட்சவிலக்கணத் தை யறியாத சமணர்முன் தனக்கு உண்மையென்று

போதித்த வார்த்தைகளை இப்போது பொய்யென்று கண்டு உண்மையையுணர்ந்தவனாகிய அப்பல்லவனும், பாடலிபுத்திரத்திலுள்ள சமணபள்ளிகளும், அறைகளும் மற்றைக்கட்டிடங்களையும் ஒருங்கே யிடித்துக் கொண்டுவந்து இங்கேதிருவதிகையிலே நெற்றிக்கண்ணுடைய சிவபெருமானுக்குக் குணதரவீச்சுரமென்னும் கோயிலைக் கட்டினான். இந்நாட்களிலே, பெருமானது திருப்பணிகள் செய்துவந்த இன்றமிழ் வேந்தராகிய திருநாவுக்கரசு முனிவர், சடாபாரத்தின்மேல் சந்திரனையும் பல பாம்புகளையும் அணிந்தவராகிய சிவ பெருமானது திருப்பதிகள் பலவற்றையும் போய்த் தரிசித்து, திருநாமங்களைத்துதிக்கும் தமிழ்ப்பதிகங்களையும்பாடி திருப்பணிசெய்தற்கு நினைந்தெழுந்தார். திருவதிகையின் பக்கத்தேயுள்ள திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய க்ஷேத்திரங்களையும் தரிசித்துத் திருப்பதிகம்பாடி, மிக்க விருப்புடன் பெருமானெழுந்தருளி யிருக்கும் திருப்பெண்ணாகடத்தை யடைந்து மேகமளாவிய மாடங்களிலே, வேதவோசையை வளர்க்கும் பிராமணர் வாழுமந்தப்பதியினுள்ளே சென்று பெருமானெழுந்தருளி யிருக்கும் திருத்தூங்கானைமாடத்தை, உலகம் எல்லாம் பரவும் முனிவராகிய ஆண்டவரசு வணங்கித் துதித்துப் பரவிப்பெருமானுடைய சந்நிதானத்திலே நின்று 'எம்பெருமானே! இழிந்த மார்க்கமாகிய சமணசமயக்கட்டுண்டு அலைந்த இவ்வுடலுடனே உயிர்வாழ எனக்குத் தரிக்கவில்லை. தேவரீருடைய சூலம், இடபம் ஆகிய முத்திரைகளை என்மீது தாரணஞ்செய் தருளவேண்டும்' என்று விண்

ணப்பித்த செழுந்தமிழ் மாலையைப்பாடுவாராய் 'பொன்னார்திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்' என்றாரம்பித்து எல்லாப் பொருள்கட்கும் முன்னும் ஆகி முடிவும் ஆகியவரும், பார்வதியையொருபாகத்தில் வைத்தவரும், ஆகிய சங்கரனை துதிக்கும் திருவிருத்தத்தைப் பாடினார்.

## திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக்கொன்றுண்டுவிண்ணப்பம்
 போற்றிசெய்யு
மென்னாவிகாப்பதற்கிச்சையுண்டே
 லிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறி
 மேவுகொண்டற்
றுன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்
 சுடர்க்கொழுந்தே.

கடவுந்திகிரிகடவாதொழியக்
 கயிலையுற்றான்
படவுந்திருவிரலொன்றுவைத்தாய்பனி
 மால்வரைபோ
லிடபம்பொறித்தென்னையேன்றுகொள்ளாயிருஞ்
 சோலைதிங்கள்
தடவுங்கடந்தையுட்டூங்கானைமாடத்தெந்

திருச்சிற்றம்பலம்.

செல்வம் பொருந்தும் திருத்தூங்கானைமாடத்தில் எழுந்தருளியிருக்கும், மேருவில்லராகிய பெருமானுடைய திருவருளாலே உடனே ஓர் சிவபூதமானது,

பக்கத்திலிருந்த மற்றொருவருமறியாதபடிவந்து நமது வாகீசப்பிரபுவினது திருத்தோள்களில், ஒப்பற்ற மூவிலைச்சூலத்தையும் இடபத்தையும் முத்திராதாரணம் சாத்திச்சென்றது. அவரும் தம்முடைய தோள்களிற் பொறித்த முத்திரையைப்பார்த்து மனங்களித்து பெருமானுடைய திருவருளை நினைந்துநினைந்து, ஆறுபோல் கண்களிலிருந்து சலம்வடியததுதித்து நமஸ்கரித்துஅன்பினால் மிக்கமனதுடையராய் 'நான்உய்ந்தேன்' என்று சொல்லிக்கொண்டெழுந்தார். அங்கே அத்தூங்கானைமாடத்திலுள்ள பெருமானது திருவடிகளைப் பாவித் திருப்பணிசெய்துகொண்டிருக்கும் நாளிலே, பூஞ்சோலைகளின் வாசங்கமழப்பெற்ற ஒப்பற்ற திருவாத்துறையையும், மேகமளாவியசோலைசூழ்ந்ததிருமுதுகுன்றத்தையும் பணிந்து, தமிழ்ப்பதிகங்களாகிய மாலையை பெருமானுக்குச்சார்த்திப், பக்கத்திலேயுள்ள, நீர்வளம் பொருந்திய திருப்பதிகளிலே சிவபெருமானெழுந்தருளியிருக்கும் கோயில்களையுங் கும்பிட்டுப் பின் மேற்றிசையிலே தாமரைத் தடாகங்கள்சூழ்ந்த நிவாக்கரையிலேயே செல்வாராயினர். குறையாத சிறப்பையுடைய திருத்தில்லையம்பலத்திலே ஆனந்த நடனம் செய்யாநின்ற கங்காசடாதரராகிய கனகசபேசரின் பாதாரவிந்தங்களில் நமஸ்கரித்து, இந்த உடம்பாலும் உயிராலும் அடையக்கூடிய பயனைப்பெற நினைத்துத், தேன்பொருந்து மலர்கள்நிறைந்த சோலைகள்சூழ்ந்த திருத்தில்லையின் பக்கத்தே வந்தடைந்தார். பிரமவிஷ்ணுக்களுக்கெட்டாத பெருமானனவர் திருநிருத்தஞ்செய்தருளும் சிதம்பரத்தின் எல்லையில் வந்தவுடனே

கீழேவிழுந்து நமஸ்கரித்தெழுந்தபின் மேன்மேலும் அதிகரிக்கும் வேகத்துடன்சென்று, சோலைகளிலேமிக ஆனந்தத்துடன் மயில்கள் எதிரெதிராடவும், வாசனை பொருந்திய தாமரைப்பூக்கள்நிறைந்த தடாகங்களின் மலர்கள் பெண்கள் முகத்தைப்போல் விளங்கவும்பெற்ற மருதநிலமாகிய வயல்களின் பக்கத்தே வந்தார். அங்கே வாசனைமிக்க தாமரைப்படுகரிலே, மேதிக் கூட்டங்கள், பூக்கள் ஏராளமாய் இருப்பதனால் அவற்றையே தமக்கு இரையாகக்கொள்ளும் அம்மருதநிலத்திலேயுள்ள வளம்பொருந்திய வயல்களிலெல்லாம் அடர்த்தியிலும் அளவிலும் மூங்கிற்காடுபோல வளர்ந்திருக்கிற கரும்புகள் முத்தைச்சொரிந்துகொண்டிருப்பன. அப்படிச்சொரிதல் அகல நமது பெரியோராகிய திருநாவுக்கரசினுடைய திருமேனியின் விளக்கத்தைக் கண்டு உள்ளுருகி அன்பினால் கண்ணீர் விடுவனபோன்றிருந்தது.

இக்கரும்பு வயல்களையும் பக்கத்திலேயுள்ள நெல் வயல்களையுங்கடந்து, அறிவிற்பெரியவராகிய அரசர், 'பிறவியாகிய பவநெறிவிட்டு' நன்னெறியடையவேண்டியவர்களே! இருவினையாற்பெருகும் இந்தப்பாசப்பற்று அறும்படி இத்தலத்தைச் சாருங்கள்! என்று குயில் கொம்புகளின்மீது இருந்து கூவுதற்கு இடமாகிய மரங்கள் பலநிலையாகச்செறிந்த திருநந்தனவனத்தை எதிரேகண்டார். அவர் அதைக்கண்டு முன்னேபணிந்து அதனிடம் அணைய அங்கே கொம்புகளின்மீது பக்கங்களிலெல்லாம் வளரும் இறகுகளையுடைய கிளிகளுங்

எழும், இவ்விதமாகப் பிரகாசிக்கும் சடாபாரத்தோடு நின்றாடுகின்ற எமதையனது திருக்கூத்தைக் கும்பிட்ட அவர் அன்பின் பெருக்கத்திற் களவேயில்லை. இத்தன்மையராகிய திருநாவுக்கரசு, பலவிசைவீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து, ‘எப்போது வந்தாய்’ என்னும் குறிப்பு வெளிப்படும்படி அம்பலத்தினிடத்தே நடனஞ்செய்யும் பெருமான் ஆன்மாக்கள்மீதுவைத்த கருணையினாற் பொழியும் அருளைப்பெற உளதாகும் ஆனந்தமெய்ப்பாட்டிலே, திருவிருத்தமாகிய தமிழ்த்திருமாலைபாடி பின்னும் மேன்மேலும் தம்மனத்திற்பெருகிய அன்பினால் திருநேரிசைப் பதிகத்தையும் கட்டளையிட்டார். “பத்தனாய்ப் பாடமாட்டேன்” என்றுதொடங்கி இசைபொருந்திய பாடலால் ‘அத்தனே! உன் திருநடனந் தரிசிக்கும்பொருட்டு நான் வந்தது’ என்று துதித்து நின்றே யினிய தமிழ்ப்பதிகம்பாடிப் பின், கையினால் உழவாரத் திருத்தொண்டுசெய்யும் ஆசையோடு, வணங்கித்துதித்துத் திரும்பினார்.

## கோயிற் றிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே.

மண்ணுண்டமாலவனும்மலர்மிசைமன்னினானும்
விண்ணுண்டதிருவுருவம்விரும்பினார்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்கதில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும்பரமநீயாடுமாறே.

திருச்சிற்றம்பலம்.

மணிகள் பிரகாசம் வீசிநிறைந்த, கோயிற் றிருமுன்றிற் பக்கத்திலும் நீண்டகொடிகள் சூழ்ந்த அழகிய தேர்வீதியிலேயும், தம்மாற்கூடிய திருப்பணிகளை செய்து பெருமானைத் துதித்து, 'நமக்கு மன்னிய சிறப்பின்மிக்க வர்ச்சனை பாட்டே யாகும்' என்ற பெருமானுரைப்படியே வாக்குப்பணியாகிய திருப்பதிகம் பாடுதலையும் செய்துவந்தார். பெருமானதருளால் உண்டாகும் பெரும்மகிழ்ச்சியானது அதிகரிக்க 'அன்னம்பாலிக்கும்' என்றாரம்பிக்கும் திருக்குறுந்தொகைகளைப் பாடியும், பெருகிபெருகின்ற ஆசையோடும் உழவாரத் திருப்பணியைச் செய்தும், கண்டோர் விரும்பும் தமது திருமேனியில் ஆனந்தபாஷ்பமாகிய கண்ணீரானது, பூசியுள்ள திருவெண்ணீற்றிய வெண்படல் ஆட, அநேக திருப்பணிகள்செய்தும், அங்கே விளங்கி யிருந்தார். அந்நாட்களில் நமது வாகீசகர் திருவேட்களம் என்னும் திருப்பதியிற்சென்று இடபக்கொடி யுயர்ந்த இறைவனைவணங்கிப் பதிகம்பாடினார்.

பின் திருநீலகண்டராகிய பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கழிப்பாலை என்னும் க்ஷேத்திரத்தைப் உலகுய்யும்படி வந்தடைந்தார். இடபமாகிய கொடியையும் வாகனத்தையுமுடைய மணவாளநம்பியாகிய பெருமானுடைய பாதங்களில் நமஸ்கரித்து, அழகிய பவளம்போன்ற தமது திருவாயைத்திறந்து 'வானவர்க்குந் தானவனே யென்கின்றாள், என்னும் திருப்பதிகத்துடன் அன்பாலாகிய தண்டமிழ்மாலைபாடி,

## திருக்கழிப்பாலை.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வனபவளவாய்திறந்துவானவர்க்குந்தானவனே
யென்கின்றாளாற்
சினபவளத்திரடோண்மேற்சேர்ந்திலங்குவெண்ணீற்ற
னென்கின்றாளா
லனபவளமேகலையோடப்பாலைக்கப்பாலா
னென்கின்றாளாற்
கனபவளஞ்சிந்துங்கழிப்பாலைச்சேர்வானைக்
கண்டாள்கொலோ.

அடர்ப்பரியவிராவணனையருவரைக்கீழடர்த்தவனே
யென்கிளொற்
சுடர்ப்பெரியதிருமேனிச்சுண்ணவெண்ணீற்றவனே
யென்கின்றாளான்
மடற்பெரியவாலின்கீழறநால்வர்க்கன்றுரைத்தா

கடற்கருவிசூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்
கண்டாள்கொலோ.

திருச்சிற்றம்பலம்.

யங்குச் சிலநாளிருந்து யார்க்கும் நினைத்தற்கு மரிய பரம்பொருளைத் துதித்துப் பின் செல்வம் நீடும் தில்லைநகரை நினைந்து திரும்பினார்.

வீடுகளின் முற்றங்களிலே கடலலைகள் சங்குகளை ச்சொரிகின்ற திருக்கழிப்பாலையை நீங்கிப், பூநிறைந்த கிளைகளோடுகூடிய மரங்களடர்ந்த குளிர்ந்த சோலை வழியாக வரும்போது 'தம்மை நினைப்பவர்க

ளது மனத்தையே கோயிலாக்கொண்டு வசிக்கும், கனகசபைத் தாண்டவரைக் கொஞ்சநேரமேனும் மறந்துய்வேனோ' என்றுபாடிக்கொண்டுசிதம்பரத்தை யடைந்தார்.

## கோயிற்றிருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கைமும்மதவேழமுரித்தவ
னினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ.

ஈங்குமால்வரையேந்தலுற்றான்சிரம்
வீங்குவிம்முறவூன்றியதாளினன்
தேங்குநீர்வயல்சூழ்தில்லைக்கூத்தனைப்
பாங்கிலாத்தொண்டனேன்மறந்துய்வனோ.

திருச்சிற்றம்பலம்.

விளங்குகின்ற பிரகாசமானது எவ்விடத்தும் பரவி எல்லா வுலகத்திலும் விளங்கிய கனகசபை யிடத்தே ஆனந்தத் திருநடனஞ்செய்பவரும், அடியவர்களுக் கெளியவரும் ஆகிய பெருமானை, 'அரியானை' என்றாரம்பித்து அடியவர்கள் எப்போதும் தம் மனத்திடத்தே வைத்துப்போற்றும்படியான பெரிய திருத்தாண்டகமாகிய செந்தமிழ்மாலை பாடிப் பணிந்து

## கோயிற்பெரியதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை
யருமறையி னகத்தானை யணுவையார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்

கரியானை நான்முகனைக் கனலைக்காற்றை
  கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற.
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
  பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

காரொளிய திருமேனிச் செங்கண்மாலுங்
  கடிக்கமலத் திருந்தயனுங் காணவண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்றதொல்லைத்
  திகழொளியைச் சிந்தைதனை மயக்கந்தீர்க்கும்
ஏரொளியை யிருநிலனும் விசும்பும்விண்ணு
  மேழுலகுங் கடந்தண்டத் தப்பாநின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப்
  பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

திருச்சிற்றம்பலம்.

பின்னும் துதிப்பாராகிச் 'செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா வெறிக்கும்' என்றாரம்பிக்கின்ற சிறந்த உண்மைப்பொருளுணர்த்தும், அழகிய சொல்லாகிய செந்தமிழ்மாலையை யாரும் வியக்கும்படி பாடி அன்பு நிறைந்தமனத்தாலே இடையறாது நீர் பொழியும் கண்களையும் பெருமானைப் பரவிய சொற்கள் பிறக்கும் வாயையும், உடையராய் தம்செய்கையிலே இடையறாது நிகழ்கின்ற உழவாரத் திருப்பணியையும் மாறாது செய்து இருந்தனர். அந்நாட்களில், யுகக்கடையிலே பிரளயகாலத்திலே பெருகிய கடல் மீது தோணிபோல மிதந்ததென்று சொல்லப்பட்டிருக்கின்ற சீகாழித் திருப்பதியிலே எழுந்தருளிய, இடபக் கொடியை யுடைய பெருமானது திருவருளால் பார்வதிதேவி தனது திருமுலைப்பாலோடு பெருகிய சிவஞானத்தையுங் குழைத்தூட்ட அதை உண்

டருளிய ஆளுடைய பிள்ளையாருடைய செய்திகளை அடியார்கள் வந்து சொல்லக் கேள்விப்பட்டார்.

அம்மையாரின் திருமுலைப்பாலருந்திய அப்பொழுதே, கடல்விஷத்தை யமுதமாக உட்கொண்டபெருமானை 'இவன் எம்மான்' என்று சுட்டிக்காட்டி வழிசைகளும் பொருந்திய வண்டமிழ்மாலையைச் சொல்லவல்லராகிய, சீர்காழியிலவதரித்த பெருந்தகையாகிய ஆளுடையபிள்ளையாருடைய சிறப்பை கேட்டவுடன், அதிசயமாகிய ஆசைமேற்கொள்ள, அவருடைய மலர்ப்பாதங்களை வணங்கவேண்டுமென்று தம்மனத்திலே மிக்க விருப்பம் உண்டாக அப்போதே, கனகசபைக்கண் திருநிருத்தம் செய்தருளும் பொற்பாதங்களை வணங்கி பெருமானது அருள்விடை பெற்றுப், பொய்யாகிய பிறவிநோய் நீக்கும் திருவீதியைப் புரண்டு சுற்றிவந்து மேற்சென்று எல்லாவுலகத்திலும் சிர்சிரம்பப்பெற்ற அந்தத் தில்லையினெல்லையை நமஸ்கரித்துத் துதித்துப்போய்ச் சொல்லற்கரிய பெருமையையுடைய திருநாரையூரைத் தரிசித்துப் பாடி மேற்செல்வாராயினார். அடியார் கூட்டமானது தம்மைச் சூழ்ந்து வரவும், அஞ்சலிகூப்பிய கைகளையுடையராய்த், திருநீற்றுப்பூச்சு நிரம்பிய திருமேனியானது பார்த்தவர்களுடைய மனமெல்லாம் கசிந்து கரைந்து உருகச்செய்யும் உட்கருணையை மேலேகாட்டும்படியான கருணைவடிவுடனே, சமஸ்கிரதத்திலேயுள்ள எழுதாக்கிளவியாகிய வேதத்தை எழுதுமறையாகத் தமிழிற் செய்தருளிய ஆளுடையபிள்ளையா ரவதரித்த சீர்காழியின்

பக்கத்திற் சார்ந்தார். மலையை வில்லாகவளைத்த பெருமானால் முன்னே சூலைநோயைத் தந்து நேரே ஆட்கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசு அங்கே எழுந்தருளிய செய்தியை ஆளுடையபிள்ளையார், கேட்டு அவரைக்காணவேண்டுமென்ற பெரும் விருப்பமானது எழுகின்ற திருவுள்ளத்தோடும், அருள்கூடப்பெற்ற அன்பர்கள் பக்கத்தே சூழ்ந்துவர, எழுந்தருளி நமதரசின்முன்னே வந்தார். முன்னாற் பார்த்ததும் அஞ்சலிசெய்து ஆண்டவரசு அன்பினால் உள்ளமுருகச், சூழவந்த அடியார் கூட்டத்தினுட்புகுந்து குற்றமற்ற ஆசையோடு பிள்ளையார் பாதங்களில் நமஸ்கரிக்க, இடபத்தின்மேல் வருவாராகிய பெருமானை 'அம்மே! அப்பா!' என்றழைத்த பிள்ளையாரும் அரசைத் தமது அருமைத் திருக்கரங்களால் அவர் கைகளைப் பிடித்து எடுத்து இறைஞ்சி, 'அப்பரே!' என்றழைத்தார். அதற்கவரும் 'அடியேன்' என்றார். பார்வதி தேவியானவள் செவ்விய பொற்கிண்ணத்திலே அமுதத்தையும் ஞானத்தையும் குழைத்துத் தந்ததனால் அழுகை தீர்ந்திருந்த பவளம்போலச் சிவந்த வாயினையுடைய ஆளுடையபிள்ளையார், திருநாவுக்கரசு என்னும் சிறந்த சீரையுடைய இவ்விரண்டு பெரியோரும் கூடிய அங்கே சூழவிருந்த அடியவர்களெல்லாம் மிக இன்பமெய்தித், தேவர்களும் வந்திக்கும்படியாக 'அரகர' வென்னும் சிவ சப்தத்தை உலகமெல்லாம் நிறைத்தார்கள். 'பிள்ளையாருடைய பாதங்களை வந்திக்கப் பெற்றே' னென்று நாவுக்கரசு மகிழவும், இவ்வாகீசரைக் காணப்பெற்றதற்குப் பிள்ளையார் உவக்கவும், இவ்வித

மாக மனத்தில்நிறைந்த ஆசையினால் ஒருவரோடொருவர் உண்மையாகக்கலந்த நேசங்கொண்டு இருவரும் புகக்கடையிற் . கடல்மேல் தோணியிலே வீற்றிருந்தவராகிய தோணியப்பார் திருப்பாதங்களை வணங்கும் விருப்பம் மிக்கவராயினார்கள். உலகங்கள் மீதெல்லாம் பெருகிய அருள்வைத்த ஒப்பற்ற கடலும், அன்பு வாய்ந்த கடலும் போன்று விளங்குகின்ற உண்மைப் பொருள் கொண்டதும், சமயங்களிலெல்லாம் முதன்மையானதுமாகிய சைவமார்க்கமானது பெற்ற புண்ணியத்தின் வடிவாகிய இரண்டு கண்களைப்போலவும், உலகங்களுய்யும்படிக்கு கரியவிஷத்தைப் பானம்பண்ணியருளிய பெருமானுடைய வருளும், இந்த உலகங்கட்கெல்லாந் தாயாகிய உமாதேவியினருளும் போலவும், தம்மில் ஒன்று சேர்ந்து, சாஸ்திரங்களின் ஞானத்தையுடைய பிள்ளையாரும், திருநாவுக்கரசும் ஆகிய இருவரும் கூடிக், சிவந்த சடாபாரத்தை யுடைய பெருமானுடைய ஆலயத்தை யடைந்தார்கள்.

வண்டுகள் கீதம்பாடற்கிடமாகிய சோலைகள் சூழ்ந்த அச்சீகாழிப்பதியிலே எழுந்தருளிய பெருமானுடைய கோயின்முன் திருக்கோபுரத்தை நமஸ்கரித்தெழுந்து உள்ளே சென்று, விண்ணும் கீழ்ப்படியும்படி ஓங்கியதாகிய விமானத்தை வலம்வந்து நமஸ்கரித்தெழுந்தார்கள். அப்போது அச்சீகாழியிலவதரித்த பிள்ளையார் அரசை நோக்கி "அப்பரே! உங்கள் தம்பிரானைப் பாடுவீராக" என்று மொழியக், கண்ணீர் பொழிந்து கசிந்து நின்ற திருநாவுக்கரசும் வேத

வுண்மை விளங்கிய பதிகம் பாடுவாராய், பெருமாட்டியாகிய தேவியோடு, திருத்தோணியின்மேல் விரும்பி வீற்றிருந்தருளிய பெருமான் சன்னிதியில் நின்று மிக்க பக்தியோடும் அன்பு பொருந்திய செந்தமிழ் மாலையாகிய "பார்கொண்டுமூடி" என்னும் பதிகம் பாடித் துதித்துச்

## திருக்கழுமலம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லா
நாலைந்துபுள்ளினமேந்தினவென்பர்நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண்டோவந்தணூழியகலிடமே.

கரையார்கடல்சூழிலங்கையர்கோன்றன்முடிசிதறத்
துலையாமலரடியூன்றலுமுள்ளம்விதிர்விதிர்த்துத்
தலையாய்க்கிடந்துயர்ந்தான்றன்கழுமலங்காண்பதற்கே
மலையாப்பரிசிவைநாடோறுநந்தமையாள்வனவே.

திருச்சிற்றம்பலம்.

சன்னிதியை விட்டு அருமையோடு வெளியே வந்து பிள்ளையாருடைய திருமடத்திலே எழுந்தருளியிருந்து திருவமுதுசெய்து, பொருந்திய சிநேகமும் பந்துத்துவமும்,—மற்றைச் சாமானியருள் நாள் ஏற ஏறக் குறைவது போலாகாது, அன்று இருந்தது போலவே மேன்மேலும் வளரும்படியாக இருவரும் சேர்ந்து பலநாள் இருந்தார்கள். இவ்விதமாக இவ்விருவரும் கலந்து இருந்ததனாலுண்டான மகிழ்ச்சியினாலே அளவில்லாத உள்ளமலர்ச்சிபெற்று இருந்த நாட்களிலே, திருநாவுக்கரசர் காவிரிபாயும் சோழநாட்

திருநீலகண்டராகிய பெருமான் எழுந்தருளிய தலங்கள் பலவற்றையுந் தரிசிக்கவேண்டும் என்று உண்மையான மிக்க ஆசை தம்மனத்தே உண்டாக அதைப் பிள்ளையாருக்குச் சொன்னர். அவரும் ஆம் என்று சம்மதித்து உடன்பட்டார். திருநாவுக்கரசுபோவதற்குப் புறப்பட அவரோடு பிள்ளையாரும் போய் திருக்கோலக்காவை இருவரும் தரிசித்துப் பிள்ளையார் சீகாழிக்குத் திரும்பினர். அப்பரும் இவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரங்களான திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி முதலியவற்றையடைந்து வானேர் பெருமானை வந்தித்து மேற்செல்வராயினர். எப்போதும் சலம் மாருது ஓடுகின்ற காவிரியாற்றின் இருகரைகளிலுஞ் சேர்ந்து இடபக்கொடியை யுயர்த்திய பெருமானுடைய திருச்செம்பொன்பள்ளியைப்பாடித் துதித்துப் பின், உயர்ந்த சோலைகள் சூழ்ந்த திருமயிலாடுதுறையும், இன்னும், நீண்ட காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருவெதிர்கொள்பாடி என்பவற்றை யடைந்து செந்தமிழ்ப்பதிகஞ் செப்பிப் போற்றி பெருமானுடைய திருப்பதிகள் பிறவற்றையும் வணங்கித் துதித்துச் சென்று, பசுவின் கண்ணுள்ளதாகும் பஞ்சகவ்யத்தை அபிஷேகமாக ஏற்றுக்கொண்ட பிரானர் எழுந்தருளிய திருக்கோடிகாவையடைந்து துதித்துப் பின் திருவாவடுதுறையைச் சேர்ந்தார். "ஆவடுதண்டுறையாரை அடைந்துய்ந்தேன்" என்னும் திருத்தாண்டகத்தை யருளிச்செய்து,

## திருவாவடுதுறைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநால்வேதங்கரைகண்டானை
ஞானப்பெருங்கடலைநன்மைதன்னைக்
கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக்
கற்பகமாயடியார்கட்கருள்செய்வானைச்
செம்பொன்னைப்பவளத்தைத்திரளுமுத்தைத்
திங்களைஞாயிற்றைத்தீயைநீரை
யம்பொன்னையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே.

தரித்தாரை
தக்கன்றன்பெருவேள்விதகர்த்தான்றன்னைப்
பிரித்தானைப்பிறைதவழ்செஞ்சடையினானைப்
பெருவலியால்மலையெடுத்தவரக்கன்றன்னை
நெரித்தானைநேரிழையாள்பாகத்தானை
நீசனேனுடலுறுநோயானதீர
வரித்தானையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை, திருநேரிசை, சந்தவிருத்தங்கள் முதலாயினவற்றையும் வெவ்வேறாக, பாவலராகிய திருநாவுக்கரசு, செந்தமிழ் மாலைகளாய்ப் பெருமானுக்குச் சாத்தி மேன்மேற்கிளம்பின அன்போடும், உலகத்தவர்களெல்லாம் புகழும்படியாகப் பலநாள் அங்கே தங்கி உழவாரக் கைத் திருப்பணியை செய்து கொண்டு வந்தார். பொன்னையும் மணியையும் வீசும் அலைகளையுடைய காவிரிக்கரையில் இருக்கும் திருவிடைமருதூரை அடைந்து மிருந்த அன்போடும், மானைக்

கையிலேந்திய பெருமானுரை வணங்கித் துதித்துத் தமிழ்மாலை பலவற்றைப் பாடிப் பின், திருநாகீச்சுரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் போற்றி யரியபதிகம் பாடிச் சென்று வாசங்கமழும் சோலைகள் சூழ்ந்த பழையாறை யடைந்து பின் திருச்சத்தி முத்தத்தில் வந்து சேர்ந்தார். அங்கே பார்வதிதேவியின் மனப்பூர்வமான அன்பின் பூசையை ஏற்றருளிய, எப்போதுமடியவர்கட் கினியவராகிய பெருமானைப் பணிந்து துதித்து இயல்பாயெழும் உழவாரத் திருப்பணியை கோயிற் றிருமுன்றிலிலே செய்து தமிழ்மாலையையும் சாத்துவாராய் "கோவாய் முடுகி" என்று தொடங்கி, 'இயமன் வந்து என்னை எதிர்ப்பதன் முன்னே, மலர் போன்ற தேவரீரது பாதங்களை என் தலைமேல் வைத்தல் வேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்து திருப்பதிகம் பாடினுர்.

## திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம்.

### திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே.

பொறித்தேரரக்கன்பொருப்பெடுப்புற்றவன்பொன்முடிதோ
ளிறத்தாளொருவிரலூன்றிட்டலறவிரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய்கொடியேன்செய்குற்றக்கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்.

அப்போது பெருமானவர் 'திருநல்லூரில் வருவாயாக' என்று ஆக்ஞாபிக்க, வாகீசரும் வணங்கித் துதித்து மிக மகிழ்ச்சியோடும், நன்மைதரும் பெருமானுடைய அருள்வழியே வந்து திருநல்லூரை யடைந்து பெருமானை நமஸ்கரித் தெழுகின்ற அளவிலே 'உன்னுடைய எண்ணத்தை முடிக்கின்றோம்' என்று சிவபெருமான் அவருடைய தலையின்மீது தம்பாதமாகிய செவ்விய பூவைச் சூட்டினார். திருநாவுக்கரசர் 'நனைந் தனைய திருவடியென் றலைமேல் வைத்தார்' என்றும் திருத்தாண்டகத்தால் துதித்துப் பெருமானுடைய திருவருளை நினைந்து நினைந்து உள்ளமுருகி கீழ்விழுந் தெழுந்து, ஒரு நித்திய தரித்திரன் தனக்குச் சாசுவதமான செல்வங் கிடைத்தால் எவ்வளவு மகிழ்வானோ அவ்வளவு மகிழ்ச்சியோடும் உள்ளம் பூரித்தார்.

## திருநல்லூர்த் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நினைந்துருகுமடியாரைநையவைத்தார்
நில்லாமேதீவினைகணீங்கவைத்தார்
சினந்துருகுகளிற்றுரிவைப்போர்வைவைத்தார்
செழுமதியின்றளிர்வைத்தார்சிறந்துவானோ
ரினந்துறுமிமணிமகுடத்தேறத்துற்ற
வினமலர்கள்பொதவிழ்ந்துமதுவாய்ப்பில்கி
நனைந்தனையதிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே.

குலங்கிளரும்வருதிரைகளேழும்வைத்தார்
குருமணிசேர்மலைவைத்தார்மலையைக்கையா
லுலங்கிளரவெடுத்தவன்றோண்முடியுநோவ
வொருவிரலாலுறவைத்தாரிறைவாவென்று

புலம்புதலுமருளொடுபோர்வாளும்வைத்தார்
புகழ்வைத்தார்புரிந்தாளாக்கொள்ளவைத்தார்
நலங்கிளருந்திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசர் திருநல்லூரிலே பெருமானுக்கு மேவின திருப்பணிகளைத் தினந்தினமுஞ் செய்து தமிழ்ப் பாட்டுகளாலாகிய மாலைகள் பலபாடித் தொழுது துதித்து இவ்விதமாகத் திருத்தொண்டு செய்துவருங்காலத்திலே பெருமானெழுந்தருளியிருக்கும் திருக்கருகாவூர், திருவாவூர், திருப்பாலைத்துறை முதலிய பிற தலங்களிலும் போய் வணங்கிப் பெருகிய அன்போடும் திருத்தொண்டு செய்து பின், திருநல்லூரை எப்போதும் பிரியாதே மனமுருகி வந்தித்துக்கொண்டு வந்தார். தம்மை யாட்கொண்ட பெருமானிடத்து விடைபெற்று அத்திருநல்லூரினின்றும் நீங்கிச் சென்று, வாளைகள் பாயப் பெற்ற நீர்நிறைந்த ஆற்றினாற் சூழப்பட்ட திருப்பழனத்தை யடைந்து, விஷத்தை யுட்கொண்டதனால் கருமைவாய்ந்த கண்டத்தை யுடையவரும், உமாதேவியை ஒருபாகத்தே யுடையவரும், நாகங்களையே ஆபரணமாக அணிந்து நீளிரவில் திருநிருத்தஞ் செய்பவரும் ஆகிய பெருமானுடைய பாதங்களிற் பணிந்து துதித்தார். பின் திருநாவுக்கரசர் பக்கத்திலேயுள்ள பிற சிவக்ஷேத்திரங்களையும் சென்று தரிசிக்கவேண்டும் என்னும் விருப்பத்துடன் திங்களூர் என்னும் தலத்தின் பக்கத்திலே மேவுவாராயினர். அளவில்லாத சனங்கள் எப்போதும் ஓயாமல் போய்க்கொண்டிருக்

கும் அவ்வழியின் ஓரத்திலே, கருணைநிரம்பியவர்கள் உள்ளமானது எவ்வண்ணம் குளிர்ந்து யாவருக்கும் இன்பந்தருமோ அப்படிப்பட்ட குளிர்ச்சியோடுகூடி, வெயிலில் வந்த இளைப்பைப் போக்கி நீர்நிறைந்த விசாலமான தடாகத்தைப்போல மிகக்குளிர்ந்த பரப்பையுடையதாய் வளம்பொருந்திய நிழலைத்தரும்படியாக அமைக்கப்பெற்ற தண்ணீர்ப்பந்தரை வாகீசர் வந்து சேர்ந்தார். அங்கே வந்தணைந்த அவர் அருந்தென்றல் வீசப் பெற்றுக் குளிர்ந்த அப்பந்தரையும் அங்கே வழிப்போக்கர்கட் குபயோகமாக வைக்கப்பட்டிருக்கும், தேவாமிர்தம் போன்ற தண்ணீரையும், உள்ளத்திலே மிக அதிசயத்தோடு பார்த்துக்கொண்டு வந்தபோது 'திருநாவுக்கரசு, திருநாவுக்கரசு' என்னும் தன்பெயர் எப்பக்கத்திலும் மிக அழகாக எழுதப்பட்டிருத்தலைக் கண்டார். இந்தப்பந்தரை 'இந்தப் பெயரைவைத்து இங்கே அமைத்தவர் யார்?' என்று கேட்டார். அதற்கு அப்பந்தரின் வரலாற்றை யறிந்தவர் சிலர், சொல்லுதற்கு அருமையான சிறப்புடைய அப்பூதியடிகள் ஆண்டவரசேனும் பெயரினால் இதைச் செய்தமைத்தார். இதுமட்டுமல்ல; எவ்வெவ்விடத்து வேண்டப்படுவனவோ அவ்வவ்விடத்துத் தப்பாமல் யாதொரு குறைவுமில்லாதபடி யெங்கே பார்த்தாலும் அவர் அமைத்த சாலைகளும், சோலைகளும், குளங்களும், தடாகங்களும் உள்ளன என்றார்கள். இப்படியவர்கள் சொல்லக்கேட்டுத் திருநாவுக்கரசர் 'இதற்கென்ன கருத்தாயிருக்கும்' என்று மனதில் நினைத்துக்கொண்டு, அவர்களைப் பார்த்து 'அவ்வப்பூதியடிகள் எங்

கே இருக்கின்றார்?' என்று கேட்க அவர்கள் 'நிறைந்து நெருங்கிய இழைகளாலாகிய முப்புரிநூலை மார்பிலணிந்த அவ்வேதியரும் இப்பழமையான நகரத்திலேதான் வசிக்கின்றார். இதுவரையிலும் இங்கேயிருந்துவிட்டு இப்போதுதான் வீட்டிற்குச் சென்றார். அவ்வீடும் மிகுந்த தூரமன்று, சமீபந்தான்' என்று சொன்னார்கள். வாகீசமுனிவர் அப்பந்தரை நீங்கிச் சென்று அப்பூதியடிகள் வசிக்கும் வீட்டு வாயிலின் முன் சார்ந்தவுடன், அப்போதுதான் உள்ளே சென்றிருந்த திங்களூர் வேதியராகிய அவ்வப்பூதியடிகளும் தம் வாயிற்புறத்தே பெருமானடியவர் ஒருவர் வந்துள்ளார் என்ற செய்தியைக் கேட்டு உடனே வெளியில்வந்தார். சீக்கிரத்தில் சேர்ந்து வாகீசருடைய பாதங்களை வணங்கத் தாம் வணங்குமுன்னரே தம்மை வணங்கிய திருநாவுக்கரசின் முன்னேநின்று, "முன்பொழியுங் கருணைபுரி வடிவத்தையுடைய தேவரீர் சிறியேன் வீட்டில் வந்தருளும் பெரும் பாக்கியத்தைப் பெறுதற்கு முடிவில்லாத தவத்தை நான் முன்னே செய்தேன்போலும்: தேவரீர் எழுந்தருளியதென்ன?" என்றார். திருநாவுக்கரசரும் 'ஒப்பற்ற மாமேருமலையை வில்லாக வளைத்த பெருமானாரைத் திருப்பழனத்திலே தரிசித்து வந்தோம். வருகின்றவழியிலே நீர்வைத்ததும், வேண்டிய வளப்பத்தைத் தருகின்ற நிழலோடுகூடியதும் ஆகிய தண்ணீர்ப்பந்தரையும் பார்த்து, அவ்விதமாக நீர் செய்கின்ற பிற தர்மங்களையுங் கேள்விப்பட்டு இங்கே உம்மிடத்தில் வந்தோம்' என்று மேலுஞ் சொல்வார். 'கங்கையைச் சடையிற்றாங்கிய பெருமா

னுடைய அடியவர்கட்காக நீர்வைத்த அளவற்ற தண்ணீர்ப்பந்தராகிய பெருந்தருமத்தினும்பேரெழுதாமல் வேறொருபேரை முன்னெழுதவேண்டிய காரணமென்ன? அதைச்சொல்லும்' என்று குற்றமற்ற மொழியரசராகிய அப்பர் எதிரேசொன்னார். இதை நின்ற அவ்வந்தணர் கேட்டதும் மனநிலை யழிந்து, 'தேவரீர் நன்று அருளிச்செய்தீரில்லை; வெட்கங்கெட்ட சமணப் பாதகர்களோடு கூடிய அரசனுடைய தீவினைச் சூழ்ச்சிகளையெல்லாம், தாம் பெருமானுக்குச் செய்த திருத்தொண்டின்பலத்தாலேயே வெற்றிகொண்டவராகிய அவ்வாகீசருடைய பேர்தானோ நீவிர் வேறொருபேர் என்று சொல்லுவது?' என்று கோபித்து, 'நம்மையுடைய பெருமானுடைய திருவடிகளின்கீழ் விருப்புற்ற திருத்தொண்டின் பலத்தாலேதான், நாம் (மறுமையிற்பிழைத்து மோட்சமடைதல் நிச்சயமாயிருக்க) இம்மையிலும் பிழைப்பது என்று என்போன்ற சிறியோரும் தெளியும்படி செம்மைசெய்த திருநாவுக்கரசருடைய திருநாமத்தை எழுதியதற்கு மாறாக கொடிய வார்த்தைகளை நான் கேட்கும்படி சொன்னீர்' என்று சொல்லி, 'பொங்கும் கடலில் கல்லாகிய தெப்பத்திலே சென்று கரையேறிய அவ்வாகீசர் பெருமையை, சிவபெருமானாற் சிருஷ்டிக்கப்பெற்ற இவ்வுலகத்திலே யறியாதவரும் யாராவது உண்டோ? அப்படியிருக்க, மங்கலமாகிய சிவவேடத்தோடு கூடியிருந்தும் இவ்விதமாக நீவிர் சொன்னீர். அறிந்திருப்பின் இவ்விதம் சொல்லியிருக்கமாட்டீர். அறியாதிருப்பீரேல், நீவிர் எங்கே இருப்பது? நீவிர்தாம் யாவர்? சொல்லவேண்

டும்' என்று சொன்னார். வேதியர் இதைச்சொல்ல திருநாவுக்கரசு அவருடைய அன்பின் பெருமையை அறிந்து சொல்வாராய், 'பரசமயத் தீக்குழியினின்றும் கரையேறும்படி, பெருமான் கருணையின் விடுத்த சூலை நோயினால் ஆட்கொண்டபின் அவரை யடைந்துய்ந் தேன்; இவ்விதமாக நன்மைதீமைகளை நாடியறியும் நல்லுணர்வு சிறிதுமில்லாத சிறுமையேன் நான்' என்றார். திருநாவுக்கரசு இவ்விதமாக அப்பூதியடிகள் தம்மை யறியும்படி சொன்னவளவில் அவர் தம் கைகள் சிரசின்மீது குவியக் கண்களினின்றும் நீர் தாரைதாரை யாக வடிய, சொல்தடுமாறி உடம்புமுழுதும் மயிர்க் கூச்செடுக்கக் கீழே விழுந்து அரசினுடைய திருவடித் தாமரைகளைப் பூண்டார். அப்படி வணங்கிய அப்பூதி யடிகளை அப்பர் தாமும் எதிர்வணங்கி எடுத்தருள, நித் திய தரித்திரனுக்கு அருமையான செல்வம் கிடைத் ததுபோல அவ்வந்தணர் உள்ளமுழுதும் ஆனந்தம் நிறைய அரசின் முன்னேநின்று ஆனந்தபரவசராய்க் கூத்தாடி மிக விருப்பத்துடன் சுற்றியோடினார், பாடி னார், பொங்கியெழுந்த அளவற்ற மகிழ்ச்சியினாலே முன்னே செய்யவேண்டுவ தின்னதென்றும் அறியாது (நிற்கின்ற அவரை உள்ளே ஆசனத்திலெழுந்தருளு வித்தலு மறியாது) தாம் மனையினுட்சென்று தன் மனைவியார்க்கும் மக்களுக்கும் மற்றவர்கட்கும்,ஆண்ட வரசு எழுந்தருளிய சந்தோஷசமாசாரத்தைச் சொல்லி மிக ஆசையோடு தம்மைச்சுற்றிய பெருங் கிளைஞரெல் லாரையும் உடன்கொண்டு மீளவும் வெளியில் வந்தார். அவர்களெல்லாரோடும் அரசை நமஸ்கரித்து ஆராத

ஆசையோடும் ஆண்டவடிகளை உள்ளே எழுந்தருளுவித்து அவருடைய பாதங்களை நீரினால் விளக்கி அம்மலர்நீரை தங்கள்மேலே தெளித்துக்கொண்டு உள்ளேயும் ஆசனமளித்தார்கள். ஆசனத்தே தபுட்காரவைத்துச் செய்யவேண்டிய பூசைகளையெல்லாம் செய்தபின் விருப்பத்தோடு திருநீற்றுக்காப்பு ஏந்தி, மனத்தில் ஆசை யதிகரிக்க, உலகம் முச்சீவிக்கும்படி திருவவதாரஞ் செய்தருளிய அவ்வரசைத் திருவமுது செய்விக்கவேண்டும் என்னும் தம் விருப்பத்தை விண்ணப்பஞ்செய்ய அரசும் அமுதுசெய்தற்கு உடன்பட்டார். தவஞ்செய்த பெரியோராகிய அரசு உடன்பட்டதும் அப்பூதியடிகள் தமது மனைவியாரைப் பார்த்து 'பொருந்திய பாக்கியமானது நம்மிடத்து இருந்தவிதந்தான் என்னே! இந்தப் பேறு நமக்கு நீலகண்டராகிய பெருமானுடைய அருளினாலல்லவா கிடைத்தது. இனிநாம் உச்சீவித்தோம' என்று சொல்லிச் சந்தோஷித்துத் திருவமுது சமைக்கப் புகுந்தார்கள். பரிசுத்தமான கறிகளால் அறுவகைச் சுவையும் அவ்வவ்வளவிற்குப் பொருந்தும்படி கறிகள் சமைத்து, இனிய அமுதும் சமைத்துப் பெரியவர் அமுதுசெய்வதற்குப் பரிகலத்திற்காகத் தமது பிள்ளைகளில் மூத்த திருநாவுக்கரசைப் பார்த்து 'நல்ல வாழைக்குருத்தைச் சீக்கிரங் கொண்டுவா' என்று ஏவினார். 'நல்ல தாய்தந்தையர்கள் என்னை யித்திருப்பணியிலே ஏவ நான் இதைச் செய்யும் பாக்கியம் பெற்றேனே' என்று நினைத்துச் சந்தோஷித்து அம்மூத்த திருநாவுக்கரசு சீக்கிரமாகச் சென்று தோட்டத்திலுள்ளே போய்ப் பெரிய வாழையின் வளப்ப

மாகிய குருத்தை அரிகின்ற தருணத்தில் பெரிய பாம்பொன்று, அன்பப்பட்டுச் சோரும்படி இவன் கையில் தீண்டியது. தன்து கையிலே சுற்றிக்கொண்டு கண்களில் பொறிபறக்கும்படி கோபங்கொண்டிருந்த அந்தத் தீவிஷப்பாம்பை உதறி வீழ்த்திவிட்டு மனம் பதைத்து 'இப்பாம்பின் விஷக்கடியினால் நான் மூர்ச்சித்து வீழ்வதற்குமுன் சீக்கிரமாகச் சென்று அரிந்த இந்தக் குருத்தைக் கொடுப்பேனாக' என்று துணிவு கொண்டு ஓடிவந்தான். உடம்பினுட் புகுந்ததாகிய விஷந் தலைக்கேறும் வேகத்தைப்பார்க்கிலும், வருகின்ற இவனுடைய வேகம் முந்தும்படியாக மிக வருத்தப்பட்டுக்கொண்டு வருகின்றபோது 'அரிய தவசியாகிய பெரியவர் அமுது செய்வதற்குக் காலந் தாழ்க்கும்; ஆதலால், என்னைப் பாம்பு கடித்ததை நான் யார்க்கும் சொல்லுகின்றதில்லை' என்று திருந்திய மனதோடும் வீட்டிற் புகுந்தான். தீவிஷமானது தனது முறையிலே கொஞ்சம் கொஞ்சமாக மேலேயேறி, தலையில் ஏறும் ஏழாம் வேகத்திற் பொருந்த, எயிறு, கண்கள், உடம்பு இவையெல்லாம் முறையே கருகி, (கருநிற முள்ளவிஷம் உள்ளே பரவலால் கருநிறங் கொண்டு) சொல்தடுமாறி, ஆவிவிடும்படியாக மூர்ச்சித்துவிழும் அச்சமயத்திலே தான் அரிந்து வந்த இலைக்குருத்தைத் தன் தாயார் பக்கத்திலே வைத்து உடனே கீழே வீழ்ந்துவிட்டான். இப்படி மூர்ச்சித்துத் தேகநிலை தளர்ந்து விழுந்த பிள்ளையைப்பார்த்துத் தாய்தந்தையர்களிருவரும், என்ன நிகழ்ந்ததோ என்று உள்ளம் பதைத்துக் கொஞ்சம் கவனித்துப்

பார்த்தார்கள். இரத்தம் வடியும் கடிவாயையும்,உடம்பு விளங்குகின்ற பிறகுறிகளையும் கண்டு விஷத்தாலே தான் இவன் இறந்தான் என்று துணிந்து சிறிதும் அதற்கு வருந்தாமல், திருவடியாரை அமுது செய்விப்பதற்கு வேண்டியனவற்றைச் செய்வாராயினர். பெறுதற்கரிய மகனை ஓர் பாயிலே சுற்றிமூடிப் புறவாசல் முற்றத்திலே ஓர் பக்கத்தில் மறைத்து வைத்துவிட்டுக் கொஞ்சமும் இச்சங்கதி அவர் தெரியாதபடி மறைத்து அவரை முதலில் அமுது செய்விப்போமாக என்று கொண்டு, திருத்தொண்டின் வன்மையையுடைய அடியவரிடத்திலே அப்பூதியடிகள் சீக்கிரமாக வந்தார். அடியவர் சீக்கிரம்வந்து அமுது செய்வதற்குக் காலதாமதமாகின்றதென்று அன்னம் கறிகள் முதலிய எல்லாம் பக்கத்திலே சீக்கிரத்தில் எடுத்துதவும்படியாக வைத்துவிட்டு, குற்றமற்ற சிறப்பையுடைய திருத்தொண்டரின் முன்னே நமஸ்கரித் தெழுந்து 'தேவரீர் அமுதுசெய்து எமது குடிமுழுவதையும் உய்விப்பீராக' என்று விண்ணப்பிக்க அதை அவ்வருந்தவர் கேட்டு எழுந்துவர, அவருடைய பாதங்களை விளக்கி மற்றொரு ஆசனத்திலமர்வித்துப் பரிகலந்திருத்துவதற்கு முன்னே வாகீசர், ஆசனத்திலிருந்து விபூதியணிந்து இயல்பின் இல்வாழ்க்கைநெறி நின்ற அப்பூதியடிகட்கும அவர் மனையார்க்கும் மேன்மைபொருந்திய விபூதியைக் கொடுத்தருளி அவர்கள் புதல்வருக்கும் கொடுக்கின்ற சந்தர்ப்பத்திலே வேதியராகிய அப்பூதியாரைப்பார்த்து 'உமது பிள்ளைகளாகிய இவர்கட்கு மூத்தபிள்ளையையும் அழையுங்கள். விபூதி

தரல்வேண்டும்' என்று சொன்னார். அவர் நேர்ந்த சமாசாரம் ஒன்றும் சொல்லாமல் 'அவன் இப்போது இங்கே உதவமாட்டான்' என்றார். இதைக்கேட்ட வுடனே பெருமானுடைய திருவருளாலே, 'திருநாவுக் கரசினுடைய கலங்காத வுள்ளத்திலே ஒரு கலக்கம் உண்டாக, அரசு இவர்களைப் பார்த்து 'நீங்கள் சொல் லிய இவ்வார்த்தையை என்மனம் பொறுக்காது அவன் என்னசெய்தான்? இதற்கொன்றுண்டு. உண்மையைச் சொல்லுங்கள்' என்று சொல்லலும் அவர்கள் பயந்து நடுங்கி, பெரியவ ரமுதுசெய்யும் பாக்கியம் தவிர்ந்து விடும்படி இதுவா நேர்வது என்ற எண்ணத்தால் அவ ரிடம் நிகழ்ந்ததைச் சொல்லாமலிருப்பார்களாயினும், அவர் கேட்கும்போது உண்மை சொல்ல வேண்டும் என்னும் சீலத்தினாலே, மனம்வருந்தி, அன்போடு அவரை வணங்கிப் பிள்ளைக்கு நேர்ந்ததைச் சொல்லி விட்டார்கள். திருநாவுக்கரசு இதைக்கேட்டு 'நீங்கள் செய்தது நன்று! நன்று! இப்படி இவ்வுலகத்திலே யார் செய்தார்கள் என்று சொல்லி முன்னெழுந்து போய் உயிர்போய்க்கிடந்த அப்பிணத்தைப் பார்த்துப் பெரு மானுடைய திருக்கோயிலின்முன்னே அதைக்கொண் டுவரச்செய்து, பெருமானைத்துதித்து 'ஒன்றுகொலாம்' என்னும் திருப்பதிகம்பாடி அப்பாம்பின் விஷத்தைப் போக்குவித்தார்.

## விஷந்தீர்த்த திருப்பதிகம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர்சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுயருமதிசூடுவ
ரொன்றுகொலாமிடுவெண்டலைகையது
வொன்றுகொலாமவரூர்வதுதானே.

பத்துக்கொலாமவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுங்நெறிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கைதானே.

திருச்சிற்றம்பலம்.

இப்படித் திவிட நீங்கப் பிழைத்த அப்பிள்ளையும் தூங்கியெழுபவன்போல எழுந்து, இடபக்கொடியை வுயர்த்திய சிவபெருமானுலே ஆட்கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசின் சிவந்த தாமரைபோன்ற பாதங்களில் வணங்க அவர் பரிசுத்தமான விபூதியைக் கொடுத்தார். அங்கே நின்ற அப்பெற்றோரிருவரும், போன உயிரை மீளவும் பெற்ற புதல்வனைப் பார்த்துத் திருத்தொண்டின் மார்க்கத்தை வந்தித்து வாழ்ந்தார்கள். ஆனுல் அறிதற்கரிய பெருமையையுடைய திருத்தொண்டர் அமுது செய்வதற்குச் சிறிதுநேரம் தடையாயிருந்தான் இவன் என்று மனம்வருந்தினுர்கள். அவர்கள் மனவாட்டத்தின் காரணத்தை யறிந்து வாக்கின்மன்னரும் அவர்களுடனே மனையை யடைந்து, அமுதுசெய்ய வேண்டிய பாங்கிலேயிருக்க முந்நூலணிந்த மார்பையுடைய அப்பூதியடிகளும் மிக மகிழ்ந்து வேண்டிய ஆயத்தமெல்லாம் செய்துவிட்டு, அவர் அமுது செய்யுமிடத்திற் கோசலம் தெளித்து மேலும் சாணத்தால் மெழுகி சிறந்த தீபமேற்றி வைத்து, (இவ்வளவும் நிகழ்தற்குக் காரணமான) அவ்வாழைக் குருத்தை விரித்து நீராற்கழுவிவிட்டு, அதன் ஈர்வாயை வலத்திலே இருக்கும்படியாக அமைத்திட்டார். திருந்திய வாசம்பொருந்திய நல்லநீரைக்

கொடுக்க கைவிளக்கிவந்த அப்பெரியோர் அப்பூதியடிகளையும் பிள்ளைகளையும் பார்த்து 'நீங்களும் இங்கே உடனிருந்து அமுதுசெய்வீர்களாக' என்று சொல்ல, மிக்க விருப்பத்தோடும் அவர் ஏவினபடி செய்பவராய்ப் பிள்ளைகளும் தாமும் பக்கத்திலே யிருந்து அமுது செய்ய, சிந்தை மகிழ்ந்து, அவர் மனைவியார் திருவமுது எடுத்துத்தர, கொத்தாகிய கொன்றையை யணிந்த சடையையுடைய பெருமானடியவராகிய அப்பூதியடிகளோடு, தமிழ்ச்சிங்கமாகிய அப்பர் அங்கே யமுதுசெய்தருளினார்.

மாதவவேதியராகிய அப்பூதியடிகளின் செல்வவீட்டிலே அமுது செய்து காதலாலாகிய சினேகத்தை அவர்க்களித்துப் பலநாள் அவரோடுகூடியிருந்த பிற்பாடு திங்களூரிலிருந்து அவ்வேதியர் தம்முடன் வர பைங்கண்விடையை வாகனமாக ஏறியருளும் பெருமானுடைய திருப்பழனத்தை யடைந்து மிக்க காதலோடு பெருமானை யடைந்து மேன்மேற் பொங்கிய அன்போடு நமஸ்கரித்து முன்னே நின்று துதிப்பாராய் அந்தியிலே தோன்றும் மூன்றும்பிறைச் சந்திரனைச் சடையிலணிந்த பெருமானுடைய பொற்பாதங்களின் கீழ் அடையும் விருப்பங்கொண்ட சீலத்தையுடைய அப்பூதியடிகளை மிகவும் சிறப்பித்து நன்மைசெய்யும் சிறந்த தமிழின் மாலையாகிய திருப்பதிகத்தைப் பாடினார்.

## திருப்பழனம்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கள்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதூலமுண்டிகழ்வானே.

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே.

திருச்சிற்றம்பலம்.

ஆடுகின்ற பாம்பையும் மூன்றாம்பிறைச் சந்திரனையும் அணிந்த பெருமானை பலதலங்களிலும்போய்த் தரிசித்துத் தொழுகின்ற திருப்பணியை மேற்கொண்டு திருச்சோற்றுத்துறை முதலாகிய பலதிருப்பதிகளை மிக்க நண்பினாலே சென்று தரிசித்துப் பதிகம் பாடிப் பின் திருப்பழனத்திலே பெருமானுடைய ஆலயத்திலே திருத்தொண்டு செய்துகொண்டு அங்கேயிருந்தார். பலநாளங்கே வசித்திருந்து பின் தமது தலையிலே திருவடிசூட்டின நீலகண்டராகிய திருநல்லூர்ப்பெருமான் மலர்ப்பாதங்களில் நினைவுகொண்டு சென்று அழகுவாய்ந்த மாடங்களோடுகூடிய திருநல்லூரையடைந்தார். அங்கேசென்று பெருமானடிகளைத் துதித்து மிக்க அன்போடு ஆனந்தத்தழுந்தித் துதித்துப் பதிகம்பாடித் திருப்பணிசெய்துவரும் நாளிலே பிரமவிஷ்ணுக்களுக்குமெட்டாத பெருமானுடைய திருவாரூரைத்தரிசிக்க நிலைபெற்ற ஆசையினால்நினைத்தார். பின் திருநல்லூரிலே பெருமானிடத்தில் விடைபெற்று அங்கிருந்தும் போகின்றவழியில் காபாலியாகிய பெருமானமர்ந்தருளும் திருப்பழையாறை முதலிய பல க்ஷேத்திரங்களையுந் துதித்துப்பாடித் திருவலஞ்சுழியையுந்தொழுது மாலைநிலாவணிந்த பெருமானுடைய திருக்குடமூக் (கும்பகோணங்) கைச்சேர்ந்து தரிசித்துத்

திருநாலூர், திருச்சேறை, திருக்குடவாயில், திருநறையூர் என்றிவற்றிலமர்ந்த பார்வதிபாகருடைய பாதங்களை வணங்கி இன்னும் இடபக்கொடியா ரெழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவற்றையும் துதித்துக்கொண்டு சேல்மீன்கள் இருத்தற்கிடமாகிய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த தென்திருவாஞ்சியத்தை யடைந்தார். பின் மிக்க வாசம்பொருந்திய சோலைகள் நிறைந்த திருப்பெருவேளூரை வணங்கித் துதித்துக்கொண்டு, கொன்றை மலர்மாலையணிந்த இறைவனார் தலங்கள் பிறவற்றையும்போய்த் தரிசித்துக்கொண்டு பகைவருடைய முப்புரங்களையெரித்த பெருமானுடைய திருவாரூரைவந்து சேர்ந்தார். இங்ஙனம் ஆண்டவரசு அங்கே எழுந்தருளவும் திருவாரூரிலிருக்கும் பெருமானுடைய திருவருள் பெற்ற அடியவர்கள் எல்லாம் காணத்தகுந்த அழகு வாய்ந்த மாளிகை மாடம் முதலியனவெல்லாம் மிக அலங்காரத்தோடு சிறந்து விளங்கும்படி எங்கே பார்த்தாலும் திருவீதிகளை மங்கல அலங்காரஞ் செய்தார்கள். வலிய சமணர்களாகிய வஞ்சகர்களுடைய மாயையெல்லாம் கடந்து அலை பொருந்திய கடலில் கல்லே தெப்பமாகக்கொண்டு மிதந்து சென்றவராகிய திருநாவுக்கரசு இங்கே நம்முள எழுந்தருளியது என்ற சந்தோஷத்தினாலே அளவற்ற அவ்வாரூர்த் திருத்தொண்டர்கள் மதிலின் புறத்திலே சென்று ஆண்டவரசை எதிர்கொண்டு உபசரித்தபோது அவ்வாகீசர் இவர்களையெல்லாம் வணங்கித் தொழுது கீழ்வருமாறு சொல்லிக்கொண்டு பதியினுள் அணைவாராயினார். 'உய்வகை யொன்றுமில்லாத பெரும் பாதகராகிய சமணர்

தம்மிடத்திருந்து எனக்குற்ற சூலைநோய் தவிர்ந்து நானுய்வதற்காக இங்கே சைவசன்மார்க்க மடைந்து சிறியேனாகிய நானும் புற்றிடங்கொண் டருளிய பெருமானாருடைய அடியவர்கட்கு அடியவனாகும் புண்ணியத்தைப் பெறுவதுண்டோ?' என்று நிறைந்த வுணர்வினோடு திருவாரூர்த் திருவீதியுள்ளே சென்றார். திருத்தொண்டர்கள் தம்மைச் சூழ்ந்துவரத் திருநாவுக்கரசு தோரணங்கட்டி யலங்கரிக்கப்பெற்ற உயர்ந்த திருவாயிலை யடைந்து பின் திருத்தேவாசிரிய மண்டபத்தின் முன்வந்து வணங்கி (இம்மண்டபம் திரு அடியவர்கள் எல்லாம் எழுந்தருளியிருக்கும் ஓரிடம். இஃது திருவாரூர்க் கோயிலுள்ளே யுள்ளது. இதனைக் கண்டு வணங்கித்தான் பின் திருநாவலூரர் அதன்கண் அடியாரைத் துதித்துத் திருத்தொண்டத் தொகை பாடியது) உகக்கடையில் கடலில் மிதந்த திருத்தோணியாகிய பெருந்திருமாளிகையின் வாயிலடைந்து நீண்ட ஒளி வீசும் மாமணிப்புற்றிடங் கொண்டாரை நேரே தன்கண்களால் கண்டுகொண்டார்.

## திருவாரூர்ப்போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கற்றவர்களுண்ணுங்கனியேபோற்றி
கழலடைந்தார்செல்லுங்கதியேபோற்றி
யற்றவர்கட்காரமுதமானாய்போற்றி
யல்லலறுத்தடியேனையாண்டாய்போற்றி
மற்றொருவரொப்பிலாமைந்தாபோற்றி
வானவர்கள்போற்றுமருந்தேபோற்றி
செற்றவர்தம்புரமெரித்தசிவனேபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி.

## திருநாவுக்கரசுநாயனார் சரித்திரம்.

பிரமன்றன்சிரமரிந்தபெரியோய்போற்றி
பெண்ணுருவோடாணுருவாய்நின்றாய்போற்றி
கரநான்குமுக்கண்ணுமுடையாய்போற்றி
காதலிப்பார்க்காற்றவெளியாய்போற்றி
யருமந்ததேவர்க்கரைசேபோற்றி
யன்றரக்கனைஞ்ஞான்குதோளுந்தாளுஞ்
சிரநெரித்தசேவடிகள்போற்றிபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

கண்டு தொழுது கீழே விழுந்து நமஸ்கரித்துத் தேகமுழுதும் மயிர்க்கூச்செடுக்க எழுந்து நின்று அன்பு மேன்மேலதிகரிக்கக்கண்களிலிருந்து குளிர்ந்த நீர்த்துளிகள் மழைபோலப் பொழியத் திருமூலட்டானராகிய திருத்தோணியப்பருடைய செந்தாமரைப் பாதகங்களைத் துதித்துத் திருத்தாண்டகம் பாடிக் "காண்டலே கருத்தாய் நினைந்து" என்னும் திருப்பதிகத்தால் தூண்டாவிளக்குப் போன்ற சோதி சொரூபமாகிய பெருமான் முன்னே நின்று துதித்து நெஞ்சுருகிப் பின் அந்த மணிக் கோயிலைச் சூழ்ந்து வலம் வந்து பெருமானை வணங்கி யன்புடைய மனத்தோடு திருவாயிற் புறத்தே வந்து.

### திருவாரூர்

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தாய்நினைந்திருந்தேன்மனம்புகுந்தாய்கழலடி
பூண்டுகொண்டொழிந்தேன்புறம்போயினாலறையோ
வீண்டுமாடங்கணீண்டமாளிகைமேலெழுகொடிவானிளமதி
நீண்டிவந்துலவுந்திருவாரூரம்மானே.

நாடினார்கமலம்மலரயனோடிரணியனாரலங்கீண்டவ
னொடிக்காணமாட்டாததழலாயஙம்பரனைப்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசைகூறு பத்தர்கள்சித்தத்துள்புக்
தேடிக்கண்டுகொண்டேன்திருவாரூரம்மனே.

திருச்சிற்றம்பலம்.

சிவந்த மணிகளினது பிரகாசம் வீசுகின்ற திரு முன்றிலின் முன்னே தேவாசிரிய மண்டபத்தை யடைந்து 'மகரந்தம் வீசும் மலர்ச்சோலைகளிலே குயில்கள் பாட அதற்கிசைய மயில்கள் ஆடுதற்கிடமாகிய திருவாரூரிற் பெருமானை நான் என் கைகள் கூப்பித் துதிக்காதொழிந்தேன். கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனேன் யான்' என்னும்படியான கையறவாகிய திருப்பதிகத்தைப்பாடி அவ்விடத்தே இருந்தனர்.

## திருவாரூர்ப் - பழமொழிப்பத்து.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தமேனியான்
றாடொழாதே
யுய்யலாமென்றெண்ணியுறிதூக்கியுழிதந்தே
னுள்ளம்விட்டுக்
கொய்யுலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலு
மாரூரரைக்
கையினாற்றொழாதொழிந்துகனியிருக்கக்காய்கவர்ந்த
கள்வனேனே.

மு . .

தோளுந்தாளு
மிறுத்தானையெழின்முளரித்தவிசின்மிசையிருந்தான்றன்
றலையிலொன்றை

யறுத்தானையாரூரிலம்மானையாலால
முண்டுகண்டங்
கறுத்தானைக்கருதாதேகரும்பிருக்கவிரும்புகடி

திருச்சிற்றம்பலம்.

அன்பினால் மழைபோலப் பொழியும் கண்ணீர் மார்பிலேவடியும் திருவடிவும், இனிமை மிகுந்த தீந் தமிழ்மாலைகள் பொழிகின்ற திருவாக்கும், பெருமானுடைய செவ்விய பொற்பாதங்களையே தியானித்த மனதும் உழவாரப்படைதாங்கிய திருக்கரமும் ஆகிய இவையுந் தாமுமேயாகி, உலகமுய்யும்படி அங்கே திருவீதிகளில் திருப்பணிசெய்து, பெருமானைப் பணிந்தேத்தித் துதித்து வருவார். புகழ்நீடிய திருவாரூரிலே அழகுபொருந்திய புற்றிடங்கொண்ட பெருமானை மிகுந்த அன்போடு தினமும் காலங்களிலே சென்று கும்பிட்டு குற்றமற்ற உண்மையைவிளக்காநின்ற 'பாடிளம் பூதத்தினானும்' என்று தொடங்கும் பதிக முதலாகப் பல பதிகங்களையும் பாடி, அன்பு பெருகும்படி மனங்கரைந்து உருகிக் கசிந்து இவ்விதமாக இருந்தார்.

## திருவாரூர்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கோடிலமென்முலையாளைக்கூடியகோலத்தினானு
மோடிளவெண்பிறையானுமொளிதிகழ்சூலத்தினானு
மாடிளம்பாம்பசைத்தானுமாரூரமர்ந்தவம்மானே.

பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினப்புறத்,தானுமாரூரமர்ந்தவம்மானே.

திருச்சிற்றம்பலம்.

நால்வேதங்களின் வாய்மை நிறையப்பெற்ற நமி நந்தியடிகளுடைய திருத்தொண்டின் பெருந்தன்மையி னாலே அவரை நமதுபதிகத் திருவிருத்தத்திலேவைத் துப் பாடித் தேன்பொருந்திய கொன்றைமலர் மாலை யை யணிந்த பெருமான் அங்கே விளங்கும் தன்மை யையும் துதித்து திருவீதித் திருப்பணியைச் செய்து அங்கே யிருந்தார். அந்நாட்களில் கங்காசடாதரரா கிய பெருமா னெழுந்தருளி யிருக்கும் திருவலிவலத் தை நினைத்துப் போய்க் கச்சணிந்த மார்பையுடைய பிராட்டியை யோர்பாகத்தில் வைத்த பெருமான் பாதங்களை வணங்கிப் பதிகம் பாடித் துதித்து, நீல கண்டருடைய திருக்கீழ்வேளூர், திருக்கன்றுப்பூர் இவற் றையும் போய்த் தரிசித்துத் துதித்து மிகுந்த ஆசை யினால் திருவாரூரை மறுபடியும் வந்து சேர்ந்தார். திரு வாதிரைத் திருநாளிலே வீதிவிடங்கப் பெருமா னுடைய பவனியிலே, தேவர் முனிவர் முதலாயினோர் அங்கே சேவிக்கும் அன்பர்களுடன் மனிதவுருக் கொண்டு வந்து சேவித்துச் செல்லும் பெருமையை யெல்லாம் கண்டு துதித்திருக்கும் நாளிலே, சிவபெ ருமான் திருவருளினாலே, இவரதுள்ளத்திலே திருப் புகலூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானுடைய பா தங்களை வணங்கவேண்டுமென்னும் ஆசையானதுண்

டாக அப்படியே செய்யத்துணிந்து திருவாரூரை கும்பிட்டு ஒருவாறு நீங்கிச் சென்று பார்வதியை இடப்பாகத்திலே யுடைய பெருமா னமர்ந்தருளிய பிற க்ஷேத்திரங்களையும் தரிசித்துச் சென்றார். அந்நாட்களிலே ஆளுடையபிள்ளையாராகிய திருஞானசம்பந்தர் சீர்காழியிலிருந்துபுறப்பட்டு பலநாகங்களை ஆபரணமாக அணிந்த பெருமானெழுந்தருளிய க்ஷேத்திரங்கள் பிறவற்றையும் வணங்கிப் புன்னாகத்தின் வாசம் வீசுகின்ற பூம்புகலூரில் வந்து பெருமானைத் துதித்து அங்கே குற்றமற்ற சிறப்பையுடைய முப்புரிநூலை மார்பிலணிந்த வேதியரான முருகநாயனாருடைய திருமடத்திலே தங்கியிருந்தார். அப்போது திருநாவுக்கரசு அணியாரூரிலே புற்றிடங்கொண்டமர்ந்தருளிய சோதி சொரூபராகிய பெருமானைக் கும்பிட்டுப் பின் அங்கிருந்து திருப்புகலூரை நோக்கி வருகின்றாரென்ற செய்தியைக் கேள்வியுற்று அவரை யெதிர்கொள்ளும் விருப்பத்துடனே தன்னோடுகூடிய பெரிய தொண்டர் கூட்டம் சூழ்ந்துவர ஆளுடையபிள்ளையார் எழுந்தருளி எதிர் சென்றார். செழுநீர்த் தடாகங்கள் விளங்கப்பெற்ற சீகாழிப் பிள்ளையார் தம்மை யெதிர்கொள்ள வருகின்றதைக் கேள்வியுற்று, திருநாவுக்கரசர், மணி கொழிக்கும் புனலோடுகூடிய திருப்புகலூரை நோக்கி மிக மகிழ்ச்சியோடு வந்தார். அப்போது, திருநீற்றுக் காப்பணிந்து இருபக்கங்களிலும் திரண்டுவந்த அடியார்கூட்டங்கள் ஒன்றாகக் கூடின. அப்போது நிலா வீசும் இரண்டு கடல்கள் ஒன்றாகக் கூடியதை யொத்திருந்தது. திருநாவுக்கரசர் எதிரேசென்று நமஸ்

கரிக்க, சீர்காழியிலே யவதரித்த தெய்வத்தன்மை வாய்ந்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் எதிர் நமஸ்காரஞ்செய்து 'அப்பரே நீர் வருங்காலத்திலே திருவாரூரிலே நிகழ்ந்த பெருமையை வகுத்துரைசெய்வீராக' என்று கேட்க ஸ்ரீபஞ்சாட்சரத்தின் உண்மை கைகண்டவராகிய அவரும் சொல்வாராயினர். 'எல்லாருடைய உள்ளத்திலும் நிலைபெற்ற திருவாரூரிலே வீற்றிருந்தருளும் நீலகண்டராகிய பெருமானுடைய திருவாதிரைத் திருவிழாவின் பெருமையை நான் என்னென்று சொல்வேன்' என்னும் 'முத்துவிதான மணிப்பொற்கவர்' என்னும் பதிகத்தைக் கட்டளையிட்டார்.

## திருவாரூர்த் - திருவாதிரைத்திருப்பதிகம்.

### திருச்சிற்றம்பலம்.

முத்துவிதானமணிப்பொற்கவரிமுறையாலே
பத்தர்களோடுபாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோலவெண்டலைமாலைவிரதிக
ளத்தனாரூராதிரைநாளாலதுவண்ணம்.

பாரூர்பவ்வத்தானைப்பத்தர்பணிந்தேத்தச்
சீரூர்பாடலாடலறாதசெம்மாப்பார்ந்
தோரூரொழியாதுலகமெங்கும்பணிந்தேத்து
மாரூரன்றனாதிரைநாளாலதுவண்ணம்.

திருச்சிற்றம்பலம்

அந்தச் செந்தமிழ்மாலையைக் கேட்டு அழகிய சீகாழியிலே அவதாரஞ்செய்தருளிய, பெருமானுக்குப் புத்திரராகிய முருகக்கடவுள் போன்ற அருளுடைய பிள்ளையாரும் 'மலர்த்தடாகங்களுடைய திருவாரூரைக் கும்பிட்டுப் பின் இங்கே திரும்பிவந்து உம்முடன்

இருப்பேன்' என்று சொல்லி, மதில் சூழ்ந்த திருவாரூர் மன்னராகிய பெருமானை வணங்கும் பொருட்டுச் சென்றனர். பின்பு வாகீசர் மிகுந்த அன்போடு, பூக்களின் வாசம் வீசும் குளிர்ந்த வயல்கள் சூழப்பெற்ற திருப்புகலூரினுள்ளே புகுந்தார். அந்தச்செல்வம் பொருந்திய பழமையான அந்நகரத்திலே சென்ற திருநாவுக்கரசு தம்முடைய உள்ளத்திலே நிறைந்த அன்பானது மேலே பொங்கி வெள்ளமாகப் பெருகியதோவென்னும்படி கூடிவருகின்ற கண்ணீர் தமது மேனியை நனைக்கும்படியாக நின்று, விடம் பொருந்திய நாகத்தையாபரணமாக வணிந்த பெருமானைப் பணிவாராயினர்.

தேவர்கட்கெல்லாம் முதல்வரும் அழகியபுகலூரிலே எழுந்தருளியிருந் தடியவர்கட்கினிய தேன்போன்றவரும், ஆகிய பெருமானைப் பாட்டுக்களாலாகிய செந்தமிழ்ப் பதிகம் பாடி. மிக அன்போடு காலங்களிலணைந்து மிக விருப்புடனே, கும்பிட்டு நீங்காததிருப்பணிசெய்து அங்கே வசித்திருந்தார். பின் திருநாவுக்கரசு சிறப்பைத்தரும் திருச்செங்காட்டங்குடி, திருநள்ளாறு, மரங்கள் அடைந்த சோலைகள் சூழ்ந்த சாந்தையயவந்தி, கச்சணிந்த மார்பையுடைய பார்வதியையொருபாகத்தில் வைத்த பெருமானமர்ந்தருளிய திருமருகல், ஆகிய இவற்றை மிகுந்த அன்பினல் போய் வணங்கி இன்பமடைந்தார். இவ்விதமாகச் சிலநாள் கழித்து ஆண்டவரசு திருப்புகலூரி லமர்ந்திருக்கும் நாளில் உண்மைப்பொருளை யுணர்த்தும் ஞானத்தை

யடைந்தவராகிய சீகாழிப்பிள்ளையாரும் திருவாரூரிலே எழுந்தருளிய, பவளம்போற் சிவந்த சடையையும் நெற்றிக் கண்ணையுமுடைய பெருமானை வணங்கிக் கொண்டு இங்கே புகலூரில் வந்தடைந்தார். இப்படி ஆளுடைய பிள்ளையார் அங்கே எழுந்தருள்வதைக் கேட்டு, திருநாவுக்கரசு மிக்க விருப்பத்தோடு உள்ள மகிழ்ந்து அவரை எதிர்கொண் டழைத்துவந்து அவருடனே அங்கே யமர்ந்திருக்கு நாள்களிலே பெருந் தன்மை வாய்ந்த சிறுத்தொண்டநாயனாரும், குற்றமற்ற சிறப்பையுடைய திருநீலநக்கரும் அங்கே இவர்களிடத்தே எழுந்தருளினார்கள். அங்கே வந்தருளிய அவர்களுடனே அப்புகலூரிலே பிராமண குலத்திலே புகழால் மேம்பட்டு விளங்கிய முருகநாயனாருடைய திருமடத்திலே எல்லாரும் ஒருங்கே தம்முடன்கூடிய அடியார் கூட்டத்தோடு மிகுந்த சினேகத்தோடு நீங்குதற்கரியதாகிய திருத்தொண்டின் நிலைமையறிந் தமர்ந்திருந்தார்கள். இவ்விருவரும் பாடும் திருப்பதிகச் செந்தமிழ்மாலைகளின் சிறப்பைத் துதித்து, மற்றையடியார்களெல்லாம் மகிழ்ச்சி யெய்தி பார்வதீ பாகராகிய பெருமானுடைய பொற்பாதங்களில் மிக்க விருப்பத்தை யுடைய திருத்தொண்டர்களின் பெருமையை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஒன்று கலந்த மனத்தையுடைய இவ்விருவோருடனும் இருத்தலா லுளதாகும் பயன் பெற்றார்கள். அந்நாளிலே, தாம் செய்துவந்த திருத்தொண்டினை வேண்டியவ்வண்ணம் செய்து, ஒளி வீசும் சடாபாரத்தையுடைய பெருமானெழுந் தருளிய பிற தலங்களையும் போய் முதல்

வனைத் தொழுவதற்காக பொன்னுலியன்ற அழகிய மாடங்கள் நிறைந்த பூம்புகலூரைத் துதித்து நீங்கினார்கள். திருநீலநக்கநாயனாரும், சிறுத்தொண்டநாயனாரும், முருகநாயனாரும், பிற அடியார்களும் விடைகொண்டு தத்தம் இடங்கட்குப் போய்விட ஒன்றுகலந்த மனதுடைய பிள்ளையாரும் வாகீசரும் கங்கையைச் சடையிலே மறைத் தருளிய பெருமா னெழுந்தருளிய திருவம்பர் என்னும் தலத்தை வணங்கித் துதித்தார்கள். பின் செங்குமுத மலர்கள் மலர்தற்கிடமாகிய தடாகங்கள் சூழ்ந்த திருக்கடவூரை யடைந்து, கோபங் கொண்டு மார்க்கண்டேயர்மேல் வந்த யமனை யுதைத்தருளிய பெருமானுடைய பொற்பாதங்களை வணங்கித் துதித்துக், குங்கிலியக்கலயநாயனாருடைய திருமடத்திலே 'எந்தைபெருமா னடியவர்கள் யாவர் மனையிற் சென்றாலு மந்த மனையிற் றிரவியங்கள் தாமே நின்று கூத்தாடும்' என்றபடி குறைவெல்லாம் நீங்குமாறு அவரிடத்தே மற்ற அடியாரோடும் திருவமுது செய்தார்கள். சிறப்புப் பொருந்திய திருக்கடவூர்த் திருமயானத்தை வணங்கி, யழகிய இன்றமிழ்மாலை பலவற்றைப் பாடி இனிமையுற அங்கே யிருந்து, திருநீலகண்டத்தையுடைய பெருமானுடைய பாதங்களை வணங்கி விடைபெற்று நீங்கிப் போய்த் தேரோடு மழகிய வீதிகளையுடைய திருவாக்கூரைப் போயடைந்தார்கள். திருத்தான்றோன்றிமாடத்திலே, யடைந்தவர்கட்கெல்லாம் அடைக்கலத்தானமாகி யருள்புரியும் எமதையனை யடைந்து அன்புமிக வணங்கிக், குற்றமற்ற அருமைத் தமிழ்மாலை சாத்திப், பெருமானுடைய பிற

க்ஷேத்திரங்களையும் வணங்கிக்கொண்டு, இருவருமாகப் பெருமானுடைய திருவீழிமிழலையை யடைந்தார்கள். அப்படி வீழிமிழலையைச் சேர்வதற்கு வந்த திருநாவுக்கரசையும், காழிப்பிள்ளையாரையும், மிகுந்த உள்ள விருப்பத்தினாலே அறியக்கூடாத பெருமையையுடைய அடியவர்களும் அந்தணர்களும் திரண்டுவந்து எதிர்கொண்டு வணங்கினார்கள். அவர்களும் மற்றிவர்களை எதிர்வணங்கி தலத்தினுள்ளே சென்றார்கள். இவர்கள் வருகைக்காக மாடங்களோடு கூடிய வீதியை யலங்கரித்தும், பிராமணர் வீட்டு வாயில்களில் விளக்குகள் வைத்தும், நீண்ட வாழை கமுகு இவைகளை கட்டியும் நிறைபொற்கும்பங்கள் நாட்டியும் இவ்விதமாக அலங்கரிக்கப்பெற்றிருந்த அந்தத் திருநகரத்தினுள்ளேவாசகீரும், பிள்ளையாரும் மற்றைத் தொண்டர்களும் சேர்ந்து சென்று கோயில் வாயிலை யடைந்தார்கள். அவ்வாயிலிற் போய்ப் புகுந்து, அத்திருவீழிமிழலையுல் செவ்விய பொன்மலையாகிய மாமேருவை வில்லாக வுடைய பெருமானமரும் திருக்கோயிலை வலம் வந்து திருமுன்றிலிலே நமஸ்கரித்து சன்னிதியிற் சென்று, மூன்று கண்ணும், சிவந்த சடையும் வெற்றி விடையும் உடையாராகிய பெருமானுடைய சிவந்த பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து ஆனந்தத்தினால் விம்மினார்கள். கைகளைக்குவித்து பெருமானது பாதங்களைத் துதித்து, அன்பினால் மனங் கரைந்துருக திருமேனியிலே கண்ணீரானது ஆறுபோல் வடிய, துதிக்கின்ற சொன்மாலையாகிய 'திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே'

என்னும் திருத்தாண்டகத்தை யாவரும் உய்யும்படி பாடி,

## திருவீழிமிழலைத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

போரானையீருரிவைப்போர்வையானைப்
புலியதளேயுடையாடைப்போற்றினானைப்
பாரானைமதியானைப்பகலானானைப்
பல்லுயிராய்நெடுவெளியாய்ப்பரந்துநின்ற
நீரானைக்காற்றானைத்தீயானானை
நினையாதார்புரமெரியநினைந்ததெய்வத்
தேரானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே.

அறுத்தானையயன்றலைகளஞ்சிலொன்றை
யஞ்சாதேதேவரையெடுத்தவரக்கன்றோள்க
ளிறுத்தானையேழினரம்பிசைகேட்டானை
யிந்துவினைத்தேய்த்தானையிரவிதன்பற்
பறித்தானைப்பகீரதற்காவானோர்வேண்டப்
பரந்திழியும்புனற்கங்கைபனிபோலாங்குச்
செறித்தானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே.

திருச்சிற்றம்பலம்.

நீங்காத ஆசை சிறந்து வளரும்படியாக, முற்காலத்திலே பிரம விஷ்ணுக்கள் முடியு மடியும் அறியக்கூடாதபடி நிமிர்ந்து நின்ற பொன்னிறம் பொருந்திய அழகிய மலைவடிவெடுத்த பெருமானை அழகு வாய்ந்த அத்திருவீழிமிழலையிலே துதித்து பலநாள் பிரியாது கும்பிட்டு அங்கே யிருப்பார்களாய் வேதியர்கள் நிறைந்த அப்பதியிலே அவ்வருந் தவசிகளாகிய

இருவரும் இருந்தார்கள். சிறப்பு மிகுந்து விளங்கிய இத்திருத்தொண்டர்க ளிருவரும் அங்குத் தங்கிச் சில நாளான பிற்பாடு மழை பருவத்திற் பெய்யாது மறுத்துப்போய் எக்காலத்திலும் 'பொய்யாதளிக்கும்' புனலோடுகூடிய காவிரியும் பருவத்தில் பெருக்கங் குறைந்ததினாலே, நீரினால் விளைவனவாகிய வுணவுகளெல்லாம் குறைந்துபோய் அங்கே வாழ்ந்த பல வுயிர்களெல்லாம் பூமியிலே தரித்திரம் மிகுந்து வருத்தப்படும்படியான பஞ்சமெங்கே பார்த்தாலும் பரவியது. பூமியெங்கும் இவ்வாறு பஞ்சத்தாலே வருந்தியழிகின்றகாலத்திலேசிவந்த சடையை யுடையாரும் திருவீழிமிழலையிலேயெழுந்தருளியவரும் ஆகிய பெருமானவர் கையிலேமானையும் மழுவையும் ஏந்தித்தன் உருவெளிப்படும்படியாகப் பிள்ளையாருக்கும், திருநாவுக்கரசுக்கும் கனவிலெழுந்தருளி வந்து அருளிச் செய்வாராயினர். "நன்மை தீமை யிரண்டனுபவங்களையும் ஒப்ப நினையுந் தன்மையை யுடையவர்கள் நீங்கள்; ஆனதால் காலவித்தியாசத்தினாலே நேர்ந்த பஞ்சத்தினால் நீங்கள் மனவாட்ட மடையமாட்டீர்கள். ஆயினும் உங்களுடன் இருந்துங்களை வழிபடும் அடியார்கள் வருத்தப்படாதபடி அவர்கட்குத் தரும்பொருட்டு உங்களுக்குக் கொடுக்கின்றோம்" என்று சொல்லித் தம் வடிவு அவர்கள் காண வந்து மிக்க பெருமையை யுடைய அவ்விருவருக்கும் உலகமெல்லா மறியும்படி படிக்காசு கொடுத்தருளினர். விண்ணிழி விமானமாகிய கோயிலின் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் முறையே, சீகாழிப் பிள்ளையாருக்கும், திருநாவுக்கர

சுக்கும் தினந்தோறும் படிக்காசு பெருமான் வைத்தருள இவ்வுலகத்திலே அளவற்ற அடியார்களுடனே திருவமுது செய்து அத்தலத்தில், இருவரும் வசித்திருந்தார்கள். திரு நீலகண்டராகிய பரமசிவனருளினாலே தாம் பெற்ற அப்படிக்காசினால் பல வளங்களும் பல வழிகளிலும் பெருகவும் 'சிவபெருமானுடைய திருவடியார்கள் எல்லாரும் வந்து சாப்பிடலாம்; என்று தினமும் இரண்டு வேளைகளிலும் பறைசாற்றுவித்தும் சொல்லாலழைத்தும் இவ்வாறு எல்லார்க்கும் அன்னமிட்டு (துன்பந்தந்த) பஞ்சத்தைத் தொலைத்தார்கள். திருவீழிமிழலைப் பெருமானாகிய ஈசரின் ஒருபாகத்திலே யிருக்கும் பார்வதி தேவியின் திருமுலைப்பாலை உலக முய்யும்படி உண்டருளிய பிள்ளையார் அத்தன்மையினால் அவர்க்கு மகன்மை முறையாகு மாதலினால் தாம் பெறும் காசு வட்டத்துடனே பெற்றார். வாகீசரோ கைத்தொண்டு செய்யும் அடிமையாதலினால் வட்டமில்லாமல் காசுபெற்று வந்தார். கங்கையைச் சடையிலே தாங்கி யருளிய பெருமான் வைத்த படிக்காசினாலே அளவற்ற பொருளோடு கூடிய இவ்விருவருடைய திருமடத்திலும் தொண்டர்களாவார் எல்லாரும் தினமும் அன்ன முண்ணவுண்ணக் குறையாதாகி நின்ற மிக்க பெருமையை உலகம் போற்றும்படியாக அவ்விருவரும் இன்புடனிருக்கும் அந்நாளிலே கால வித்தியாசமானது மாறி, எங்கே பார்த்தாலும் மழை பொழிந்து அந்நீரினாலே உலகம் எங்கேயும் குளிர்ந்து வளம் பொருந்தி, உணவுப் பொருள்கள் மலிந்து நன்மை யுண்டாயிற்று. முதன்மை

யன்பு வாய்ந்த இவ்விரண்டன்பர்களும் பெருமானுக்குப் பல சொன்மாலைகளைச் சாத்திக் கும்பிட்டு, அவர் எழுந்தருளி யிருக்கும் பிற தலங்களையும் போய் வணங்க நினைத்தார்கள். எல்லையில்லாத சிறப்பையுடைய இவ்விருவரும், திருவீழிமிழலை மாமணியாகிய பிரானை வணங்கி அருமையாக விடைபெற்று, அத்தலத்தினின்றும் நீங்கிச்சென்று, அழகிய குளிர்ந்த நீர் சூழ்ந்த திருவாஞ்சியத்தை வணங்கிக்கொண்டு பெருமானமர்ந்த பிற பதிகளையும் மிக்க அன்பினாலே கும்பிட்டு இசையோடு கூடிய பதிகங்கள் பாடிச்சென்று செல்வம் பொருந்திய திருமறைக்காட்டை யடைந்தார்கள். வாசனை பொருந்திய புன்னைமலர்களின் வாசம் நிறைந்த சோலை சூழ்ந்த உப்பளத்திலே வீட்டு முற்ற மொவ்வொன்றிலும் சிறுவர்கள் முத்தங்களைக் கொழித்து விளையாடுதற்கிடமாகிய அந்தத் திருமறைக்காட்டிலே, மலையை வில்லாகவுடைய பெருமான் மகிழ்ந்தெழுந்தருளிய கோயிலுட்புகுந்து வலம்வந்து, சீகாழிப்பிள்ளையாரும், திருநாவுக்கரசும் சென்று திருமுன்பு சேர்ந்தார்கள். கடலின் ஓதம் பொருந்திய காடுகள் நெருங்கிய அந்தத் திருமறைக்காட்டிலே, பாம்பை யணிந்த சடாபாரத்தையுடைய பெருமானை வேதங்கள் முன்னே அருச்சனைசெய்து அந்தக் கதவைத் திருக்காப்புச் செய்த அக்காலந்தொட்டு இதுவரையும் அடைத்தே நின்ற அந்த அழகிய நீண்ட வாயிலை வணங்கினார்கள். பழமையாகிய வேதங்கள் திருக்காப்புச் செய்த அந்த வாயிலை அக்காப்பை நீக்கித் திறக்கவல்ல அடியவர்கள் ஒருவரும் அதுவரையும் வராததினாலே, கோ

யில் சென்று தொழும் அன்பர்களெல்லாரும் பக்கத்திலே வேறொருவழியாக உள்ளே போய் அடியார் துன்பத்தை யகற்றியருளும் பெருமானை யருச்சித்துத் தொழுதுகொண்டு வந்ததை, அளவற்ற பெரும் புகழோடு கூடிய இருவரும் அங்கே கேட்டறிந்தார்கள். அதை யறிந்ததும், கடல்மீது தோணியாய் மிதந்த சீகாழியி லவதரித்த பிள்ளையார் திருநாவுக்கரசரை நோக்கி 'அப்பரே! நீவிர், புகழ் மிகுந்த வேதங்கள் முன்னே அருச்சனை செய்யும் பெருமானை யிக்கோயிலுள்ளே நாம் இருவரும் தடையின்றி இவ்வாயிலின் வழியாக நேரே சென்று தரிசிப்பதற்காக இக்கதவு திருக்காப்பு நீங்கும்படியாக பாடுவீராக, என்று சொல்லி யருளினார். அவர், உள்ள மகிழ்ச்சியினால், பிள்ளையார் சொல்ல, 'பண்ணினேர் மொழியாள்' என்று தொடங்கிப் பாடவும் அடியார்கட் கனுக்கிரகிக்கும்படி திருநீறணிந்த பெருமானார் கதவுதிறக்கத் தாழ்த்தார்.

அரசர் பதிகத் திருக்கடைக்காப்பிலே 'எண்ணிரக்க மொன்றில்லீர்' என்று பாடி நமஸ்கரித்த வுடனே வேதாரணியத்தில் எழுந்தருளிய மெய்ப்பொருளாகிய பெருமானருளினாலே அழகிய கதவானது அன்புடைய அடியார் இவர்களின்முன்பு திறந்தது.

## திருமறைக்காடு திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்மினே.

*அரக்கனைவிரலாலடர்த்திட்டநீ*
*ரிரக்கமொன்றிலீரெம்பெருமானிரே*
*சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ*
*சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே.*

மபலம.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசும் அதுகண்டு தொழுது கீழேவீழ்ந்து நமஸ்கரித்தார்கள். பூமியிலே தேவர்களின் சப்தமும் வேதமுழக்கமுங் கடலொலி போல் ஒலித்தன. அடியார்கூட்டங்களெல்லாம் சந்தோஷமிகுந்து ஆரவாரிக்க ஆண்டவரசும் பிள்ளையாரும், மிக இன்பமுற்று, எழுந்து அவ்வாயில் வழியேநேரே உட்சென்று பெருமான் முன்னே வணங்கித் துதித்துப் பரவிச் செந்தமிழ்மாலைகளும் பலசாத்தி எலும்புங் கரையும்படி மனங்கரைந்துருகி வணங்கிச் சன்னிதியை அருமையாக நீங்கி வெளியே வந்தார்கள். வெளியே நின்று வாகீசர், பார்வதிதேவியின் திருமுலையிற் கறந்த பாலோடு சிவஞானத்தையுமுடனே அமுது செய்த காழிப்பிள்ளையாரைப் பார்த்துப் 'பிள்ளையாரே! நீவிர் பெருமானுடைய அருளினாலே இந்தக்கதவு இன்றுபோல என்றும் திறந்துஞ் சாத்தியும் வரும்படியாக இப்போது இது சாத்தும்படி பாடியருளும்' என்று சொல்ல, அந்தத் தமிழ்விரகரும், திருநாவுக்கரசின் சொல்லைமேற்கொண்டு, அவ்வாறே பதிகம் பாடும்போது நெற்றிக்கண்ணையுடைய நீலகண்டேசருடைய திருவருளினாலே, அந்த வலிய அழகிய கதவு உடனே முதற்பாட்டிலேயே திருக்காப்புச்செய்தது. அப்படிக் காப்பிட்டதைப் பார்த்துப் பிள்ளையாரும்

ஆண்டவரசும மகிழ்ச்சிகொண்டு 'இது எம்பெருமா னருள்செய்யப் பெற்றேம்' என்று சொல்லி வணங்கிப்பின் பிள்ளையார் பதிகத்தைப்பாடி முடித்து தொழுது நமஸ்கரித்தார். அந்தத் திருவாயில் அன்று முதலாகத் திறக்கவுஞ் சாத்தவும் ஆக இவ்வழக்கம் நிகழ்ந்தது; அங்கே அப்போது நிகழ்ந்த அச்செய்தியைக்கண்டு அடியார்கள் எல்லாரும் அதிசயித்து உடம்பிலே மயிர்க்கூச்செடுக்க, கண்களிலே ஆனந்த பாஷ்பம் வடிய ஒப்பற்ற அவ்விருவருடைய பாதங்களையும் வணங்கினார்கள். நமது காழிப்பிள்ளையாரும் திருநாவுக்கரசும் திருமடத்திலே சென்று சேர்ந்த பிறகு, உண்மை நெறி சிறிதும் பிறழாத வாகீசரானவர், தாம் மிக அரிதினாலே கதவு திறக்கும்படி பதிக முழுதும் பாடியதும், பிள்ளையார் அது அடைக்கும்படி பாடிய எளிமையையும் நினைத்து நினைத்துப் 'பெருமானுடைய திருவுள்ளத்தை யறியாதயர்ந்தேன்' என்று மனக்கவலை கொண்டு மிகவும் பயந்து அங்கே ஒரு பக்கத்திலே, மனச்சஞ்சலத்துடனே தூங்குவாராயினார். இவ்வாறு வாகீசர் திருமறைக் காட்டீசருடைய பாதங்களைத் தியானித்து துயிலும்போது பார்வதிபாகராகிய பெருமான் பொன்போன்ற தமது திருமேனியிலே வெண்ணீறு பூசிய கோலத்தோடும் எழுந்தருளி வந்து கனவிற் காட்சி கொடுத்து 'நாம் வாய்மூரிலிருக்கின்றோம் நீ அங்கேவா' என்று ஆக்கியாபித்தார். உடனே வாகீசர் விழித்தெழுந்து 'போத நிகழுவாவென்று சொல்லிப்போனார் இது வென்கொல்' என்று பாடி. 'இது எம்பெருமானுடைய அருளாகில் நானும் அங்

கே போவேன்' என்று துணிந்தெழுந்து வேதவனத்தைவிட்டு நீங்கி விரைந்து செல்ல, அவர் முன்னே, பெருமான் வழி காட்டுவார்போல. வேடங்கொண்டு எழுந்தருளி வந்தார்.

## திருவாய்மூர்த் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எங்கேயென்னையிருந்திடத்தேடிக்கொண்
டங்கேவந்தடையாளமருளினார்
தெங்கேதோன்றுந்திருவாய்மூர்ச்செல்வனா
ரங்கேவாவென்றுபோனாரதென்கொலோ.

தீண்டற்கரியதிருவடியொன்றினால்
மீண்டற்குமித்தாரரக்கன்றன்னை
வேண்டிக்கொண்டேன்றிருவாய்மூர்விளக்கினைத்
தூண்டிக்கொள்வேனென்றலுந்தோன்றுமே.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புவாய்ந்த திருமறைக் காட்டிலிருந்து எழுந் செல்லும் திருநாவுக்கரசர் மிக அன்புவைத்த அமிர்தமதையிற்கிடைத்தது, உண்ணாக் கிடைக்காததுபோல, கங்கையைச் சடையிற்றாங்கிய பெருமான் மனிதவேடங்கொண்டு எழுந்தருளி வழிகாட்டவும் பின்றொடர்ந்தவர், அவர் பின்னே போவதல்லது அவரைக் கூடப்பெற்றாரில்லை. அவ்விதமாக எழுந்தருளிப் பெருமான் பக்கத்திலே காட்சி கொடுப்பவர்போலப் போய் அழகிய கோயிலொன்றை யெதிரே காட்டி அதில் புகுந்தருள, அன்பர் அங்கே விரைந்து தொடர்ந்து போய் அவரைக்காணாது நின்றார். இது செய்தியை காழிப்பிள்ளையாரும் கேள்விப்பட்டு அவ்வாய்மூ

ருக்குத் தாமும் எழுந்தருளினர். தன்னைப்பெருமான் வழிகாட்டி யழைத்துக்கொண்டு வந்து பக்கத்திலே காட்சி கொடுப்பவர்போலக் காட்டி மறைந்து விட்டார் என்று திருநாவுக்கரசு மனமயர்ந்து, 'பெருமானே! அடியேன் தேவரீருடைய திருவுள்ளத்தை யறியாமல் பிழைசெய்து தருணந்தெரியாமற் கதவு திறப்பித்தேன் எனக்குத் தேவரீர் ஒளித்திருத்தலே யல்லாமல் மற்றும், அக்கதவைச் சாத்தும்படி உம்முடைய திருவுள்ளப் பாங்கின்படி பாடியருளிய செம்மொழிப் பிள்ளையாரும் இங்கே பக்கத்திலே யிருக்கின்றாராதலாலே அவருக்கு நீர் மறைந்திருப்ப தெவ்வாறு?' என்று சொன்னார். மாடங்கள் நிறைந்த சீர்காழியிலவதரித்த பிள்ளையாருக்கு பிரம விஷ்ணுக்களுக்கும் எட்டாத பெருமானனவர் நேரே காட்சி கொடுத்தருளித் தமது திருநடனத்தை யாண்டவரசும் பார்த்துப் பணியும்படியாக அவர்க்கும் காட்சிகாட்டி யருளுதலும் அவர் 'பாடவடியார்' என்று தொடங்கிப் பெருமானைப் பதிகம் பாடித் துதித்தார்.

## திருவாய்மூர்த் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாடவடியார்பரவக்கண்டேன்
பத்தர்கணங்கண்டேன்மொய்த்தபூத
மாடன்முழவமதிரக்கண்டே
னங்கையனல்கண்டேன்கங்கையாளைக்
கோடலரவார்சடையிற்கண்டேன்
கொக்கினிதழ்கண்டேன்கொன்றைகண்டேன்
வாடற்றலையொன்றுகையிற்கண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே.

கலங்கவிருவர்க்கழலாய்நீண்ட
காரணமுங்கண்டேன்கருவாய்நின்று
பலங்கடரித்துகந்தபண்புங்கண்டேன்
பாடலொலியெலாங்கூடக்கண்டே
னிலங்கைத்தலைவன்சிரங்கள்பத்து
மிறுத்தவனுக்கீந்தபெருமைகண்டேன்
வலங்கைத்தலத்துளனலுங்கண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே.

திருச்சிற்றம்பலம்.

இப்பதிகத் தமிழ்மாலையை ஏற்றுக்கொண்டு பெருமான் மறைந்தருள பிறையணிந்த பெருமானடியவராகிய இவ்விருவரும் திருவாய்மூரை யடைந்து நிலைபெற்ற கோயிலை வலம்வந்து வணங்கித்துதித்து மிக்க ஆசையானது மேன்மேலதிகரிக்க அந்த நகரிலே சிலநாள் வசிப்பாராயினர்கள். ஆண்டவரசும் பிள்ளையாரும் ஒன்று சேர்ந்து அங்கே இனிதாகச் சிலநாள் தங்கியிருந்து பின் வாய்மூர்ப் பிரானைத்தொழுது பதிகம் பாடி விடைபெற்று, மறுபடியும் திருமறைக்காட்டை யடைந்து பெருமானுடைய பாதங்களை வணங்கினார்கள்.

பெருமானைப் பணிந்து திருப்பணி செய்துக்கொண்டு அங்கே இருக்குங் காலத்திலே, குளிர்ந்த வெண்மதிபோன்ற குடையையுடைய சோழராஜன் புத்திரியும், பாண்டியராஜனது திருமனைவியாரும் ஆகிய குற்றமற்ற குணத்தையுடைய மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் ஆகிய இவர்களால் ஏவப்பட்ட சிலர் காழிப்பிள்ளையாரைக் காணும்பொருட்டு வந்து

சேர்ந்தார்கள். பெருமானமர்ந்தருளிய திருமறைக் காட்டை யடைந்து நிலைபெற்ற சீகாழியிலவதரித்த பிள்ளையாருக்கு அறிவித்து அவரிடத்திற் சென்று அவருடைய பாதங்களை நமஸ்கரித்தார்கள். அவரும் மனமகிழ்ந்து சேமம் விசாரித்தார். அவர்கள் அதற்கு 'இந்த உலகம் உச்சீவிக்கும்படி அவதாரஞ் செய்தருளிய தேவரீருடைய இரண்டு பாதங்களையும் எப்போதும் தியானிப்போருக்கும் தீங்கு உண்டாகுமோ?' என்றுசொல்லி, 'மதுரையிலே வைதிக சைவசன்மார்க்கமானது கெட சமணமாகிய தீநெறியானது மேன்மேலதிகரித் திருக்கின்றது. இதனாற் சைவம் குன்றிப் போய்விட்டது. சமணர்களாலுண்டாகும் தீமையைப் பொறுக்க முடியாமல் தேவரீரிடம் விண்ணப்பித்து நிவாரணம் தேடும்படி பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் எங்களை விடுத்தார்கள்.' என்று விண்ணப்பித்தார்கள். அதற்குப் பிள்ளையார் இசைந்து திருநீற்றைத் துதித்து போவதற்கு உடன்பட்டார். அப்போது திருநாவுக்கரசு பிள்ளையாரை நோக்கி 'அச்சமணர்கள் மிகத்தீயவர்கள். பல மாயை வல்லவர்கள். முன்னே யவர்கள் எனக்குச் செய்த தீமைகள் பல. இப்போது கோள்களும் நன்றாகவில்லை. ஆதலால் தேவரீர் செல்வதற்கு நான் உடன்படேன்' என்று சொல்லித் தடுத்தார். பிள்ளையார் 'நீயனவெல்லாம் பெருமானடியவருக்கு யாதொரு தீங்கும் செய்ய வல்லனவல்ல என்று கோளறுபதிகத்தைக் கட்டளையிட்டு அளவற்ற பெருமையையுடைய திருநீற்றைப் பேணும் அந்த இருவரையும் போய்ப்

பார்க்கும் கருத்துடையேன். அங்கே தீங்கு செய்யும் சமணர் நிலைமையை யழித்து, சைவநெறியை நிலைநாட்டியன்றி வேறொரு செயலும் செய்யமாட்டேன். நீவிர் இங்கேயே தங்கியிரும். ஆணை யுமது என்றார். அதற்கு அரசர் 'பிள்ளையாரே! நீவிர் அங்குப் போகத் துணிந்து போக நேரிடாவண்ணம் நானே போய் அந்த வலிய சமணர்களுடைய தீமையை அழித்து வருகின்றேன் என்று சொல்லி எவ்வாறு தடுத்தும் பிள்ளையார் கேளாமற் செல்லத் துணிந்ததால் அரசர் சம்மதித்திருந்தார். ஞானத்தலைவரான பிள்ளையாரும் திருமறைக்காட்டீசரிடம் விடைபெற்றுக் கொண்டு மிக்க ஆசையோடு செந்தமிழ்நாடாகிய பாண்டிநாட்டிற் போவாராயினர். இவ்வாறு சீகாழிப்பிள்ளையார் எழுந்தருளிச் செல்ல, அவரிடம் விடைபெற்றிருந்த வாகீசரானவர், மிக்க அன்பினாலே திருமறைக்காட்டீசருடைய பாதங்களை நமஸ்கரித்து தமிழ்மாலை பாடி அங்கே தங்கியிருக்கு நாளிலே, திருவீழிமிழலையிலே எழுந்தருளிய பெருமானுடைய சிவந்த பாதங்களை மறுபடியும் வணங்கவேண்டுமென்று நினைத்துச் சோலைகள் சூழ்ந்த அத்திருமறைக்காட்டினீசரை வணங்கி விடைபெற்று அங்கிருந்துபோய் இவ்வுலகத்தில் பிரசித்திபெற்று விளங்கிய திருநாகைக்காரோணம் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு பதிகம் பாடித் திருவீழிமிழலையிலே வந்துசேர்ந்தார். அத்திருநகரைப் பணிந்து, விண்ணிழி விமானமாகிய கோயிலினமர்ந்தருளும் பெருமானைத் துதித்து வணங்கியிருக்குங் காலத்திலே திருநாவுக்கரசர் பெருமானுடைய பிற

தலங்களையும் வணங்கவேண்டு மென்றுரை செய்தார். அப்படியே அவர் இவ்வுலகத்தில் சிறந்து விளங்கு கின்ற அழகிய காவிரியாற்றின் கரையிலே சென்று தலங்களைத் தரிசித்துக்கொண்டு, பசுவுக் கருளின பெருமானமர்ந்த திருவாவடுதுறையை யடைந்து இறை வரை வணங்கி, திருஞானசம்பந்தர்க்கு அவர் தந்தை யாரின் யாகத்தின்பொருட்டுப் பெருமான் அங்கே ஆயிரம் பொன் அளித்தருளிய கருணைத்திறத்தையும் புகழ்ந்து பாடி

## திருவாவடுதுறைத் திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மாயிருஞாலமெல்லாமலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப்படர்சடைவைப்பர்போலுங்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூரர்க்கம்பொன்
ஞாயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனாரே.

பார்த்தனுக்கருளர்போலும்படர்சடைமுடியர்போலும்
மேத்துவாரிடர்கடீரவின்பங்கள்கொடுப்பர்போலும்
கூத்தராய்ப்பாடியாடிக்கொடுவலியரக்கன்றன்னை
யார்த்தவாயலறுவிப்பாராவடுதுறையனாரே.

திருச்சிற்றம்பலம்.

பின் பிறதலங்களையும் தரிசிக்கும்படி மேற்செல் கின்றார். சிவந்த சடாபாரத்தையுடைய பெருமானெ ழுந்தருளிய திருப்பழயாறையைச் சேரப்போகும் போது, மயக்கமேகொண்ட சமணர்கள் மறைத்தா கிய அருகாமையிலுள்ள வடதளியில் சிவபெருமானது தானத்தைக் கைகுவித்து வணங்கினார். உடனே அது வும்பெருமானுடைய கோயிலன்று; சமணர்களுடைய

பொய்நிறைந்த பள்ளியன்ற என்றுகேட்டு மனம்மிக வருந்தி 'எப்படியாயினும் பெருமான் எழுந்தருளியிருத்தல்வேண்டும். இன்றேல் என்கைகள் குவிந்திருக்கமாட்டா' என்று துணிந்து அப்பொய்க்கோயிலுக்குப் பக்கத்தில் ஓரிடத்தில் போய், வாசனை தங்கிய கொன்றையைத்தலையில் தரித்த பெருமானுடைய சிவந்த பாத தாமரைகளைத் தியானித்துக்கொண்டு, சமணர்கள் வஞ்சனையால் தேவரீரை மறைத்த வஞ்சத்தை நீக்கி அக்கொடியோருடைய வன்மையையழிக்கவேண்டுமென்று பணிந்து 'தேவரீருடையவடிவமாகிய இலிங்கத்தைத்தரிசித்தாலன்றி நான் இதைவிட்டுப் போகமாட்டேன்' என்றுசொல்லி, தமதெண்ணத்தை முடிக்கும் திருநாவுக்கரசு அமுதுசெய்யாமல் அங்கே தங்கியிருந்தார். பெருமான் இதனையறிந்து திருநாவுக்கரசு தம்மைத் தரிசிக்கச் செய்வதற்காக, அரசனுக்குக் கனவில் எழுந்தருளிவந்து, 'அறிவற்ற சமணர்கள் நம்மை மறைக்க நாம் இருந்தோம் என்று அடையாளக்குறிகளையும் சொல்லி 'நம்மை திருநாவுக்கரசு தரிசித்துக் கும்பிடும்படியாக துன்மார்க்கர்களான சமணரை யழித்து நீக்கிவிடுவாயாக என்று கட்டளையிட்டருளினார். அவ்வரசனும் உடனே இதனையறிந்து எழுந்து கை தலைமேற்குவித்து வணங்கி, தான்கண்ட கனவின் அதிசயத்தை மந்திரிகட்கெல்லாம் சொல்லி அவர்களோடும் கூடச் சீக்கிரமாகச் சென்று, தேவர்கட்கெல்லாம் தலைவராகிய பெருமானருளிய அடையாளத்தின் வழியேபார்த்து சமணர்கள் செய்த வஞ்சனையையறிந்தவனாகி அரசன், நிலைபெற்ற பெருமையை

யுடைய திருத்தொண்டராகிய திருநாவுக்கரசின் பாதங் களில் நமஸ்கரித்துச் சென்று கூட்டமாகக்கூடிய சம ணர்களை வேருடனழித்தான். இவ்வாறு சமணர்களா யிரம்பேரும் அழிந்தபிறகு மேன்மையையுடைய அர சன் பெருமானுக்கு கோயில் நிர்மாணித்தபின் பெரு மானுடைய அர்ச்சனைமுதலிய வழிபாட்டிற்கு வேண் டிய சாமக்கிரியைகளை யெல்லாம் சரிவர வமைத்து விட்டு திருநாவுக்கரசை வந்து வணங்கினூர். ஞானவர சரும் உள்ளேசென்று பெருமானை வணங்கித்துதிப்பா ராயினூர்.

'தலைமயிரைப் பறித்து,நின்றுண்ணும் தீத்தொழி லாளராகிய சமணர் தங்கள் மெய்ந்நிலையில்லா நிலையி னூல் மறைத்தாலும் தேவரீரை மறைக்க முடியுமோ' என்னும் 'தலையெலாம்பறிக்குஞ் சமண்கையரு, ணிலை யினுன்மறைந்தான் மறைக்கொண்ணுமே' என்றாரம் பிக்கின்ற, அளவற்ற உண்மைபோடுகூடிய திருக்குறுந் தொகைப் பதிகத்தைப்பாடி-

திருப்பழையாறை வடதளித் திருக்குறுந்தோகை.

திருச்சிற்றம்பலம்.

தலையெலாம்பறிக்குஞ்சமண்கையரு
ணிலையினுன்மறைத்தான்மறைக்கொண்ணுமே
யலையினூர்பொழிலாறைவடதளி
நிலையினுனடியேநினைந்துய்ம்மினே.

செருத்தனைச்செய்யுஞ்சேணரக்கனுட
லெருத்திறவ்விரலாலிறவூன்றிய
வருத்தனைப்பழையாறைவடதளித்
திருத்தனைத்தொழுவார்வினைதேயுமே.

திருச்சிற்றம்பலம்.

வெளியேவந்து அங்குச் சிலநாள் இருந்து பின், இலைவடிவினதாகிய சூலத்தை ஏந்திய பெருமானமர்ந்த பிறதலங்களையும் வணங்கச்செல்வாராய், எப்போதும் பெருகிய நீரையுடைய காவிரியினிரண்டுகரைகளிலும், விடைப்பாகராகியபெருமானெழுந்தருளிய தலங்களைத் தரிசித்துத் தமிழ்ப்பதிகங்கள் பாடித் துதித்துச் சென்று, எங்கும்பரந்த புகழையுடைய திருநாவுக்கரசு, அளவற்ற அடியார்கள் தம்மை யெதிர்கொள்ளத் திருவானைக்காவின் பக்கத்திலே வந்து சேர்ந்தார். அவ்விடத்திலே சிலந்திப்பூச்சிக்கு அருள்கொடுத்த பெருமானுடைய பாதங்களை நமஸ்கரித்துசெவ்விய சொன்மாலைபாடி, மேலும் பெருமானுடைய திருவெறும்பியூர் மலையையும் தரிசித்துப் பதிகம்பாடிப் பின் விளங்குகின்ற திருச்சிராப்பள்ளிமலை, திருக்கற்குடி திருப்பராய்த்துறை ஆகிய இவற்றைத் தொழும்பொருட்டுப் போய் அந்தத்தலங்களையும் மற்றும் பக்கத்தேயுள்ள பிரக்ஷேத்திரங்களையும் வணங்கிக்கொண்டு, அழகுவாய்ந்த உழவாரத்திருப்பணியையும் செய்து பதிகமும் பாடி வந்தித்துப் பெருமானருளினாலே, காவிரியாற்றைக் கடந்து, பகைவருடைய திரிபுரத்தையெரித்தருளிய பெருமானமர்ந்த திருப்பைஞ்ஞீலியைப் போயடைவாராயினர். வழிநடக்கும்போது மிகமுயற்சியினாலே வருத்தமுண்டாக, தாகத்தோடு, வருத்துகின்ற பசியும் அடையவும் அதற்கு மனம்வருந்தாமல் திருநாவுக்கரசர் முன்னே செல்ல, வாசனை தங்கிய திருப்பைஞ்ஞீலியிலேயெழுந்தருளியநெற்றிக்கண்ணையுடைய பெருமான் தமது தொண்டரின் வருத்தத்தைத் தொ

லைக்கத் திருவுளங்கொண்டு, வழியிலே சோலையும் தடாகமும் உண்டுபண்ணி வழிபோக்கர்போல் திருநீறணிந்த வேதியராக வேடம்பூண்டு, விரும்பும் கட்டுசோறும் கையிலேகொண்டு, ஆகாயத்தில் அன்னரூபமாய்ப் பறந்தும் பூமியில் பன்றிரூபமாய்த் தோண்டிச் சென்றும், அயன், அரி இருவராலும் அரிதற்கரிய பெருமானானவர் திருநாவுக்கரசுக்கெதிரே வழியில் தங்கியிருந்தார். அங்கே வேதியர்வேடம் பூண்டிருந்த இவரிடத்தே திருநாவுக்கரசும் வந்துசேர, செங்கண் விடைப்பாகராகிய வேதியர் அவரைப் பார்த்து, 'நீர் வழிநடந்த இளைப்பினாலே மிகவும் வருந்தமுற்றிருக்கின்றீர்; என்னிடம் கட்டுசோறிருக்கின்றது; அதனையுண்டு இந்தக்குளத்திலே தண்ணீர்குடித்து, உம்முடைய இளைப்பைப் போக்கிக்கொண்டு பின் செல்வீராக' என்று சொன்னார். இப்படி யவர், 'நீர் உண்ணக்கடவீர்' என்று சொல்லிக் கட்டுசோற்றைக் கொடுத்ததும் திருநாவுக்கரசர் பெருமானுடைய திருவருள் என்று நினைந்தவர்போல வேறொன்றுங் கருதாது அதை வாங்கி மிக இனிமையாக அமுது செய்து இனிய தண்ணீரையுங் குடித்துச் சுத்திசெய்து களைப்புத் தீர்த்துக்கொண்டார். இப்படி இளைப்பு நீங்கியிருந்த திருநாவுக்கரசை அவ்வேதியர் பார்த்து 'நீர் இனி எங்கே போகவேண்டும்'? என்று வினவினார். அதற்கரசு, 'யாவராலும் சொல்லுதற்கரிய பெருமானமர்ந்தருளிய திருப்பைஞ்ஞீலிக்குப் போகின்றேன்' என்றார். அந்தணர் அதற்கு 'நானும் அங்கேதான் போவது' என்று சொல்லி கூடவந்தார். இப்படி இரு

வரும் திருப்பைஞ்ஞீலியை யடைந்த உடனே அவ்வந்த ணர் மறைந்துவிட, உண்மையாகிய தவத்தையுடைய மேலோராகிய திருநாவுக்கரசு 'ஆடல்புரிந்தாரடியே னைப் பொருளா வளித்த கருணை' என்று பதிகம் பாடி நமஸ்கரித்தெழுந்து கண்ணீர் வடிய உருகி நின்றார். திருப்பைஞ்ஞீலியிலே பெருமானமர்ந்தருளிய கோயி லிற் சென்று, திருநீலகண்டராகிய பெருமானை வணங்கி மகிழ்ச்சி மேம்பட்டு உண்மையாகிய அன்பினால் மன முருக விரும்பிய தமிழ்ப்பதிகங்களைப் பாடி தமது கைத்திருத்தொண்டாகிய உழவாரத் திருப்பணியைச் செய்து ஆசையோடு அங்கே தங்கியிருந்தார். பின் பெருமானமர்ந்த பிற திருமலைகளையும் திருப்பதிகளை யும் ஆசையுடன் சென்று தரிசித்து தமிழ்ப்பதிகம் பாடி பெருமானருளினாலே வடக்குதிசை நோக்கிச் சென்று திருநாவுக்கரசர் சிவபிரானெழுந்தருளியிருக் கும்திருவண்ணாமலையையடைந்தார். செங்கண்விடைப் பாகராகிய பெருமானமர்ந்த திருவண்ணாமலையைத் தொழுது வலம்வந்து நமஸ்கரித்து மலைமேலேறி, அடி யவர்களுடைய அன்பின் றிருத்தொண்டினுக் கெளிய வரும் பெருமானை வணங்கி யெழுந்து திருநாவுக்கரசர், மோக்ஷத்தைவிட இந்தப்பிறப்பே, பெருமானை வண ங்கி யனுபவித்தற்குக் கருவியாயிருத்தல்பற்றி மேன் மையானது என்னும் நன்மையை நாட்டினார். திரு வண்ணாமலைமேல் எழுந்தருளியிருக்கும் மணிபோன் றவரும், நீங்காத அன்பையுடைய அடியவர்களுக்கு மிகவிரும்பிய அமுதம்போன்றவரும், பாற்கடலிலெ ழுந்த கொடியவிஷத்தைத் தேவர்களைக் காக்கும்பொ

ருட்டு உண்டருளியவரும்ஆகிய பெருமானைக்கும்பிட்டு உருகிய மனதுடனே இசைநிரம்பிய தமிழ்த்திருப்பதிகத்தைப் பாடி,

## திருவண்ணாமலை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கள்தூவியுமையவள்பங்கர்மிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவேயணியண்ணாமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே.

இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடந்தவெம்மா
னுரத்தினால்வரையையூக்கவொருவிரனுதியினாலே
யரக்கனைநெரித்தவண்ணாமலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே.

திருச்சிற்றம்பலம்.

நமஸ்கரித்துத் துதித்துத் திருப்பணிசெய்து வந்தார். பாம்பைத்தரித்த சடாபாரத்தை யுடைய சிவபெருமானுடைய பாதங்களைத் துதித்துத் திருப்பணிசெய்துவருநாளிலே நீலகண்டத்தோடுகூடிய எம்பெருமான்இவ்வுலகத்திலேமகிழ்ந்தெழுந்தருளிய தலங்களெல்லாவற்றையும் குறையாத ஆசையோடுபோய்த் தரிசித்துத் திருப்பணிசெய்வாராய் அழகிய திருத்தொண்டநாட்டிலே, பெருமானருளினாலே அடைவாராயினார். ஆசைமிக்கெழும் மனத்தோடு, காடுகளையும், மலைகளையும், காட்டாறுகளையும், வயல்கள்சூழ்ந்த நகரங்கள் பலவற்றையும் கடந்து சென்று திருநாவுக்கரசர்போய்த் திருத்தொண்டைநாட்டை யடைந்து குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருவோத்தூரை யடைந்தார்.

சிவந்த சடையையுடைய திருவோத்தூர்ப் பெருமான் கோயிலிற்புகுந்து சுற்றிவந்து சன்னதியில் நமஸ்கரித்துத் துதித்து கண்ணீர்வடிய, முக்கண்களை யுடைய பெருமானைச் சொன்மாலையாகிய திருத்தாண்டகங்கள் முதலாகிய பதிகங்கள் சாத்தித் திருப்பணிசெய்து வந்தார். பின் அத்திருவோத்தூரைப்பணிந்து மேற்சென்று, உலகமுச்சீவிக்கும் பொருட்டு விஷபானம் செய்தருளிய பெருமானமர்ந்த பிறதலங்களையும் தரிசித்துக் கொண்டுசென்று பார்வதீ யானவள் தழுவின வுடனே அதற்குத்தேகங்குழைந்தருளிய பெருமான் எழுந்தருளிதெய்வத்தன்மைவாய்ந்த திருத்தலம் என்று உலகமுழுதுந் துதிக்கப்பெற்று, மதில்சூழ்ந்த திருக்காஞ்சிபுரத்தின் பக்கத்திலே வந்தணைந்தார். 'உலகமுய்யும்படி திருவதிகை ஈசர் தம்முடைய திருவருளினாலே முன்னே சூலைநோய்தந்து ஆண்டுகொண்ட திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு இங்கே எழுந்தருளும் பாக்கியத்தைப் பெற்றோம்' என்று அக்காஞ்சியில் வசிப்பவர்கள் தங்களுடைய முகங்களெல்லாம், காலையில் சூரியனைக் கண்டவுடன் மலர்கின்ற தாமரைகளைப்போல மிக மலர்ச்சியோடுகூட மிகச்சந்தோஷித்து மனந்தழைத்தவர்களாய் மாடங்கள் நிறைந்த வீதிகளிலே வீட்டு, வாயில்கள் தோறும், தோரணங்கள் தொங்கவிட்டு நீண்டவாழை, கமுகு முதலியவைகளை நாட்டி, நிறைபொற்குடங்களைத் தாபித்துத்தீபமேற்றி மலர்மாலைகளோடுகூடிய வாசப்பந்தர்களையும் தாபித்து, அசையும் கொடிகளையும் கட்டி, முன்னேயே அழகாகவிளங்கிய அக்காஞ்சிநகரத்தை யலங்கரித்தார்கள். திருவீதி

யிலே திருவலகிடல் முதலிய பணிகளை யெல்லாஞ் செய்து, அன்பர் கூட்டமானது, அரசையெதிர்கொள்வதற்காகச் சிவவேடப்பொலிவானது தோன்றக் கூடி வந்து, இண்டையாகக்கட்டிய சடையையுடைய பெருமானுக்கன்பராகிய திருநாவுக்கரசரை எதிர்கொண்டார்கள். கர்ச்சிக்கும் மேகம்போற் கரியகழுத்தையுடைய பெருமானானவர் முன்னாளாட்கொண்ட திருநாவுக்கரசர் இங்ஙனம் தம்மை எதிர்கொண்ட சிறப்பையுடைய அடியவர்களை யெல்லாம் வணங்கிப் பின், மதில்சூழ்ந்த காஞ்சி நகரத்திலேபோய், ஆகாயகங்கையுலவிய சடையையுடைய கம்பராகியபெருமானுடைய கோயிலையடைந்தார். முன்னே திருவாயிலை நமஸ்கரித்து, திருமுன்றிலை யடைந்து, கச்சியேகம்பர் அமரும் விமானத்தை வலம்வந்து, இமயமலைப் புத்திரியாகிய பெருமாட்டி தழுவத் தம்மேனி குழைந்தருளிய பெருமானை முன்னேகண்டு நமஸ்கரித்து நீங்காத அன்புபெருகநின்றார். கண்களிலிருந்து நீர் ஆறுபோல் வடிய, உடம்பில் உரோமங்கள் எல்லாம் கூச்செடுக்க, உடம்பு நடுங்க அன்பினாற்கரைந்து எலும்புமுருக, இக்கண்கள்படைத்தபேறு பெற்றானந்திக்கத் திருவேகம்பரை மனதிலே தியானித்து நிலைபெற்ற பதிகத்தைப் பாடுவாராயினார். 'கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை' என்றாரம்பித்து, யாவராலும் துதிக்கப்பெற்ற சொன்மாலையாகிய திருப்பதிகத்தைப் பாடியபின்னே

## திருவேகம் மனத்துள் வைத்த திருப்பதிகம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
யரவாடச்சடைதாழவங்கையினிலனலேந்தி
யிரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே.

அடுத்தானையுரித்தானையருச்சுனற்குப்பாசுபதங்
கொடுத்தானைக்குலவரையேசிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச்சுனைமல்குகயிலாய
மெடுத்தானைத்தடுத்தானையென்மனத்தேவைத்தேனே.

திருச்சிற்றம்பலம்.

பகைவருடைய திரிபுரத்தைஎரித்து, வெண்பல்லோடு கூடிய பாம்புமாலையை யணிந்து, இடபாரூடராய்எழுந்தருளும் பெருமானுடைய கோயிற்றிருமுன்றிற் புறத்திலே வந்தடைந்தார். மிக்க ஆசையோடு கைத்திருப்பணியையும் செய்து, செந்தமிழ்மாலைகளையும்பலபாடி, கரியகண்டத்தையுடைய பெருமானமர்ந்த திருமயானத்தை வலம் வந்து அன்பினால் விழுந்துநமஸ்கரித்து, விருபத்தோடு வருகின்ற காலத்திலே, சிறப்புடைய திருக்கச்சித்திருமேற்றளி முதலாகிப் பெருமா னமர்ந்த ஆலயங்களை விருப்பத்துடன் நமஸ்கரித்துத் துதித்து, ஆய்ந்தெடுத்த தமிழ்சொற்கள் என்னும் பூவினாற்றொடுத்த மாலைகளையும் பெருமானுக்குச் சாத்தித் திருத்தொண்டுசெய்து வந்தார். இவ்விதமாக அக்கச்சி நகரிலே வசித்திருக்கின்ற காலத்திலே, நிலைபெற்ற திரு

மாற்பேற்றை வந்தடைந்து பதிகம்பாடிப் பிறையைத் தலையிற்றுங்கிய பெருமானமர்ந்த பிறதலங்களையும் போய் வணங்கி மீண்டுந்தொடர்ந்த ஆசையினாலே காஞ்சியையடைந்து, ஒருபாகத்திலேபார்வதிதேவியை வைத்தவரும் செங்கண்ணுடைய இடபக் கொடியை யுயர்த்தினவரும், நாகங்களையே ஆபரணமாகக்கொண் டவரும், நலமிகப்பெருக்கும் திருநீற்றை மேனியிற் பூசிய அழகுடையவரும் ஆகிய வேகம்ப வாணரை யடைந்து 'ஏகம்பன் காணவனென் னெண்ணத்தானே' என்று துதித்து

## திருவேகம்பம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றுவன்காண்கூற்றுவனைக்குமைத்தகோன்காண்
குவலயன்காண்குவலயத்தினீரானான்காண்
காற்றவன்காண்கனலவன்காண்கலிக்குமின்காண்
கனபவளச்செம்மேனிகலந்தவெள்ளை
நீற்றவன்காணிலாவூருஞ்சென்னியான்கா
ணிறையார்ந்தபுனற்கங்கைநிமிர்சடைமே
லேற்றவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

அறுத்தான்காணயன்சிரத்தையமரர்வேண்ட
வாழ்கடலினஞ்சுண்டங்கணிநீர்க்கங்கை
செறுத்தான்காண்தேவர்க்குந்தேவன்றான்காண்
திசையனைத்துந்தொழுதேத்தக்கலைமான்கையிற்
பொறுத்தான்காண்புகலிடத்தைநலியவந்து
பொருகயிலையெடுத்தவன்றன்முடிதோளைந்
திறுத்தான்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

திருச்சிற்றம்பலம்.

நமஸ்கரித்தின்பமடைந்தார். இவ்வாறு திருக்கச்சியே கம்பத்தைப் பணிந்து துதித்துச்சென்று, பிறையை, நெருங்கிய தம் சடையிலணிந்த பெருமானுடைய பிற தலங்களையும் வணங்கிநினைந்து, பலாப் பழங்கள் வெடித்து அச்சுளைகளின் தேன்பாய்ந்து வயற்பயிரை விளைவித்தற் கிடமாகிய அச்செழுநீர் நாட்டில்போய் பருத்த துதிக்கை யானையுரிவையை போர்த்தருளிய பெருமானுடைய திருக்கழுக் குன்றினை வந்தடைந்து பெருமானுடைய பாதங்களை வணங்கிப் பதிகமாலை சாத்திப் பக்கத்தேயுள்ள பலபதிகளையும், பிறைமுடித்த பெருமானைத்தொழுது துதித்துச்சென்று, கடற் கரைசார்ந்த திருவான்மியூரை வந்தடைந்தார். அங்கே பெருமானைப் பணிந்து அன்போடு பதிகம்பாடி, அதன் பக்கத்திலே, ஆன்மாக்களுடைய பிறவியறுத்தருளும் பெருமானுடைய கோயில் பிறவற்றையும் வணங்கிக் கொண்டு, தமிழரசர், மாசந்தங்கிய சோலைகள்சூழ்ந்த மயிலாப்பூரை யடைந்தார். மங்கைகளிறுச்சியிலாடுவது போல, மாடங்களின்மீது மயில்கலாடுதற் கிடமாகிய சிறப்பையுடைய மயிலையிற் பெருமானை வந்தித்துப் புகழ்மிக்க திருப்பதிகம்பாடி, உழவாரப் படையாளியாகிய சொல்லரசர் கடற்கரையிலேயே சென்று திருவொற்றியூரை யடைந்தார். அந்நகரத்திலுள்ள அடியார்கள் எல்லாம் இவர் வருகையைக் கேட்டு, அந்நகரவீதிகளையெல்லாம் விளக்கஞ்செய்து, பூமாலைகளையும் வாழை கமுகுகளையும் நாட்டி பொற்குடங்கள், தூபதீபங்களேந்தி அலங்கரித்து அரசரையெதிர்கொண்டு, உள்ளழைத்துச்சென்றார்கள். திருநாவுக்கரசும், அங்கே

குன்றவில்லியாகிய பெருமானது கோயிலின் கோபுரத்தை நமஸ்கரித்து உட்புகுந்து, அத்திருத்தொண்டருடனே, ஆன்மாக்களின் பிறவிநோயை யறுத்தருளும் பெருமானைக் கைகூப்பிக் கும்பிட்டு திருமுன்னேநமஸ்கரித்தார். எழுதாக்கிளவியென்னும் வேதங்களைக் கட்டளையிட்டருளிய பெருமானைத்தொழுது அன்பினாலே நிலத்தில் விழுந்தெழுந்து, ஆனந்த பரவசராய் உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிக்க கண்கள் தாரை தாரையாக நீரைவிழுத்த மெய்ந்நடுங்கி விம்மினார். 'வண்டோங்கு செங்கமலம்' என்று தொடங்கி, மனங்கரைய, இசையோடுகூடிய திருத்தாண்டகத்தைப்பாடித் துதித்து

## திருவொற்றியூர்த் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

வண்டோங்குசெங்கமலக்கழுநீர்மல்கு
மதமத்தஞ்செஞ்சடைமேல்மதியஞ்சூடித்
திண்டோள்களாயிரமும்வீசிநின்று
திசைசேரநடமாடிசிவலோகனார்
உண்டார்நஞ்சுலகுக்கோருறுதிவேண்டி
யொற்றியூர்மேயவொளிவண்ணனார்
கண்டேனான்கனவகத்திற்கண்டேற்கென்றன்
கடும்பிணியுஞ்சுடுந்தொழிலுங்கைவிட்டாவே.

வெருவுற்றமலர்க்குழலிமடவாளஞ்ச
மலைதுளங்கச்சிலைநடுங்கச்செறுத்துநோக்கிச்
செருவுற்றவாளரக்கன்வலிதான்மாளத்
திருவடியில்விரலொன்றால்லறவூன்றி
யுருவொற்றியங்கிருவரோடிக்காண
வோங்கினவவ்வொள்ளழலாரிங்கேவந்து
திருவொற்றியூர்நம்மூரென்றுபோனார்
செறிவளைகளொன்றொன்றாய்ச்சென்றவாறே.

திருச்சிற்றம்பலம்.

ஆகாயகங்கையைச் சடையிற்றாங்கிய பெருமானுடைய திருவுருவந் தரிசித்து ஆனந்தித்துத்தொழுது வெளியே வந்தார். விளங்குகின்ற கோயிற் றிருமுன்றிலிலே கைத்திருப் பணிசெய்து, மனத்தின் விருப்பத்தினா லெழுந்த திருவிருத்தங்களும், திருநேரிசைகளும், திருக்குறுந்தொகைகளும் பலவற்றைப் பாடிக் கும்பிட்டு, வளம்பொருந்திய அந்நகரிலே பல நாள் தங்கினார். அங்கே தங்குநாள்களிலே பக்கத்திலிருந்த சிவாலயங்களிலெங்குஞ் சென்று தரிசிட்பாராய், திருவொற்றியூரீசரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு சென்று பார்வதியை யொருபாகத்தில் வைத்த பெருமானமர்ந்த திருப்பாசூரை யடைந்தார். அங்கே சேர்ந்து மனத்தில் மேன்மேலூறும் ஆசையு மன்பு மதிகரிக்க, உலகமுய்யும்படி மூங்கிலே இடமாக எழுந்தருளியவரும், பகைவர் முப்புரங்களையும் தகனஞ் செய்யும்படி மலையை வில்லாக எடுத்தருளியவரும் ஆகிய பெருமானை நமஸ்கரித்தெழுந்து துதிப்பாராய் 'முந்தி மூவெயிலெய்த முதல்வனார்' என்று தொடங்கும் திருக்குறுந்தொகையும், இன்னும் திருத்தாண்டகம், திருநேரிசைமுதலிய தமிழ்மாலைகள் பாடிப்

## திருப்பாசூர்த் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முந்திமூவெயிலெய்தமுதல்வனார்
சிந்திப்பார்வினைதீர்த்திடுஞ்செல்வனார்
ப
பந்திச்செஞ்சடைப்பாசூரடிகளே.

திரியுமூவெயில்செங்கணையொன்றினு
லெரியவெய்தனரேனுமிலங்கைக்கோ
னெரியவூன்றியிட்டார்விரலொன்றினாற்
பரியர்நுண்ணியபாகூரடிகளே.

திருச்சிற்றம்பலம்.

பெருமானுடைய திருவருள்பெற்றுத் திருநாவுக்கரசர் மேற்செல்வாராயினர். அந்த அழகிய சிறந்த தலத்தினின்றும் நீங்கிச்சென்று பக்கத்திலேயுள்ள க்ஷேத்திரங்களில், கரிய கண்டத்தையுடைய பெருமானை மகிழ்ந்து துதித்துச்சென்று, உண்மையிற் சிறிதும் நிலைதவறாத சன்மார்க்கத்திற் பரிந்த நிலையுடையராய்ச் சிறந்த திருநாவுக்கரசு பழையனூர்த் திருவாலங்காட்டை சென்று வணங்கினர்.

'திருவாலங்காட்டுறையும் செல்வர்தாமே' என்று மிக்க சிறப்பையுடைய பெரிய திருத்தாண்டக முதலாகப் பதிகங்களைப் பாடித் துதித்து

## திருவாலங்காட்டுத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாயுலகனைத்துமானார்தாமே
　　வூழிதோறூழியுயர்ந்தார்தாமே
நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமே
　　நீர்வளிதீயாகாசமானார்தாமே
கொன்றாடுங்கூற்றையுதைத்தார்தாமே
　　கோலப்பழனையுடையார்தாமே
சென்றாடுந்தீர்த்தங்களானார்தாமே
　　திருவாலங்காட்டுறையுஞ்செல்வர்தாமே.

மாலைப்பிறைசென்னிவைத்தார்தாமே
வண்கயிலைமாமலையைவந்தியாத
நீலக்கடல்சூழிலங்கைக்கோனை
நெரியவிரலாலடர்த்தார்தாமே
பாலொத்தமேனிநிறத்தார்தாமே
பழனைப்பதியையுடையார்தாமே
சீலத்தாரேத்துந்திறத்தார்தாமே
திருவாலங்காட்டுறையுஞ்செல்வர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

மற்ற தலங்களையும் மிக்க அன்போடு வணங்கி வடதிசைமேற் செல்வாராயினார். பல ஊர்களையும் நீண்ட மலைகளையும், படர்ந்த காடுகளையும் கடந்து போவார், மேலைந்கு நமக்குப்வகையாகிய மோட்சமளித்தருளும் பிரானமர்ந்த திருக்காரிக்கரையை வணங்கிக்கொண்டு, பழமையான சாஸ்திரங்களின் தலைவராய் விளங்கிய அரசர், அடியவர்களும் தேவர்களும் நெருங்கியுள்ள திருக்காளத்தி மலையை வந்துசேர்ந்தார். பொன் முகலியாற்றின் பரிசுத்தமாகிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து காளத்தி மலையின் அடிவாரத்திலே நமஸ்கரித்தெழுந்து செங்கண் விடைப்பாகராகிய ஈசர் எழுந்தருளிய அம்மலையின் மேல் ஏறிச்சென்று வலங்கொண்டு பெருமானை வணங்குவாராய், காதிலே வெண் குழையை யணிந்தவரும், காளத்தி மலையிலே முளைத்தெழுந்த கொழுந்து போன்றவரும் வேதங்களைக்கட்டருளிய மூலவஸ்துவாகிய வரும் ஆகிய பெருமானைக் கீழ்வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து மிக்க ஆசையினால் மனஞ் சந்தோஷப்பட கண்களுமானந்திக்கப் பரவசமாகி பெரு

மானை 'காளத்தியானவனென்கண்ணுளானே' என்னும் திருத்தாண்டகத்தைப் பாடினார்.

## திருக்காளத்தி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றூணொன்றில்லாதநல்கூர்ந்தான்காண்
வியன்கச்சிக்கம்பன்காண்பிச்சையல்லான்
மற்றூணொன்றில்லாதமாசதுரன்காண்
மயானத்துமைந்தன்காண்மாசொன்றில்லாப்
பொற்றூண்காண்மாமணிநற்குன்றொப்பான்காண்
பொய்யாதபொழிலேழுந்தாங்கிநின்ற
கற்றூண்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண்ணுளானே.

உண்ணாதவருநஞ்சமுண்டான்றான்கா
ணூழித்தீயன்னான்காணுகப்பார்காணப்
பண்ணாரப்பல்லியம்பாடினான்காண்
பயின்றநால்வேதத்தின்பண்பினான்கா
ணண்ணாமலையான்காணடியாரீட்ட
மலர்கள்தொழுதேத்தவருளுவான்காண்
கண்ணாரக்காண்பார்க்கோர்காட்சியான்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே.

திருச்சிற்றம்பலம்.

அம்மலைச் சிகரத்திலே சிகாமணியாய் விளங்கும் பெருமானுடைய பக்கத்திலே வலதுபுறத்தில் வில்லையேந்தியகையோடும் நிற்கின்ற கண்ணப்பருடைய திருப்பாதங்களை வணங்கி, கண்ணீர் ஆறாக தமது திருமேனியிலே வீழ்ந்து வடிய கைகளைச் சிரமேற்குவித்து நமஸ்கரித்து வெளியே வந்தார். மிகவுயர்ந்த அம்மலையிற் திருப்பணிகள் செய்து பெருமானை அந்தமலை

யில் வணங்கி அந்தக்குறிப்பினலே திருக்கயிலைமலையிலே பரம்பொருளானவர் எழுந்தருளியிருக்கும் தப்பெரிய திருவோலக்கக் காட்சியைத் தரிசிக்க வேண்டுமென்று நமது ஞானத்தலைவராகிய அரசர் இச்சை கொண்டார். அங்கே காளத்தி மலையிலே மருந்துபோன்ற பெருமானை வணங்கி விடைபெற்று மிகப்பொங்கி மேன்மேலெழுந்த ஆசையோடு வடதிசையில் விருப்பத்துடன் போவாராய் பல பெரிய மலைகளையும், நாடுகளையும், கடந்து சென்று செங்கண் விடைப்பாகராகிய பெருமானமர்ந்தருளிய திருப்பருப்பதத்தை வந்தடைந்தார். பெருமை வாய்ந்த விஞ்சையர்களும், தேவர்களும், இயக்கர்களும், சித்தர்களும், கானத்தில் வல்ல கின்னரர்களும், நாகலோகத்தவர்களும், காமசாரிகளும் முதலாக ஞானமௌனிகளும் தினந்தினம் வந்து பெருமானை வணங்கி நன்மை பெறுதற்கிடமாகிய அத்திருப்பருப்பதத்தை நமஸ்கரித்து பதிகம் பாடினர்.

## திருப்பருப்பதந் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கன்றினார்புரங்கள்மூன்றுங்கனலெரியாகச்சீறி
நின்றதோருருவந்தன்னனீர்மையுநிறையுங்கொண்டு
ஒன்றியாங்குமையுந்தாமுமூர்ப்பலிதேர்ந்துபின்னும்
பன்றிப்பின்வேடராகிப்பருப்பதநோக்கினரே.

அடல்விடையூர்தியாகியரக்கன்றோளடரவூன்றிக்
கடலிடைநஞ்சமுண்டகறையணிகண்டனார்தாஞ்
சுடர்விடுமேனிதன்மேற்சுண்ணவெண்ணீறுபூசிப்
படர்சடைமதியஞ்சேர்த்திப்பருப்பதநோக்கினரே.

திருச்சிற்றம்பலம்.

பின் அதைக்கடந்து போகின்ற திருநாவுக்கரசு சூலத்தையேந்திய பெருமானமர்ந்த கயிலையங்கிரியை நினைத்து மேன்மேலெழுந்த உள்ளக்கிளர்ச்சியினுலே மற்றெங்கே பார்த்தாலும் அவற்றில் ஆசை கொள் ளாமல் தெலுங்கு கன்னடமாகிய இந்நாடுகளைக்கட ந்து சென்று, பின் பல காடுகளையும் ஆற்றுத்துறை களையும் பெரிய மலைவழிகளையும், பெரிய நலங்கள் நிரம்பிய நாடுகளையும் கடந்து சென்று, அழகோடு வருகின்ற சூரிய கிரணங்களையும் மறைக்கின்ற சோ லைகளையுடைய மாளவ நாட்டை யடைந்தார். அதை யுங் கடந்து அரிய காடுகளையுந் தாண்டிச்சென்று, எங்கும் மிகுந்த தர்மங்கள் நீடப்பெற்ற மிலாட தே சத்தையுங் கடந்து சென்று அப்பால் மேகங்களடர் ந்த மலை காடு நதி யிவைகளையும் தாண்டிப்போய் அயலிலே, வயல்களில் தாமரை மலர்தற்கிடமாகச் செழித்த மத்திம நாட்டை யடைந்து அதனையுங்கட ந்து கங்கைக் கரையையடைந்து, அங்கே, விளங்கிய சடாபாரத்தையுடைய பெருமானது வாரணுசி (காசி) யைத் தரிசித்துக்கொண்டு அதுவரையும் தம்மோடு பின்வந்த அடியார்களை யெல்லாரையும் அங்கேயே நிறுத்திவிட்டு தாம் கங்கையைக்கடந்து சென்று, மிக்க ஆசையையுடைய திருநாவுக்கரசர் கற்சுரத்தை யடைந்தார்.

அந்தக் காடானது ஆகாயத்தை யளாவிவளர்ந்து எங்கேபார்த்தாலும் மனிதர்கள் உட்புகுந்துசெல்லக் கூடாதபடி நெருங்கிவளர்ந்து இருந்தது. அதனுட்

செல்வதில் உண்மையாக மிக உவகைகொண்டவராத லால் நமது நாவுக்கரசர், திருக்கயிலாயமென்னும் கிரியை அடையும்பொருட்டு, மேன்மேலும் அதிகரிக்கும் ஆசையினாலே, கிழங்கு கனிகளையும் சாப்பிடுதலை விட்டுவிட்டு, இரவுகளிலும் இடைவிடாது செல்வாராயினார். அப்படி மிக்க இருட்டிற்செல்வாராகிய அவ்வன்பரை யடைந்து அவர்க்குத்துன்பமியற்ற, மிருகஜாதிகளும் பயப்பட்டன. விஷவாயையுடைய பாம்புகள் மாணிக்கம்பொருந்திய தம் படமாகிய விளக்கேந்தி அவர்க்கு வழிகாட்டின. இவ்விதமாக, நமது அப்பர், கானிலந் தோயாக் கடவுளராகிய வானவர்களும் நிலத்திற்செல்வது கருதிநடந்துவரினும், தனித்துப்போகப் பயப்படக்கூடிய அக்காட்டைக் கடப்பாராயினார். மேல் வெயிலின் வெப்பத்தால் பூமியானது மிக ஆழ்ந்த பிலங்களாக வெடிப்புண்டு மிகக் கொதிக்கின்ற பாலைவனம் போன்ற இடத்தை, உண்மைத்தவசியாகிய திருநாவுக்கரசர் வந்தடைந்தார். இவ்விதமாக இரவும் பகலும் விடாது கடத்தற்கரிய காட்டிற் செல்லுவாராகிய நமதரசர் அப்படிப்போதலினால் தமது கால்கள் கணைக்காலளவும் தேய்ந்துவிடவும், அதை இலட்சியஞ் செய்யாமல், பார்வதிபாகராகிய பெருமானுடைய கயிலையங்கிரியைத் தரிசிக்கவேண்டுமென்று அதன்மீதுவைத்த மனத்தை நீங்காதவராகித் தம் இரண்டு கைகளினுதவியைக் கொண்டு தாவித்தாவி மேற் சென்றார். பின் கைகளும் மணிக்கட்டுகள் அளைந்து தேய்ந்தொழிந்தன. அதன்பின்னும் அன்பரான அப்பர், உள்ளத்திலாசையானது மேலும்மேலும் அதிகரிக்க, வெயிலின்

வெப்பத்தினால் பாறைகளிலும் புகைகிளம்பும் அக் கொடியகாட்டிலே, வருத்தப்பட்டுக்கொண்டு மார்பி னால் நகர்ந்துசென்றனர். மார்புந்தேய்ந்து தசைசிந்தி எலும்பு வெளிப்படலும், செம்மை மனத்தையுடைய திருநாவுக்கரசர், மற்றவர்கள் அறியமுடியாத தமதுஉள் ளத்துணர்ச்சியிற் பெருமானிடத் துண்டான அன்பி னாலே அவரைத் தரிசிக்கவேண்டுமென்று உயிரை யங் கே வைத்துவிட்டு, அவ்வுயிர் தங்குமிடமாகிய உடம்பு முழுதும்,ஊன்சிந்தும்படி, கடத்தற்கரிய அக்காட்டில் மெள்ளமெள்ளப் புரண்டு மேற்சென்றார். அதுவுஞ் சிலநேரத்திற்கெல்லாம் உடம்பெங்குந் தேய்ந்துவிட சொல்லற்கரிய பெருமையுடைய கயிலையைத் தரிசிக்க வேண்டுமென்னும் உள்ளத்தூண்டுதலினால், கடைசியா கப் புரண்டுசெல்வதையும், உடம்பினுறுப்புக்கள் உறு தியழிந்த பின், அம்முயற்சியையும் விட்டொழித்து, மேலே செய்வதொன்று மில்லாமல், தமிழ்ச் சிங்கமா கிய நமதரசர் அவ்வழியிற்றங்கினார். பாம்பை அணிந்த பெருமானனவர், திருநாவுக்கரசு பின்னும் சிலகாலம் பூமியில் இருந்து மேலும் பலதேவாரப் பதிகங்களைப் பாடும்பொருட்டு, அவர் இப்போதே கயிலாய தரிச னஞ்செய்வதற்கு அருள்செய்யாராகி, அப்போது அங் கே நல்லநீர் நிறைந்த தடாகமொன்றுண்டுபண்ணி அதனிடத்தே ஒர் முனிவரின் உருவத்தோடு எழுந்த ருளிவந்தார். அப்பரின் முன்னே நின்று அவர் துன் பத்திற்கு தாம் மிகவருந்தியவர்போன்று அவரைப் பார்த்தபோது, அவரும் எதிர் இவரைப்பார்த்த அள வில் அவனை, 'நீர், உமது இந்த உறுப்புக்களெல்லாம்

இவ்வாறு தேய்ந்துவிடவும் இவ்வளவு வருத்தப்பட்டு இந்தக்கொடிய காட்டில் வந்தஎண்ணம்யாது?' என்று கேட்டார். குற்றமற்ற மரவுரியாலாகிய ஆடையும், மார்பில் முப்புரிநூலும், பிரகாசிக்கின்ற சடாபாரமும், திருமேனியிலே விபூதியும் விளங்கும்படி எதிர்நின்ற முனிவரைப் பெரிய அன்பராகிய அப்பர்பார்த்துப்பேசும்பலம் கொஞ்சம் வந்தவுடன் சொல்வாராய் "முனிவரே, வண்டுகள் சப்திக்கும் கூந்தலையுடைய உமாதேவிபாகராய் ஸ்ரீ வடகயிலாயத்திலே, தேவர்பெருமானாகிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் அத்திருக்காட்சியை நான்நேரேகண்டு வணங்கும் விருப்பத்தினோடு, ஆசை மேன்மேலுந்த இங்கு வந்தடைந்தேன் என் உள்ளக்கருத்து இது" என்றுசொன்னார். இதுகேட்டு, மார்பில் பூணுநூலணிந்தமுனிவர், "திருக்கயிலையாகிய ஒப்பற்றமலை, இந்தப் பூமியில் பிறந்துழலும் சாமானிய மனிதர்கள் அடைவதற்கெளிதோ? அல்ல. அங்கே ஆயுதங்களையுடைய பற்பலதேவர்களும் சேர்தலருமையே. வெப்பம் பொருந்திய இக்காட்டில் வந்தது என்ன அறியாமை! இனி மீண்டும் திரும்பி ஊர் போவதே உமக்குக் கடனாகும்" என்று சொல்ல, அப்பர் "என்னையாண்டநாயகராகிய பெருமான் கயிலையில் வீற்றிருக்கும் திருக் காட்சியைத் தரிசித்தல்லாமல், என்றிருந்தாலும் அழியக்கூடிய இவ்வுடம்போடு நான் திரும்பிப்போகேன்" என்று மறுத்தார். அவர்துணிவை யறிந்தவராகி, அவர் தம்மை யறிந்துகொள்ளச் செய்யும்படி அந்தமாதவப்பிரான், ஆகாயத்தில் மறைந்தருளி, அசரீரிவாக்காலே ஆகாயத்தில் நின்று 'ஓங்

கிய திருநாவுக்கரசனே! எழுந்திரு' என்று சொன்னவ ளவில், அப்பர் தம் திருமேனியி லுண்டாகிய புண் ணெல்லாம்போய் நல்லுடம்புடனே எழுந்து விளங்கி ஞர். 'பெருமானே! என்னையாட்கொண்டருளிய அமு தம்போன்றவரே! என்முன்வந்து பின் ஆகாயத்தில் மறைந்தருளிய வேதநாயகரே! நான் திருக்கயிலையை யடைந்து இந்தக் கண்களினலே தேவரீர் எழுந்தரு ளிய திருக்காட்சியைத் தரிசிக்க அருள் புரியவேண் டும், என்று நமஸ்கரித்தார். பெருமானும், இவ்வண் ணம் தம்மைத் துதித்தெழுந்த நல்ல அன்பரைப் பார் த்து, ஆகாயத்திலேஅசரீரியாகிய தமதுநிறைந்த திரு வாக்கினல் 'அன்பனே! நீ இந்தத்தடாகத்திலே முழு கிப்பின், நாம் திருக்கயிலையிலிருக்கும் அக்காட்சியைக் குற்றமற்றசிறப்பையுடைய திருவையாற்றிலே தரிசிப் பாயாக' என்று கட்டளையிட்டருளினர். இடபத்தை யுடையபெருமானர் இவ்விதமாக அருளியதைத்தமது தலையின்மேற்கொண்டு நமஸ்கரித்து 'வேற்றாகிவிண் ணாகி நின்றாய்போற்றி' என்னும் திருப்பதிகம் பாடித் துதித்து, வன்மையையுடைய அத்திருநாவுக்கரசர் தி ருப்பஞ்சாட்சரத்தைத் துதித்துக்கொண்டு, பால்போ லப்பரந்த நீரையுடைய அத்தடாகத்திலே பெருமான் கட்டளையின்படி மூழ்கினர். ஞானமிகுந்த தவசியா கிய அப்பர் இவ்வாறு குளிர்ந்த அத்தடாகத்தில் மூழ் கிப் பின் உடனே, பெருமான் மகிழ்ந்தமரும் திருவை யாற்றிலே ஓர் தடாகக்கரையிலே, உலகம்எல்லாம் அதி சயிக்குமாறு எழுந்தார். ஆதிதேவருடைய திருவருட் பெருமையையும் யாராவது அறியமுடியுமோ! வாச

னேயோடு கூடிய மலர்கள் நிறைந்துள்ள அத்தடாகத்தின் கரையில் ஏறித் தேவர்பெருமானாகிய சிவபிரானுடைய திருவருட்பெருமையை நினைத்து, 'எம்பெருமான் எனக்குத் தந்த கருணைத்திறமோ இது' என்று இரண்டு கண்களிலும் தாரைதாரையாகச்சலம் தம்மேல்வடிய அதனால்குளத்தில்முழ்கி எழுந்தவர்போல் நனைந்து நின்றார். கொடிகள் நெருங்கிவிளங்கப்பெற்ற திருவையாற்றிலே எழுந்தருளிய உடையவருடைய சிவந்த பாதங்களில் நமஸ்கரிப்பதற்காக அவர் வந்துகொண்டிருக்க அங்கே அத்திருப்பதியில் நிற்பனவுஞ் செல்பனவுமான எல்லாச்செந்துக்களும் பக்கத்திலே தந்தம் துணையுடனே விளங்குவதைக் கண்டார். பார்வதியோடுகூடிக் கயிலைமால்வரையில், பெருமான் எழுந்தருளியிருக்கும் அத்தன்மையினால், இப்பூவுலகிலேயும் பற்பல யோனிபேதங்களாகிய செந்துக்களும், அச்சத்தி சிவத் தோற்றம்போலக் கூடி நின்றதைக் கண்டு அப்பர் பணிந்து பின், பெருமான் எழுந்தருளிய திருக்கோயிலின்முன்வந்து சேர்ந்தார். வந்தவுடனே அங்கே நிகழ்ந்தது என்ன? அந்தப்பெரிய கோயிலே திருக்கயிலாயபர்வதமாக உருக்கொள்ளவும், அங்கே பெருமானடிகளைப் போற்றும் பிரமா விஷ்ணு இந்திரன் முதலிய பெரிய தேவர்கள் மிக்க அன்போடு துதிக்கும் சத்தமானது அதிகரிக்கவும், பெருமானருளிய வேதங்களெல்லாம் தனித்தனியாக அங்கே முழங்கிக்கொண்டிருக்கவும், தேவர்கள், தானவர்கள், சித்தர்கள், வித்தியாதரர்கள், இயக்கர்கள், மகாதவசிகள், முனிவர்கள் ஆகிய இவர்களெல்லாரும் பக்கங்களிலே,

நெருங்கியிருக்கவும், நீலோற்பலம்போன்ற கண்களை யுடைய அரம்பை முதலிய தேவமாதர்களுடைய பாட்டொலியும் ஆட்டொலியும் எழுகடலின் ஓசையினும் மிகுந்தொலிக்கவும், கங்கை முதலாகத் தெய்வத்தன்மைவாய்ந்த மாநதிகளெல்லாம் மங்கலஞ்செய்யும் தமது மிக்கநீரைக்கொண்டு வணங்கவும், எங்கேயும் பெரியசிவகணத்தலைவர்கள் நமஸ்கரிக்கவும், பலபலவாத்தியங்களை முழக்கி பூதவேதாளங்கள் துதிக்கவும், அங்கே வந்தவர்கள், வெள்ளிமாமலையானது இரண்டுதானோவென்று சந்தேகிக்கும்படி வெண்மை வாய்ந்த செங்கண்மால்விடையானது எதிரேநிற்கவும், முந்தைமாதவப்பயனால் முதன்மைபெற்ற நந்தியெம்பெருமான் சன்னதியிலக்கி நடுவேநிற்கவும் வெள்ளிமலையின் மீது பிரகாசிக்கும் பவளமலையானது தன்மீதுமரகதக் கொடியொன்று படரும்படியாக வீற்றிருந்ததோவென்று சொல்லும்படி, தம் இடப்பக்கத்திலே பார்வதியோடுகூட வீற்றிருந்தருளிய சிவபெருமானைத் திருநாவுக்கரசு கண்டார். கண்டதாகிய அந்த ஆனந்தக்கடலைத் தம் கண்களால் முகந்துகொண்டு, கைகளைச் சிரமேற்குவித்து எதிரேகிழ்வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து உடம்பு விதிர்க்க, பெருமான் முன்னே நின்று திருநாவுக்கரசு, ஆடினார், பாடினார், அழுதார். அங்கே அவர்க்கு அப்போது நிகழ்ந்தமெய்ப்பாட்டை யாவர்சொல்லவல்லார்கள்? ஒருவருமில்லை. தம் கண்களுக்கு முன்னே கண்டுகொண்டு, பெருமானருளாகிய அமுதத்தை உண்ணும்படிக் குறையாத அன்பையுடைய திருநாவுக்கரசு ஆசையானது மேன்மேலுதிக்கப் பொன்போ

லப்பிரகாசிக்கும் சடையையுடைய பெருமானைத்துதிக்கும் திருத்தாண்டகத்தைப் பாடிபோற்றினார்.

## திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்திரிபுரங்கணீறுநோக்கு
மனலாடியாரமுதேயென்றேனானே
கூரார்மழுவாட்படையொன்றேந்திக்
குறட்பூதப்பல்படையாயென்றேனானே
பேராயிரமுடையாயென்றேனானே
பிறைசூடும்பிஞ்ஞகனேயென்றேனானே
யாராவமுதேயென்னையாறனே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே.

வில்லாடிவேடனேயென்றேனானே
வெண்ணீறுமெய்க்கணிந்தாயென்றேனானே
சொல்லாயசூழலாயென்றேனானே
சுலாவாயதொன்னெறியேயென்றேனானே
யெல்லாமாயென்னுயிரேயென்றேனானே
யிலங்கையர்கோன்றோளிறுத்தாயென்றேனானே
யல்லாவினைதீர்க்குமையாறனே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே.

திருச்சிற்றம்பலம்.

இவ்விதமாக அன்பர் மனதின்பமுறும்படியாகக் கயிலையெம்பெருமான் தமது பிராட்டியாருடனே எழுந்தருளியிருந்து, பின் அத்தொண்டர் தம்மெதிரே தொழுது நின்றவுடனே அந்த அற்புதக்காட்சியை மறைத்தருளி, அத்திருவையாற்றிலே யிருக்கின்ற காட்சியையே காட்டியருளினார். பெருமான் இவ்வாறு தமது காட்சிகொடுத்து மறைந்ததும் அப்பர் மனம்வரு

ந்திப்பின் பெருமானுடைய திருவருளோ இது என்று தெளிந்து தேசமுய்யும்வகை தாம் கண்ட காட்சியை மிகமகிழ்சியோடுபொடுவாராய் 'மாதர்ப்பிறைக்கண்ணி' என்னும் குற்றமற்ற சொற்களாலாகிய திருப்பதிகங் களால் 'பெருமானமர்ந்தருளும் திருவையாற்றிலே யிருக்கும் சராசரங்களெல்லாம் தம்தம் காதற்றுணை யோடுகூடி யிருக்கக்கண்டேன்' என்றுபாடி நின்றார்.

## திருவையாறு.

பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்.

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததொர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததொரன்போடையாறடைகின்றபோது
விளமணநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

பெருமானைத் தரிசித்து நமஸ்கரித்துத் துதித்து திருத்தாண்டகங்களும், திருக்குறுந் தொகைகளும், திருநேரிசைகளும் மிக அன்புநிறைந்த திருவிருத்தங் களும் பாடி வணங்கிக் கைத்திருத்தொண்டு செய்து அங்கே திருவையாற்றில் திருநாவுக்கரசர் சிலநாள்தங் கினார். பின் அங்கிருந்துபோய் திருநெய்த்தானம் முத

லாகப் பக்கத்திலேயுள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருமழபாடிப்பிரானைக் கும்பிட்டுப் பதிகம்பாடிப் பணிசெய்து வணங்கிப் பிரம்ம விஷ்ணுக்களுக் கெட்டாத பெருமானமர்ந்த திருப்பூந்துருத்தியைச் சார்ந்தார். விருப்பத்தோடும் உள்ளே புகுந்து திருக்கோயிலின் முன்னேவந்து வலம்வந்துவணங்கிப் பெருமானுடைய சன்னிதானத்திலே அன்போடும் பணிந்து நிறைந்து நீங்காத ஆசை அதிகரிக்கக் கண்ணீர் துளும்ப ஆனந்தபரவசராகித் 'திருப்பூந்துருத்தியிலே எழுந்தருளிய செவ்விய சடாபாரத்தை யுடையாரும் மலைபோலும் இடபத்தை வாகனமாக வுடையாரும் ஆகிய பொய்யிலியைக் கண்டேன்' என்று ஆசைநிறைந்த திருத்தாண்டகத்தையும்,

## திருப்பூந்துருத்தி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எனக்கென்றுமினியானையெம்மான்றன்னை
    யெழிலாருமேகம்பமேயான்றன்னை
மனக்கென்றும்வருவானைவஞ்சர்நெஞ்சி
    னில்லானைநின்றியூர்மேயான்றன்னைத்
தனக்கென்றுமடியேனையாளாக்கொண்ட
    சங்கரனைச்சங்கவார்குழையான்றன்னைப்
புனக்கொன்றைத்தாரணிந்தபுநிதன்றன்னைப்
    பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனானே.

மறுத்தானைமலைகோத்தங்கெடுத்தான்றன்னை
    மணிமுடியோடிருபதுதோணெரியக்காலா
லிறுத்தானையெழுநரம்பினிசைகேட்டானை
    யெண்டிசைக்குங்கண்ணானைச்சிரமேலொன்றை

யறுத்தானையமரர்களுக்கமுதீந்தானை
யாவர்க்குந்தாங்கொணாநஞ்சமுண்டு
பொறுத்தானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனானே.

திருச்சிற்றம்பலம்.

'இருப்போம் திருவடிக்கீழ்நாம்' என்னும் திருக்குறுந்தொகையையும்பாடிப் பின்னும் 'நாம் அடிபோற்றுவதே' என்னும் தமிழ்த்திருவிருத்தத்தைப்பாடித் துதித்து அங்கே தங்கித் திருத்தொண்டுசெய்து பெருமானுடைய திருவருள்பெற்றுப் பின் சூரிய சந்திரர் தோயும்படி உயர்ந்த திருமடமொன்றை அங்கே அமைத்தார். பலவகைத் திருத்தாண்டகம், தனித்திருத்தாண்டகம் அடியார் துயர்களையும் பெருமானிடத்தே அடைவு திருத்தாண்டகம், உய்யும்வகை தொடுக்கும்படித் துதிக்கும் திருவங்கமாலைமுதலாகிய பலபதிகத்தொகைகளையும் அங்கே அருளிச்செய்து தங்கியிருந்தார்.

## பலவகைத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நேர்ந்தொருத்தியொருபாகத்தடங்கக்கண்டு
நிலைதளரவாயிரமாமுகத்தினோடு
பாய்ந்தொருத்திபடர்சடைமேற்பயிலக்கண்டு
படவரவும்பனிமதியும்வைத்தசெல்வர்
தாந்திருத்தித்தம்மனத்தையொருக்காற்றொண்டர்
தனித்தொருதண்டேன்றிமெய்தளராமுன்னம்
பூந்துருத்திபூந்துருத்தியென்பீராகிற்
பொல்லாப்புலாற்றுருத்திபோக்கலாமே.

தந்தையார்தாயாருடன்பிறந்தார்
தாரமார்புத்திரரார்தாந்தாமாரே
வந்தவாறெங்கனேபோமாறேதோ
மாயமாமிதற்கேதுமகிழவேண்டா
சிந்தையீருமக்கொன்றுசொல்லக்கேண்மின்
றிகழ்மதியும்வாளரவுந்திளைக்குஞ்சென்னி
யெந்தையார்திருநாமநமச்சிவாய
வென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே.

திருச்சிற்றம்பலம்.

## தனித்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பனீயம்மைநீயையனுநீ
யன்புடையமாமனுமாமியுநீ
யொப்புடையமாதருமொண்பொருளுநீ
யொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ
துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ
யிப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீ
யிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே.

சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத்தருவரேனு
மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோ
மாதேவர்க்கேகாந்தரல்லாராகி
லங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயரா
யாவுரித்துத்தின்றுழலும்புலையரேனுங்
கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி
லவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருஅங்கமாலை.

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய்
தலைமாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத்
தலையேநீவணங்காய்.

தேடிக்கண்டுகொண்டேன்
திருமாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுள்ளே
தேடிக்கண்டுகொண்டேனே.

திருச்சிற்றம்பலம்.

காவிரியாறு சூழ்ந்த திருப்பூந்துருத்தியிலே அப்பர் இருக்குங் காலத்திலே, கலங்காநெஞ்சமுடைய வலிய சமணர்களை வாதிலே வென்று அழித்துப் பாண்டியனது கூனையும் நிமிர்த்தருளி திருநீற்றினொளியைப் பரவச்செய்து சிறப்புவாய்ந்த சீகாழிப்பிள்ளையார் திரும்பிவந்தார். செந்தமிழ் நாடாகிய பாண்டியநாட்டிலிருந்து காவிரிநாடாகிய சோழநாட்டிலே வந்த அப்பிள்ளையார் திருநாவுக்கரசர் தங்கியிருக்கின்ற செய்தியைக் கேள்விப்பட்டுச் சீக்கிரம் அவரிடம் போவேன் என்று நினைந்து திருப்பூந்துருத்தி நகரத்தின் புறத்திலே வந்தடைந்தார். இவ்வாறு சீகாழிபிள்ளையார் எழுந்தருள்வதை, உலகம் பரவும் சிறப்பு வாய்ந்த அப்பர் கேட்டு மனமகிழ்ந்து கண்களானவை மிக ஆனந்தங் கொள்ளும்படி கண்டு வணங்கும் ஆசையினாலே எழுந்தருளி யெதிரேபோனார்.

ஆளுடைய பிள்ளையார் வரும்வழியிலே சென்றடைந்து அவருடைய அடியார்கூட்டத்தின் நெருக்கத்திலே அவர் நம்மைக்காணாதபடி அவரைத் தொழுது அப்பர், 'பிள்ளையாரெழுந்தருளிவரும் முத்துச் சிவிகையை என்புன்னுடலினால் நான்தாங்குவேனாக' என்று துணிந்து தாங்கிச் சென்றார். திருநாவுக்கரசர், 'கோவணம்பிறைநெயவும் கொள்கையார்' என்றபடி முற்றத்துறந்த முழுமூர்த்தியானதுபற்றி, அவரை அவர் திருத்தொண்டினாலும், திருவாக்காலும் அறியலாமேயன்றி வெளிவேடத்தாலறிய லாகாமையின் முன் இவரைக்கண்டு தரிசித்துங் கலந்திருந்த திருஞானசம்பந்தரின் பரிசனங்களிலுங்கூட, இவ்விதமாக அவர் பிள்ளையாரெழுந்தருளிவரும் அழகிய முத்துச் சிவிகையை மற்றவர்களோடு தாமுமொருவராய்க் கலந்து தாங்கி மனங்களித்துச் செல்வாரை ஒருவரும் அறிந்தாரில்லை. திருஞானசம்பந்தர், அப்பர் இருந்த திருப்பூந்துருத்திக் கருகிலே வந்ததும் 'அப்பர் எங்கே யிருக்கின்றார்?' என்று கேட்க அதற்கு அப்பர் மிக வுருகி 'அடியேன் தேவரீருடைய திருவடிகளைத் தாங்கும் பெரும்பாக்கியத்தைப் பெற்று இங்கே யிருக்கின்றேன்' என்றார். பிள்ளையார் இதைக் கேட்டதும் மிக விரைவாகக் கீழிறங்கி, மனம் மிகப்பதைத்து ஆண்டவரைவணங்க, அப்பரும் அவர்வணங்குவதற்கு முன் தாம் அவரை வணங்கவும் பக்கத்தே சூழ்ந்த சிவனடியார்களெல்லாரும் தொழுது அரகரவோசை முழக்கினார்கள். இவ்வாறு சீகாழிப்பிள்ளையாரும் திருநாவுக்கரசரும் கூடிச்சென்று சந்திரன் தவழ்தற்கிடமாகிய

சோலைகள் சூழ்ந்த திருப்பூந்துருத்தி நகரத்திலே மழுமானேந்திய மாதொருபாகருடைய பாதங்களைவணங்கித் துதித்து அங்கே இருவரும் தங்கினார்கள். வலிய சமணர்களை வாதில்வென்றதும், பாண்டியனுடைய கூனை நீக்கியதும், திருநீற்றைப் பரவச்செய்ததும் ஆகிய இவற்றைப் பெருந்தவத்தையுடைய பிள்ளையார் சொல்லக்கேட்டுக் குற்றமற்ற புகழையுடைய அப்பர் மிக மகிழ்ந்தார். கற்பிற்சிறந்த மங்கையர்க்கரசியாருடைய அன்பின் தன்மையும், சினேகங்கொண்ட குலச்சிறை நாயனாருடைய பெருமையையும் பிள்ளையார் மிக எடுத்துச்சொல்ல, அளவற்ற சிறப்புடைய அப்பர் தாமும் அத்தமிழ்நாடாகிய பாண்டிநாட்டைத் தரிசிப்பதற்கு விருப்பங்கொண்டு பிள்ளையாரை நோக்கித் திருத்தொண்டைநாட்டிலே பெருமானமர்ந்த திருத்தலங்களைத் தரிசித்துப் பாடும்படி சொல்லியருள அவரும் அதற்கு இசைந்து, திருப்பூந்துருத்தியாரை வணங்கி விடைபெற்று மேற்செல்வாராயினார். திருநாவுக்கரசும் பெருமானுடைய விடைபெற்று அங்கிருந்து புறப்பட்டுப் பாண்டிநாடு நோக்கிப் போவாராய்த் தென்றிசையிற் போய் திருப்புத்தூரை வணங்கித் துதித்துக்கொண்டு சென்று, சந்திரனைத்தீண்டும்படி நீண்ட கொடிகளையுடைய மதில்சூழ்ந்த திருவாலவாய் என்னும் மதுரையையடைந்தார். அங்கே திருந்திய தமிழ்ச்சங்கத்திலேயிருந்து தமிழாராய்ந்த பெருமானுடைய கோயில் திருமுற்றத்தை வலங்கொண்டு முன்னே நமஸ்கரித்து உள்ளேசென்று பெரியஇடபத்தை வாகனமாகவுடைய பெருமானை வணங்கி மிக மகிழ்ச்சியோடு ஆனந்தித்

தார். பொருந்தியமிக்க ஆனந்தத்திலேமுழுகிப் பெரு மானை 'முளைத்தானை' என்று தொடங்கும் திருத்தாண் டகம்பாடித் துதித்து,

## திருவாலவாய் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி
முதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும்
வரைசிலையாவாசுகிமாநாணுக்கோத்துத்
துளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத்
தூழ்த்தவெண்முறுவலுமையோடாடித்
திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

தூர்த்தனைத்தோண்முடிபத்திறுத்தான்றன்னைத்
தொன்னரம்பினின்னிசைகேட்டருள்செய்தானைப்
பார்த்தனைப்பணிகண்டுபரிந்தான்றன்னைப்
பரிந்தவற்குப்பாசுபதமீந்தான்றன்னை
யாத்தனையடியேனுக்கன்பன்றன்னை
யளாவிலாப்பல்லூழிகண்டுநின்ற
தீர்த்தனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

திருச்சிற்றம்பலம்.

வெளியேவந்து வணங்கி மனமகிழ்ந்தார் போது, சிறப்பின் விளங்கிய மங்கையர்க்கரசியாரும், கூனிமிர்ந்த பாண்டியராசனும், உலகம் புகமும் குலச் சிறை மந்திரியாரும் வந்து வாகீசரை வணங்கி ஆராத ஆசையோடு துதிக்க அவரும் அங்கே தங்கியிருந்

தார். பின் திருவாலவாயில் எழுந்தருளியவரும், பொருளிலக்கணம் அருளிச்செய்தவரும் ஆகிய பெருமானைத் திருநேரிசை, திருத்தாண்டகம் முதலாகிய உண்மைத் தமிழ்ப்பதிகங்களாற் பாடித்துதித்துத் திருப்பணிசெய்து சிலநாளிருந்து பின் பகைவர் முப்புரநீறுபடுத்திய முக்கட் பிரானமர்ந்த திருப்பூவணத்தையடைந்தார்.

அங்கே கோயிலுட்சென்று விண்ணுறைவுக்குமெட்டாத பெருமானைச் சேவித்து வணங்கி 'வடிவேறு திரிசூலம்' என்று தொடங்கும் திருத்தாண்டகத்தால் துதித்துப்

## திருப்பூவணம் - திருத்தாண்டகம்.

### திருச்சிற்றம்பலம்.

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்
வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்றுங்
கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்
காதில்வெண்குழைதோடுகலந்துதோன்று
மிடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்று
மெழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும்
பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுந்தோன்று

நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

திருச்சிற்றம்பலம்.

சென்று பெருமானுடைய பிறதலங்களையுந் தரிசிக்க நினைந்து தென்னிலங்கையிலே இராவணனுடைய பத்துத்தலைகளையும் அறுத்த இராமனுக்குண்டான பெரும்பாதகத்தைத் தீர்த்தருளிய பெருமானைக் கும்பிட நினைந்து சென்று அங்கே மிக மகிழ்ச்சி கொண்டு மனங்கரைந்துருகத் தொழுதெழுந்தார். தேவர்கள் எல்லாம் வந்திக்கும் ஒப்பற்ற முதல் வரும், திருவிராமேச்சரத்திலே எழுந்தருளிய இறைவனும் ஆகிய பெருமான் முன்னிலையில் நின்று மிக்க விருப்பத்தினாலே திருநேரிசைகள் முதலாகப் பதிகங்களைப் பாடித் துதித்து,

## இராமேச்சுரம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பாசமுங்கழிக்ககில்லாவரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டுமதியினுன் மால்செய்கோயி
னேசமிக்கன்பினாலேநினைமினீர்நின்றுநாளுந்
தேசமிக்கானிருந்ததிருவிராமேச்சுரமே.

வரைகளொத்தேயுயர்ந்தமணிமுடியரக்கர்கோனை
விரையமுற்றறவொடுக்கிமீண்டுமால்செய்தகோயி
றிரைகண்முத்தால்வணங்குந்திருவிராமேச்சுரத்தை
யுரைகள்பத்தாலுரைப்பாருள்குவாரன்பினாலே.

திருச்சிற்றம்பலம்.

அப்பர் அங்கே திருத்தொண்டு செய்துகொண்டமர்ந்திருந்தார். அங்கே சிலநாளிருந்து பின் பெருமானுடைய விடைபெற்றுச் சென்று தமிழ்நாட்டிலேயுள்ள திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலாகிய பெருமானமர்ந்த திருப்பதிகளைத் தரிசிப்பாராய் அங்கங்கே சென்று கும்பிட்டுப் பலவகையாலும் திருப்பதிகங்களைப் பாடித் திருத்தொண்டு செய்து எப்பொழுதும் மாறாது கண்களிலிருந்து நீர் வடியப் பெருமானுடைய திருவடிகளையே தழுவிய மனத்துடனே அவ்வுணர்ச்சியோடு சஞ்சரித்துவந்தார். தேன்பொருந்திய சோலைகள் சூழ்ந்த செந்தமிழ் நாட்டிலே எல்லாப்பதிகளிலும் போய்வணங்கிப் பெருமானைத் தரிசிப்பவராகிய அப்பர் காவிரி நாட்டையடைந்து அந்த ஆறு சூழ்ந்த திருப்பதிகளைப் பின்னுந் தரிசித்துக் கடைசியாகப் பொய்யாகிய பாசங்களைப் போக்குவாராய் திருப்புகலூரை வந்தடைந்தார். பொய்கைகள் சூழ்ந்த அழகிய புகலூரிலே பெருமானுடைய மலர்ப் பாதங்களை வணங்கி உருகிய மனத்தின் நிறைந்த அன்போடு தினந்தோறும் திருமுன்றிலிலே கைத்திருத்தொண்டு செய்து மிக்க ஆசையுடன் அங்கே யிருக்கு நாள்களிலே அளவில்லாத பல திருப்பதிகங்களை யருளிச்செய்தார். அப்பதியிலே, நின்ற திருத்தாண்டகம், தனித்தாண்டகம், பெருமானுடைய தலங்களையெல்லாம் துதிக்கும் திருக்ஷேத்திரக்கோவை, குறைந்ததிருநேரிசை, தனித்திருநேரிசை, ஆருயிர்த்திருவிருத்தம், தசபுராணம், பாவநாசப்பதிகம், முதலான பிறபதிகங்களையும், அருட்கடலளிக்கும் அண்ணலா

ரான பெருமானைத் துதித்துப் பாடினார். இந்த நிலைமையிலே திருநாவுக்கரசர் திருப்பணிசெய்து கொண்டிருக்க அவருடைய நன்னிலைமையை உலகுக்குக் காட்டுவாராய்ச் சிவபெருமான், அவர் திரு முன்றிலிலே திருப்பணி செய்யத் தம் உழவாரத்தை வைத்தவிடமெல்லாம் பொன்னும் நவமணிகளும் வெளிப்படும்படியாக அருள்செய்தார். செவ்விய பொன்னும் நவமணிகளும் அங்கே விளங்கவும், அவற்றையும் எம்பெருமான்திரு முன்றிலிலே உருளும் பருக்கைக் கல்லுடனே சமமாய் மதித்து அப்பர் தமது உழவாரத்திலே அவற்றை ஏந்திச் சென்று வாசந்தங்கிய பூக்கள் மலர்ந்த தடாகத்திலே எறிந்தனர். புல்லும் கல்லும் பொன்னும் மணியும், சொல்லும் என்றெல்லாவற்றையும் ஒப்பக்கருதும் உத்தமராகிய திருநாவுக்கரசின் முன்னே, திருப்புகலூர்ப் பெருமானுடைய திருவருளினாலே விற்போன்ற நெற்றியையுடைய தெய்வப்பெண்கள் ஆகாயமார்க்கமாக வந்து கீழிறங்கினார்கள். வானத்திலேயிருந்து மின்னற் கொடிகள் வந்து இறங்கினாற்போல வந்து சுருதிகளிற் சொல்லிய அலங்காரத் தன்மை வாய்ந்த கானமாகிய அமுதத்தை வெளிவிடும் கனிபோன்ற வாயின் ஒளிவீசவும், நீண்டகண்களினொளி வீசவும் இசைபாடினார்கள்; கற்பகத்தின் பூந்தளிர்போலு மெல்லிய அடிகள் அழகிய சாரிகை செய்யவும், நீலோற்பல மொட்டுப்போலும் விரல்வட்டணை யோடுங் கையானது அவ்வடிக்கிசையப் பெயரவும், இந்தக்கையின் அசைவிற்கிசைய மீன்போலும் கண்கள் பக்கங்களிற் பெயரவும், அற்புதமாகிய பொன்

கொடியானது அசைந்தாடுவதுபோல் ஆடினார்கள். இவ்விதமாக அவர்கள் சிலநேரம் ஆடுவார்கள்; சில நேரம் பாடுவார்கள்; பின் இவர்மீது பூமாரி பெய்வார்கள். தழுவுபவர்கள் போலப் பக்கத்திலே வருவார்கள். கூந்தல்விழவும், இடையானது நுடங்கவும், ஓடுவார்கள். பின்னும் மன்மதனையும் உடன் அழைத்துக் கொண்டு திரும்பிவருவார்கள். தம்மொழி பெருகும்படி நிற்பார்கள். துகில் அசையும்படி நிற்பார்கள். இவ்விதமாக அரம்பையர்கள் எல்லாவிதத்தாலும் தம் மயக்கச்செய்கைகளைச் செய்யவும், பெருமானுடைய திருவடிகளிலே பதிந்த நினைவு மாறாத அன்பினாலே உருகிய மெய்ப்பாட்டையுடைய குற்றமற்ற தவத்தையுடைய திருநாவுக்கரசர் தமது மனத்திலே சிறிதும் திரியாமல் தாம் செய்த திருத்தொண்டிலே ஊன்றி நின்றார். நிலையற்றதும், பாவந்தருவதும், பந்திப்பதுமாகிய இந்த இருவினைகளை நோக்கி 'உம்மால் ஆகவேண்டிய குறை எனக்கு என்ன இருக்கின்றது. திருவாரூர்ப் பெருமானுக்கே அடிமையாயினேன். நீவிர் வீணே அலையவேண்டாம்' என்று 'பொய்ம்மாயப்பெருங்கடலுள்' என்னும் திருத்தாண்டகத்தைப் பாடினார்.

## திருவாரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்ம்மாயப்பெருங்கடலிற்புலம்பாநின்ற
புண்ணியங்காள்தீவினைகாள்திருவேநீங்க
ளிம்மாயப்பெருங்கடலையரித்துத்தின்பீர்க்
கில்லைகிடந்ததுதான்யானேல்வானோர்

தம்மானைத்தலைமகனைத்தண்ணலாரூர்த்
　　தடங்கடலைத்தொடர்ந்தோரையடங்கச்செய்து
மெம்மான்றனடித்தொடர்வானுழிதர்கின்றே
　　னிடையிலேனெ்கெடுவீர்காளிடறேன்மின்னே.

சுருக்கமொடுபெருக்கநிலைநீத்தல்பற்றித்
　　துப்பறையென்றனைவீரிவ்வுலகையோடிச்
செருக்கிமிகைசெலுத்தியுமசெய்கைவைகல்
　　செய்கின்றீர்க்கமையாதேயானேன்மிக்க
தருக்கிமிகவரையெடுத்தவரக்கனாகந்
　　தளரவடியெடுத்தவன்றன்பாடல்கேட்டு
விரக்கமெழுந்தருளியவெம்பெருமான்பாதத்
　　திடையிலேன்கெடுவீர்காளிடறேன்மின்னே.

திருச்சிற்றம்பலம்.

'இந்தத் தெய்வப்பெண்கள் இவர்பக்கத்திலே நெருங்கவந்து மதனவசக்காதனுடையவர்கள் செய்யும் வஞ்சனைகளைச் செய்யவும் பேதமில்லாது ஒன்றாகிய உணர்ச்சியையுடைய பெரியவராகிய அப்பரைத் திரிவிக்க முடியாமைப்பற்றி வேறொரு செயலு மில்லாததால் அவரைப் பணிந்து போய்விட்டார்கள். இந்தத் தன்மையை ஏழுலகங்களும் அறிந்து துதிக்க, நிலைபெற்ற அன்போடுகூடியபக்தியே வடிவமான அப்பர், பிரகாசிக்கு சடாபாரத்தையுடைய பெருமானுடையமெய்யருள் கூடுங்காலம் சமீபிக்கச் சிலநாள் திருப்புகலூரிலே தங்கியிருந்தார். பொருந்திய தன் அந்தக்கரணங்களில் உண்டான தலைப்பாட்டினாலே 'தன் அடியனாகிய என்னைப் புகலூர்ப்பெருமான் இனித் தன்சேவடிக்கீழ் வைத்துக்கொள்வர்' என்று மூன்று

ளர்களின் முயற்சியினால் பலதிருவிருத்தங்களைப் பாடி
னர். பூமி முதலிய பல உலகங்களும் துதிக்கும்படி
ல்லைபெற்ற 'புண்ணியாவுன்னடிக்கேபோதுகின்றேன்'
என்னும் திருத்தாண்டகத்தை பாடி,

## திருப்புகலூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோ
எம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லாற்
கண்ணிலேன்மற்றோர்களைகணில்லேன்
கழலடியேகைதொழுதுகாணினல்லா
லொண்ணுளேயொன்பதுவாசல்வைத்தா
யொக்கவடைக்கும்போதுணரமாட்டேன்
புண்ணியாவுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

ஒருவனையுமல்லாதுணராதுள்ள
முணர்ச்சித்தமொற்றத்துள்ளேநின்ற
விருவரையுமூவரையுமென்மேலேவி
யில்லாதரவறுத்தாய்க்கில்லேனேலக்
கருவரைசூழ்கானலிலங்கைவேந்தன்
கடுந்தேர்மீதோடாமைக்காலாற்செற்ற
பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

திருச்சிற்றம்பலம்.

யாவராலும் எய்தற்கரிய சிவானந்த ஞானமே உருவாகிப் பெருமானுடைய சேவடி நிழலை அப்பர் அடைந்தருளினார். இங்ஙனம் அவர் சிவனடிகலந்தருளிய சித்திரைச் சதயமாகிய திருநாளிலே தேவர்கள்

பூமிநிறைய பூமாரி பொழிந்தார்கள். தேவதுந்துபிகளைந்தும் முழங்கின. இங்கேயுள்ள எல்லா யோனிபேதங்களும் தத்தமுள்ளே பெருமகிழ்ச்சி நிறைந்திருந்தன.

திருநாவுக்கரசரானவர் மேற்சொல்லிய சரித்திரத்தாலே திருஞானசம்பந்தர் காலத்திலே யிருந்தவர் என்பது யாவரும் அறியலாம். திருஞான சம்பந்தர் பல பிரபல ஆதாரங்களால் கி. பி. 610 - ல் இருந்தவரென்று இப்போது நிச்சயிக்கப்பட் டிருக்கின்றது. ஆகவே நமது திருநாவுக்கரசரும் இற்றைக்குஏறக்குறைய 1289 - வருடங்கட்கு முன்னிருந்தார் என்று தெளிவாகின்றது.

முற்றிற்று.